www.tamilarangam.net

# எக்ஸில்

Exil

JULY - AUGUST, 1998



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

என்னிடம் எதைக் கேட்கிறாய் இன்னும்?

கணங்களின் இடுக்கில்
எரிந்து
சாம்பலாகிக் கொண்டிருக்கிறேன்.

கருக்குவது நான்தான்.

காற்றின் எதிர்த்திசையில்
இழுபட,
அடிபட்டு
நார்நாராய்க் கிழிகிறது காலம்.

நிமிர்த்திப் பிடிக்க,
எடுக்கும் வாந்திகளில் எல்லாம்
சிந்திக் கொண்டிருக்கிறது உடல்.

உரியவர்கள் பொறுக்கிக்கொள்கிறார்கள்.

பிணங்களின் நடுவே
ஒருவன் ஒழிந்து கொள்கிறான்
விடு.

சூரியனை, கடல் அலையை, சந்திரனை, பூக்களை
எப்போதாவது பாடுவான் அவன்.

உனக்காக.

கற்சுறா

29 03 1998

முன் அட்டைப் படம்:
**மாத்வி பரேக்**
சூரியன் (கன்வஸ், தைல வர்ணம்-100 X 100cm)

'நன்றி' Expressions & Evocations
Contemporary Women Artists of India
Edited by Gayatri Sinha

# நீர்த்துளிபோல்



வாழ்க்கையில் நான் என்ன சாதித்தேன்?
பள்ளிப் பிராயத்திலே துள்ளி விளையாடிய நான்
ஏன் இந்த இளமையில்
அடிவைத்த நாள் முதலாய்
சோகத்தில் துவண்டு விட்டேன்?...

விதி என்பது இதைத்தானோ?
நான் -
கண்ணீர் விடவா பிறந்தேன்?
சோகம்தான் வாழ்க்கையென்றால்
மீட்சி என்பது...?

நான் மட்டும்தான்
கண்ணீர் விடுகின்றேனா
இல்லை... இல்லை...
யன்னல்
கண்ணாடியும் அல்லவா
கண்ணீர் விடுகிறது
ஏய்! உனக்கும் தான்
என்ன சோகம்?

ஏன் என்னை
ஏளனமாகப் பார்க்கிறாய்
நீ சிந்தியது கண்ணீரில்லையா?

காற்றெறிந்த நீர்த்துளிக்குள்
பூத்திருப்பதென்ன சோகமா
புன்னகையா? புரிகிறது

காற்றே-
கண்ணாடியின் ஈரம்
காய்வதுபோல் - என்
சோகமும் தீர்ந்துவிடும்
என்கிறாயா?

தேவசாந்தி

www.tamilarangam.net

# எக்ஸில்

Exil 2



Vol. I No.2
JULY, AUGUST 1998


- கவிதை - கற்சுறா........ 2
- நீர்த்துளிபோல் - தேவசாந்தி........ 2
- கவனி........ 4
- எட்டாமற்போன எனது... திருமாவளவன்........ 12
- ஆந்ரே ஜீத் - வாசுதேவன்........ 13
- ஓவியம் - கொ. ரொ. கொன்ஸ்ரன்ரைன்........ 19
- சுரண்டலின் கொடுக்குகள் - தேவா........ 20
- எமது கலை/விமர்சன மரபு மீது... சிவலோகன்........ 25
- நான் காணும் நனவுகள் இளைய அப்துல்லாஹ்........ 26
- மதிப்பு மறுப்பறிக்கை - சுகன்........ 27
- கண்ணோடு காண்பதெல்லாம் தலைவா அர்விந் அப்பாதுரை........ 31
- இன்னும் எஞ்சியுள்ள... கௌரிமனோகரன்........ 35
- பள்ளி எழுமின்! பள்ளி எழுமின்! இரா. றஜீன்குமார்........ 36
- என்ன வரம் தந்தீர் பரம்பொருளே மரங்கொத்தி........ 37
- அலுக்கு - பாப்லோ அறிவுக்குயில்........ 39
- இடம் - ஜெயந்தீஸன்........ 43
- The Exile (மொ.பெ.) - சேனன்........ 44
- கொந்துதல் - மணிவண்ணன்........ 49
- மினுங்கு - அம்பை ........ 50
- கடவுள் வியாபாரம் - சுதர்சன்........ 52
- கணிதம் ஒன்று காதல் இரண்டு அர்விந் அப்பாதுரை........ 53
- கவிதை - தேவிகணேசன்........ 54
- சுகனிடமிருந்து... - சுகன்........ 55
- பாதுகாப்பு முல்லைதரன் (இலங்கை)........ 55
- இலக்கியச்சந்திப்பு........ 56
- ஓவியம் - Bosch........ 58
- கேள் - சேரன்........ 59


தொடர்புகளுக்கு:

EXIL
chez R. INPAVALLI
94, Rue de Lachapelle
75018 PARIS
FRANCE.

N° d'enreg. : 13022670



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## கூவல்

இதழ் தரமானதாய்பாராட்டத்தக்கதாக இருக்கிறது. இதழின் பெயரில் ஆங்கிலவாடைதான் எனக்கு உடன்பாடில்லை. தமிழில் பெயர் வைத்திருக்கலாம். ஆயினும் உள் கட்டுரைகள், சிறுகதைகள் அற்புதம். சமீபத்தில் இப்படி ஒரு காத்திரமான இதழ் நான் பார்க்கவில்லை...

**மாத்தளை சோமு**
அவுஸ்திரேலியா

*எக்ஸில்* சஞ்சிகையை கையில் எடுத்ததும் 'ஜீன்ஸ்' 'ஜெண்டில்மன்' படத் தலைப்புகள்தான் ஞாபகம் வந்தது. உண்மையிலேயே எக்ஸிலுக்கான அர்த்தம் எனக்குத் தெரியவில்லை. நான் பிரெஞ்சு, ஆங்கிலமொழி வல்லுநன் இல்லை. இது ஆங்கிலச் சொல்லா பிரெஞ்சுச் சொல்லா என்பது கூடத் தெரியவில்லை. அகராதியைத் தேடிக் கொண்டிருக்கின்றேன். ஆனால் சஞ்சிகை அமைப்பிலும் உள்ளீட்டிலும் மெருகும் கனதியும் கொண்டது. கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், செவ்வி என உள்ளடக்கங்கள். முதலில் கட்டுரைகளை எடுத்துக் கொள்கின்றேன்.

1. 'வருணாச்சிரமத்திலிருந்து வட்டுக்கோட்டை வரை' எனும் கட்டுரையில் **எம்.ஆர்.ஸ்டாலின்** எரியும் நடப்புப் பிரச்சனையை பார்வைக்குள்ளாக்கியுள்ளார். அக்கட்டுரையில் நான் முரண்படும் இடங்களில் என் கருத்தைக் கூறுதல் நலம் என எண்ணுகின்றேன். வர்ணாச்சிரம தர்மமும் சாதியும் ஒன்றா என்றால், இல்லை. இரண்டும் வேறுவேறானது. இரண்டையும் ஒரு ஒருங்கிணைப்பிற்குள் கொண்டுவர பார்ப்பனியம் தன்னாலான எல்லா நடவடிக்கையையும் எடுத்தது.

மதகுருமார், அரசர், வணிகர், தொழிலாளர் என்ற பிரிவு வளர்ச்சியடைந்த எந்த சமூகத்திற்கும் பொதுவானது. இன்னும் குறிப்பாகச் சொன்னால் கி.மு. 2000 ஆண்டளவில் ஆரிய வருகையின்போது இருந்த சிந்துவெளி சமூக மக்களிடம் இவை இருந்தன. தெற்கு நோக்கிய பார்ப்பனிய வருகையின் முன்பே தென்னிந்தியாவிலும் அது தோன்றிவிட்டது. பார்ப்பனியம் இவைகளை நிறுவனப்படுத்தியது. ஏற்றத் தாழ்வுகளைக் கற்பித்தது. அகமணச் சடங்கு முறையைக் கொண்டு வந்தது. சாதி என்பது அகமணத் தடையோடு உருவான ஒன்றுதான். அசோகனும், நவநந்தர்களும், இராஜராஜசோழனும் பார்ப்பனிய நோக்கில் சூத்திர அரசர்களே.

வர்ணத்தின் தோற்றத்தை சரியாக அடையாளம் கண்டுள்ளார் கட்டுரையாளர். ஆதிக்கத்தைக் கைக்கொண்ட ஆரியர்கள் மதகுருமார்களாக, அரசர்களாக தாங்களே தொடர்ந்து இருக்க சமூகத்தை மறுஉருவாக்கம் செய்துகொண்டனர். வணிகத்தையும், வேளாண்மையையும் கூட ஆரம்பகால வேதங்கள் பெரிதாக அங்கீகரிக்கவில்லை. பௌத்தமும் சமணமும் கூட நால்வர்ண அமைப்பை ஏற்கத்தான் செய்தன. சாதியத்தை மட்டுமே, பிறப்பு அடிப்படையிலான ஏற்றத்தாழ்வையே அவை எதிர்த்தன.

தமிழக வரலாற்றில் சங்ககாலம் முக்கிய காலகட்டம். இதன் கால அளவு இன்னும் துல்லியமாக நிறுவப்படவில்லை. ஆனால் இரும்பு உலோகம் தமிழகத்தில் பரவியபின்பு தோன்றிய காலமே அதன் விளைவே சங்ககால நாகரீகம் என்பர்.

சங்க இலக்கியங்கள் ஒரே காலத்தில் எழுதப்பட்டவையல்ல. கிட்டத்தட்ட 700 ஆண்டு கால விரிந்த பரப்பின் அறுவடை அது. சங்க காலத்தில் நிலப்பிரபுத்துவம் இறுக்கமடையவில்லை. எனினும் அதற்கான ஆரம்பம் தொடங்கி விட்டது. அரசிற்குரிய பண்புகள் தமிழக வரலாற்றில் முல்லை நிலத்திலேயே தோன்றி விட்டது. கோன் என்பவன் அரச பண்பு உடையவனே.

சங்ககாலத்தில் உண்மையில் சிறு'நாடு'கள் அழிந்து பெருநாடுகளின் தோற்றத்திற்காக போராட்டம் நடந்த காலமே. கி.மு. 3ம் நூற்றாண்டு அசோகனின் கல்வெட்டில் சேர, சோழ, பாண்டிய, சத்திரபுத்திர அரசுகள்பற்றி தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கி.பி.6ம் நூற்றாண்டிலேயே சமண, பௌத்த மதங்களுக்கும் சைவ, வைணவ மதங்களுக்குமிடையில் மோதல்கள் தொடங்கிவிட்டது. பல்லவ காலத்தின் (கி.பி.3-கி.பி.9வரை) இடைப்பகுதியிலேயே சைவ, வைணவ ஆதிக்கம் தொடங்கிவிட்டது. பின்பு ஆதிசங்கரர் (கி.பி8ம்நூற்றாண்டில்) சமணபௌத்த தத்துவவியலில் பார்ப்பனியத்திற்குச் சேதம் விளைவிக்காத கருத்துகளை உள்ளிளுத்துக் கொண்டு அத்வைதத்தை உருவாக்கினார். அதன் பின்பே சமணபௌத்தம் முக்கியத்துவம் இழந்தது. சைவம் வேளாண்மையை பின்புலமாகவும், வைணவம் கால்நடைவளர்ப்புக் கைத்தொழிலாளரை பின்புலமாகவும் கொண்டு செயற்பட்டது. ஆனால் பொது எதிரிக்கு எதிராக ஒன்றுபட இவை தயாராகவே இருந்தன. சோழர் காலத்தில் அத்வைதத்திலிருந்து சைவசித்தாந்தம் தனித்த தத்துவப் பிரிவாக வளர்ச்சியடைந்தது.

ஐரோப்பிய வருகையில் போர்த்துக்கேயரின் வருகை ஈழத்தில் முக்கியமானதாகவே நான் கருது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கின்றேன். போர்த்துக்கேயர் கோயில்களை உடைத்தது வெறும் கோயில் இடிப்போ மதஎதிர்ப்போ மட்டுமல்ல. கோயில்களினூடு செயற்பட்டு வந்த கிராம ஆதிக்கத்தை உடைக்கவும்தான். கோயில்கள் வெறும் வழிபாட்டுத் தலங்களாக மாத்திரம் அப்போது இயங்கவில்லை. அவை ஆட்சி அதிகாரத்தின் வலைப்பின்னல் கணுக்கள். ஆகவேதான் அவர்கள் கோயிலை உடைத்திருக்க வேண்டும். இந்த உடைப்பு சாதியக் கட்டமைப்பில் உடைவை ஏற்படுத்தியது. மேலும் அவர்கள் கொண்டுவந்த நில விற்பனைச் சட்டம் - எவரும் எந்த இடத்திலும் நிலம் வாங்கலாம் என்ற சட்டம் ஈழச்சமூகத்தில் குறிப்பிட்ட விளைவை ஏற்படுத்தியது. நடுத்தர, பொருளாதார வசதிகள் கொண்ட சாதிகளை இடம்பெயர வைத்தது இதுதான்.

ஒல்லாந்தர் தமது ஆட்சியின் இடைக்காலத்தில் கோயில் கட்டுவதற்கு அனுமதி வழங்கினார்கள். அவைகளை வழிபாட்டுத் தலங்களாக மட்டும் இருக்க பார்த்துக் கொண்டார்கள்.

ஆங்கிலேயர்களே யாழ்ப்பாணத்தில் சாதித்துவ இறுக்கத்தை பலப்படுத்த உதவியவர்கள். இவர்கள் பெருமளவு யாழ்ப்பாண சைவவேளாள சக்திகளோடு சமரசம் செய்து கொண்டார்கள். (முதலாளித்துவ வளர்ச்சித் தேவைகள் அதையும் மீறியது) இந்தப் பணியை தமது சிரம்மீது கொண்டு செய்து முடித்தவரே ஆறுமுகநாவலர்.

கட்டுரையின் பின் பகுதியில் தமிழ்த் தேசிய உருவாக்கம் பற்றி கருத்துச் சொல்ல வந்த எம்.ஆர். ஸ்டாலின் பேரினவாதத்தின் ஒடுக்கு முறையை கவனத்திற்கு எடுக்கத் தவறுகின்றார். தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமை கோரலை நாம் நியாயமில்லை என்று கூறமுடியுமா? அது இன்னொரு தேசிய இனத்தை ஒடுக்கும் போது மட்டும் அதனை எதிர்க்க முடியும்.

தரப்படுத்தல்முறை, கல்வி வளர்ச்சியடைந்த, கிட்டத்தட்ட 150 வருட கல்லூரிக் கல்விவரலாறு கொண்ட வேளாளரை மட்டும் பாதிக்கவில்லை. குறுகியகால கல்விவளர்ச்சியைக் கொண்ட கிராமப்புற, நடுத்தர, கீழ்ப்பட்ட மக்களையும் அது பாதித்தது என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் தங்கள் சாதித் தொழில்களில் இருந்து தப்ப கல்வியையே நம்பியிருந்தனர். (யாழ் மாவட்டத்தில் 60% மக்கள் இவர்கள்) மாவட்டரீதியாக தரப்படுத்தலை நான் எதிர்க்கவில்லை. அதற்கு ஒரு காலகட்டம் குறிப்பிட்டிருக்கவேண்டும். பின்தங்கிய மாவட்ட மாணவர்களும் யாழ் பின்தங்கிய சமூக மாணவர்களும் கவனத்திற்கு எடுக்கப்பட்டிருக்க வேண்டும். பின்தங்கிய மாவட்ட மாணவர்களின் கல்வித்தரத்தை, கல்லூரி வசதிகளை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இதனை அரசாங்கம் செய்யவில்லை. செய்யாது என்பது வேறுவிடயம்.

மேலும் சாதிப்பிரச்சனையை விடுதலைக் கூட்டணியோ விடுதலை இயக்கங்களோ தீர்க்கும் என்று யாரும் கனவு காணத்தேவையில்லை. ஆனால் விடுதலைப் போராட்டகாலத்தில் சாதிய இறுக்கங்களில் சில தளர்வுகள் நடந்துள்ளன. உட்சாதிக் குழுமங்கள் ஒன்றிணையும் சூழ்நிலைகள் தோன்றியுள்ளன. இதற்குப் பல காரணங்கள். இது தனித்து ஆய்வுசெய்யப்பட வேண்டும். வட்டுக்கோட்டையில் நடந்த சாதிப் பிரச்சனை இன்று நேற்று தொடங்கியதல்ல. அது சமூக வரலாற்றுப் பின்புலம் கொண்டது. (இது பற்றிய கட்டுரை ஒன்றை எக்ஸிலுக்கு எழுத உள்ளேன்)

2. **எஸ். வி. ர.்.பேல்** இன் 'விளக்கமளிப்புக் கோட்பாட்டு அணுகுமுறைகளை...' என்ற கட்டுரை நல்ல தேடல். எனக்கென்னவோ இந்த கோட்பாடுகளின் சிலகூறுகள் மார்க்சிசத்திற்கு உரமாகும் என எண்ணத் தோன்றுகிறது.

3. 'புகலிட இலக்கிய விமர்சனம்' பற்றி கலைச்செல்வனின் கட்டுரை நியாயமான பல கேள்விகளை எழுப்புகின்றது. இதனை ஒட்டி ஆரோக்கியமான விவாதம் எழுவது நல்லது.

4. 'தமிழ் இலக்கிய சூழலில் கலை இயக்கங்கள்' எனும் கட்டுரையை எழுதவந்த **அரவிந் அப்பாத்துரை** ஆரம்பத்தில் இருக்கும் பார்வை இந்தியாவிற்குள் நுழைந்ததும் இந்திய காற்றிலும் பரவியிருக்கும் புனித மாயை இவரையும் பிடித்துவிட்டது. கலைவடிவங்களையோ,கோட்பாடுகளையோ வேதங்களோடு இணைத்துக் காப்பாற்றவில்லை இணைந்து கெடுத்தன என்பதே உண்மை. இவை பற்றி இங்கு விரிவாக எழுதலாம். விமர்சனம் நீண்டுவிடுமோ என அச்சம் உள்ளது.

ஆங்கிலேய ஆட்சி இந்தியாவிற்கு வந்தபின் எங்கே இந்தியாவில் கலை அறிவுஜீவிகள் தோன்றினார்கள் அப்படித்தோன்றினாலும் இந்துத்துவ, காலனித்துவ பிடியிலிருந்து எங்கே விலகினார்கள். இந்தியகலை இந்துசமயத்தின் கனி என்று சொல்லி இந்தியகலையை கொச்சைப் படுத்த வேண்டாம். இந்து என்ற பெயரே ஐரோப்பியர் தந்ததுதான். தயவு செய்து இந்துத்துவ வட்டத்திற்கு வெளியில் வந்து நின்று சிந்தித்து எழுதும்படி வேண்டிக் கொள்கின்றேன்.

ஆதிக்க சக்திகள் நுண்கலைகளை கோயிலோடு இணைத்தது உண்மைதான். ஆனால் அவை மக்களிடமும் தொடர்ந்து இருந்தன. கிராமியக் கலைகள், பொம்மைகள், கம்பளங்கள், சேலைகள், கிராமியக் கலைப்பொருட்கள், கிராமியத் தெய்வங்கள் போன்றவற்றில் இந்தக் கலைகள் வாழ்ந்தன. வாழ்கின்றன.

ஐரோப்பாவில் மதத்தில் இருந்து தத்துவம் பிரிந்த பிறகுதான் கலைஇயக்கங்கள் தோற்றம் பெற்றன. இந்தியாவில் இப்போது என்ன நிலை மதத்திலிருந்து தத்துவம் பிரிந்துவிட்டதா?

5. 'தென்னாசிய சமூகத்தில் பெண்ணிலைவாதம்' எனும் **லக்ஷ்மி**யின் மொழி பெயர்ப்பு நல்ல பங்களிப்பு. இன்னும் இது போன்ற பல்துறைகளிலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லக்ஷ்மியின் பங்களிப்புத் தொடரவேண்டும்.

6. 'கூட்டலும் கழித்தலும்' பற்றிய எனது கருத்து. கிண்டல் என்பது இரண்டு பக்க கூர்மையுள்ள கத்தி.

கவிதைகளில் **சேரனின்** கவிதை நெஞ்சைத் தொட்டது. சிறுகதைகளில் 'சலிப்பு'. **கலா மோகன்** நீண்ட நாளைக்குப்பின்பு கதையில் தெரிந்தார்.

**சக்கரவர்த்தி**யின் சிறுகதை நல்ல கதை. 'ழ'கரத்தில் இவருடைய சிறுகதை ஒன்று வாசித்திருக்கிறேன் அருமையான கதை. நல்ல வார்ப்பு கைவருகின்றது.

**சிவலிங்கம் சிவபாலன்** இன்னும் வார்ப்பும் செதுக்கல்களும் தேவை. அவரின் ஆரம்பகாலக் கதைகளை விட வளர்ச்சி தெரிகின்றது.

மொத்தத்தில் 'எக்ஸில்' ஆரம்பம் நன்று. மேலும் வளரவும் செயல்படவும் வேண்டும்.

**ச. தில்லைநடேசன்**
பிரான்ஸ்

■"அகஸ்தியர் மார்க்சிய சிந்தனைகளின் போக்கில் சிறுகதைகள் எழுதியுள்ளார்" எனச் சொல்லி மார்க்சியத்தை கொச்சைப்படுத்த வேண்டாம் என்று உரிமையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**ஷோபாசக்தி**
அகஸ்தியர் 14.12.97 நினைவஞ்சலிக் கூட்டத்தில் (பாரிஸ்)

❑ **ஹீ...! ஹீ...! ஹீ...!** ***உரிமை...?***
எக்ஸில் மே- ஜுன் 1998

இப்ப என்ன பிரச்சனை என்றால், அகஸ்தியர் ஒரு ஸ்டாலினிச - தேசியவாதியாகவே தனது அரசியலை நடாத்தி அவரது இறுதி நிமிடங்கள்வரைக்கும் பெரிஸ்த்ரோய்காவை பார்த்து பார்த்து பூரித்ததையும், கொபர்சேவை கொண்டாடியதையும், இந்த மார்க்சிய விரோதப் போக்குகள் அகஸ்தியரின் எழுத்துக்களில் பட்டுத் தெறித்ததையும் உன்னிப்பாக அகஸ்தியரின் எழுத்துக்களைக் கட்டுடைப்புச் செய்த தோழியரும் தோழரும் கண்டுகொள்ளலாம்.

ஆனால் தோழியரும், தோழர்களும் கட்டுடைப்புச் செய்து போட்டு 'கம்' மென்று கிடக்கலாமே தவிர ஒரு அகஸ்தியரை, ஒரு டொமினிக் ஜீவாவை, ஒரு ஜெயகாந்தனை, ஒரு செ.யோகநாதனை கேள்விக்குள்ளாக்க முயன்றால் சனாதன மார்க்சியர்களிடமிருந்தும், இலக்கிய புனிதங்களை கட்டி மேய்ப்பவர்களிடமிருந்தும் சந்திப்புக்கு சந்திப்பு, கூட்டத்திற்கு கூட்டம், பத்திரிகைக்கு பத்திரிகை மூர்க்கமான தாக்குதல்களுக்கு மூஞ்சி கொடுக்க வேண்டியுள்ளது.

அகஸ்தியர் கொம்பனித் தெருவில் ஊர்வலம் போகையில் முதலாளிகளால் தாக்கப்பட்டதுவும், டொமினிக்ஜீவா கைக்காசைப் போட்டு கஸ்ரப்பட்டு 'மல்லிகை'யை மலர வைப்பதுவும் ஜெயகாந்தன் சினிமா வியாபாரிகளோடு சிக்கெடுத்து 'உன்னைப் போல் ஒருவனை' வெள்ளித்திரையில் மின்ன விட்டதும், செ. யோகநாதன் தற்காலிகமாக தமிழ்நாட்டுக்குப் புலம் பெயர்ந்து 'இரவல் தாய்நாடு' போட்டதும் வேலைக்கள்ளருக்கு பிள்ளைச் சாட்டாம் கோட்பாட்டின் பிரகாரம் அவர்களின் அற்புத அர்ப்பணிப்புகளாக ஒன்று, பத்து கும்பல்களால் தூக்கி நிமிர்த்தப்பட்டு இந்த எழுத்தாளர்களின் மக்கள் விரோத அரசியலிலிருந்தும், ஸ்டாலினிசத்தின் பேராலும், கலாச்சாரப் புரட்சியின் பேராலும் கொன்று புதைக்கப்பட்ட கலைஞர்களின் , கம்யூனிஸ்டுக்களின், ஒழுங்க விழ்ப்புவாதிகளின், மக்களின் இரத்தப் பழியிலிருந்தும் இந்த எழுத்தாளர்கள் அடிக்கடி ஆனால் **தற்காலிகமாக** தப்ப வைக்கப்படுகிறார்கள்.

அவர்களின் மேற்படி வகையறா அர்ப்பணிப்புகளின் பொருட்டு, ஸ்டாலினிச யதார்த்தவாதமோ என்ன சனியனோ சட்டங்களைப் போட்டுக் கொண்டு அவர்கள் எழுதித்தள்ளிய எழுத்துகளில் தலித்துகளையும், பெண்களையும் ஒடுக்கப்பட்டவர்களையும் கிரெம்ளினுக்கு ஜே! சீனாவுக்கு ஜிந்தாபாத்!! போடவைத்த வரலாற்று கிரிமினல் குற்றங்களையும் புனிதமோ புனிதங்களாக்கி அவர்களைப் புகழ மட்டுமே வாய்திறக்கச் சொல்லி எங்களுக்கு கட்டளையும் இடுகிறார்கள்.

ஆனால் இந்த பிஸினசை கனகாலத்திற்கு இவர்களால் கொண்டோட முடியாது. காலாதி காலமாய் ஈழத்துச் சூழலில் - ஏன் சர்வதேச சூழலிலும் கூட - மார்க்சிய கலாச்சாரம் திட்டமிட்டு அழிக்கப்பட்டு ஸ்ராலினிச-மாவோயிஸ தேசியவாத கருத்தாடல்களுக்குள் கட்டி வைக்கப்பட்டிருந்த எங்களுக்கு சோவியத்யூனியனின் துன்பகரமான உடைவைத் தொடர்ந்து அதுவரை அறையில் ஆடிவந்த ஸ்டாலினிஸ்டுகளும், மாவோயிஸ்டுகளும், சமூகஜனநாயகவாதிகளும், பப்லோயிஸ்டுகளும் அம்பலத்தில் ஆடவந்து ஒரு ஓவர் நைற்றுக்குள் ஒரு எம்பு எம்பி கரணமடித்து, மரணத்தின் விளிம்பில் கிடக்கும் முதலாளித்துவ அமைப்பின் சந்தைப் பொருளாதாரமே சுதியானது என்று புலம்புவது புலப்பவும், அயோத்திக்கு காலடி எடுத்தது எடுக்கவும், பாப்பரசனின் காலில் குப்புற விழுந்தது விழவும், மூன்றாம் அகிலத்தின் கலைப்பையும், மொஸ்கோ வழக்குகளையும், சீனகம்யுனிஸ்ட் கட்சியை சியாங்கேசேக்குக்கு செருப்புத் தூக்க பணித்த கதையையும் நியாயப் படுத்தி பத்திரிகையும் நடத்திக் கொண்டு ஸ்டாலின் தொடங்கி பிடல்கஸ்ரோ ஊடாக பொல்பொட் வரையும் சிவப்புத்தொப்பி போட்ட எந்த ராசாவை எங்கெங்கு காணினும் இடுப்பை வளைத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிவப்பு சலாம் போடுபவர் போடவும், எங்களுக்கு ஒருக்கால் ஓடிவெளித்தது. அதாகப்பட்டது நிறுவப்பட்ட அனைத்து புனிதங்களையும், நடாத்தப்பட்ட அனைத்து அற்புதங்களையும் கேள்விக்குள்ளாக்குக.

பாரிஸில் நடந்த கூட்டத்தில் அகஸ்தியர் என்னால் கேள்விக்குள்ளாக்கப்பட்டார். தொடர்ந்து மே 31 பிராங்போட்டில் நடந்த இலக்கியச்சந்திப்பில் டொமினிக் ஜீவாவின் சிறு கதைகளை மதிப்பீடு செய்த இளைய அப்துல்லாஹ்விடம் புலம்பெயர் தமிழரின் விமர்சன மரபான பப்பாவில் ஏற்றுதலைத் தவிர்த்து ஜீவாவின் எழுத்துக்களை கேள்விக்கு உட்படுத்தும் சாத்தியங்கள் குறித்து யோசிக்குமாறு மீண்டும் ஒரு முறை உரிமையுடன் கோரினேன்.

இதில் 'எக்ஸில்'ன் கேள்வியும் கேலியும் எதுவெனில் "இந்த உரிமையை உனக்கு வழங்கியவர் யார்?" இதை ஒரு கவனமான வாசிப்பில் என்னால் இப்படி விளங்கிக்கொள்ள முடிகிறது.

★ ஒரு பல்கலைக்கழக பேராசிரியருக்கு அல்லது குறைந்த பட்சம் மார்க்சியத்தை ஆங்கிலத்தில் புரிந்து கொண்டவருக்கே 'மார்க்சியம்' பேச உரிமை உள்ளது. ...ஹீ 1

★ ஏதாவதொரு அதிகாரம் மையப்படுத்தப்பட்ட கட்சியின், நிறுவனத்தின் உறுப்பினர்க்கே 'மார்க்சியம்' பேச உரிமை உள்ளது. ...ஹீ 11

★ தலையில் சிவப்பு றிபணும் கையில் றஷ்சியத் தயாரிப்புத் துப்பாக்கியும் உள்ள ஒருவருக்கே 'மார்க்சியம்' பேச உரிமை உள்ளது. ...ஹீ 111

ஈழத்துச் சூழலில் மேற்படி தகுதிகளில் ஏதாவது ஒன்றுள்ள ஒருவருக்குத்தான் 'மார்க்சியம்' பேசுவதற்கான உரிமை பத்திரிகைகளாலும், கட்சிகளாலும், இயக்கங்களாலும், அரச பயங்கரவாதிகளாலும் இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

மேற்சொன்ன 'தகுதிகள்' அற்ற ஒரு தோழியோ, தோழனோ சுயாதீனமாக சிந்திக்க முயன்றபோது, அதிகாரம் கீழிருந்து மேலே செலுத்தப்படும் வடிவத்தை நோக்கி நகர்ந்தபோது, முதலாளித்துவ 'மொடல்' ஸ்தாபனத்தை நிராகரித்தபோது, தனிமைப்படுத்தப்பட்டதும், மின்கம்பங்களில் தொங்கியதும், இந்தியக்கரைகளில் 'டம்ப்' பண்ணப்பட்டதும், டயர்களில் எரித்ததுமே ஈழத்தின் இடதுசாரி வரலாறாகிறது.

என்ன வெள்ளிடி பாருங்கள்... வரலாறு, முன்நோக்கி நகரும் எனக் கேள்விப்பட்டுள்ளோம். ஆனால் இம்முறை வரலாறு ஆடாமல், நோகாமல் ஈழத்தில் இருந்து பெயர்க்கப்பட்டு பாரிஸில் இறக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த வரலாற்று சிறப்பியல்பின் தொடர்ச்சியாக ஹீ 1, ஹீ 11, ஹீ111 தகுதிகளும் அற்றவர்கள் மார்க்சியத்துக்காக உரிமையுடன் போரிடும்போது அவர்களது உரிமை நிராகரிக்கப்படுகிறது. இப்போது மார்க்சியத்துக்காக - ட்ரொஸ்கிஸத்துக்காக போரிடும் எனது உரிமை 'எக்ஸிலா'ல் கேள்விக்குள்ளாகிறது. அதற்கு 'எக்ஸில்'இற்கு எல்லாவித உரிமையும் உள்ளது. அதே போன்று எனது உரிமைக்கான உறுதிக்கட்டுகளை சமர்ப்பித்து வழக்காட வேண்டிய கட்டாயமும் எனக்குள்ளது.

'எக்ஸில்' தோழர்மீர்/தோழியர்மீர், பொதுவுடமைக் கோட்பாட்டை உருவாக்கி, வளர்த்தெடுத்த கார்ல் மார்க்சும், ஏங்கல்சும், ரோசா லுக்சம் பேர்க்கும், லெனினும், ட்ரொஸ்கியும் இன்னும் இலட்சோப இலட்ச தோழியரும், தோழர்களும் மார்க்சியத்தை தங்கள் பிள்ளைகுட்டிகளுக்கு 'கொப்பிறைற்' பண்ணிவைக்கவில்லை. மார்க்சியம் சர்வதேச உழைப்புப் படையின் ஒவ்வொரு துருப்புக்கும் சொந்தமானது. ஒடுக்கப்படும் ஒவ்வொரு மனுசிக்கும், மனுசனுக்கும் சொந்தமானது. நிலப்பிரபுத்துவ - முதலாளித்துவ - சாதிய - ஆணாதிக்க சமூகக் கட்டுமானத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்யும் ஒவ்வொரு தனிமனுசிக்கும், தனிமனிதனுக்கும் உரித்தானது.

ஆதலால் **ஷோபாசக்தி** என்ற தனிமனிதனுக்கான மார்க்சியத்துக்காக போரிடும் உரிமையை எந்த பரமபிதாவும் வழங்கவேண்டிய அவசியமுமில்லை, அந்த உரிமையை எந்த பிதாமகராலும் நிராகரிக்கவும் முடிவதில்லை என்பதையே மீண்டும் மீண்டும் உரிமையுடன் சொல்வேன்.

**ஷோபாசக்தி**
பாரிஸ்

ΩΩΩΩΩ

எக்ஸிலுக்கு,

சிறுகதை தவிர்ந்த ஏனைய - (நீண்டகால) இலக்கிய இடைவெளியை நிரப்பும் என்று இப்போதைக்கு சிறு நம்பிக்கை கொள்ளலாம். எனினும் இதுவரை காலமும் வெளிவந்த, வந்து கொண்டிருக்கும் சிறு சஞ்சிகைகளில் இருந்து இது எதுவகையிலும் மாறுபட்டிருப்பதாகத் தோன்றவில்லை. "எதையும் எழுதலாம்" என்பது மிகுந்த ஜனநாயகப்பண்பு கொண்டதாகத் தெரிவதோடு இக்கால சூழலில் குறித்த எப்பொருளும் முன்னுரிமை கொண்டாட முடியாதது இலக்கியத்தில் தனி அழகு.

அனைத்துப் பக்கங்களிலும் ஏதோ இருப்பினும் சில பக்கங்கள் எனக்குப் புரியவே இல்லை. எனக்குப் புரியாதது ஒன்றும் முக்கியத்துவம் இல்லாவிடினும், புரிவதற்கான முயற்சி என்பது முக்கியத்துவம் உடையது என்ற நம்பிக்கை யோடு.

விளக்கமளிப்புக்கோட்பாட்டு அணுகுமுறைகளை...? என்று ஒரு ஆகாயத் தலைப்பைப் போட்டு விளக்கமளித்திருப்பது என்னதான் சொன்னாலும் ஞாபகத்தில் நிற்க மறுக்கிறது.

அது என்ன கோட்பாடு என்றாவது சொல்லி இருந்தால் நான் அணுகுமுறைகளைக் கொஞ்ச மேனும் அண்மித்திருக்கலாமோ என்னவோ.

பனுவல்: அதை எழுத்துக்கள் அல்லது கருத்துக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கள் என்று எடுத்துக்கொள்ளலாமா?

பொதுவாக அண்மைய பனுவல்கள் (எழுத்துகள்)பற்றி ஒரு கருத்துநிலைக்கு வருகின்றாரா? அல்லது ஒன்றை எழுதுவதற்கு மேலதிக எழுத்துக்கள்-விளக்கங்கள் தேவையில்லை என்கிறாரா? அதாவது, சுருங்கச் சொன்னால் போதுமென்கிறாரா?

பல்வேறுபட்ட அறிவியல் அனுபவங்களைக் கொண்டவர்களுக்கு ஒரு பொதுமட்டத்தை எழுத்தர் எடுத்துக் கொள்வதை எப்படி கூடக் குறைய என்று சொல்லலாமோ தெரியாது. குறிப்பாக இதே கட்டுரையை வரைந்தவர் என்ன கருத்தை விளக்க முனைந்தாரோ நான் என்ன கருத்தை விளங்கினேனோ அது தெரியவில்லை. அக் கட்டுரை இந்த இரு விளக்கங்களுக்கும் அப்பால் வேறொரு விளக்கத்தையும் கொண்டிருப்பதற்குச் சாத்தியப்பாடு இருக்கிறது. சரியோ தப்போ நினைக்கிற விடயத்தை கொஞ்சமேனும் நாலுபேர் புரிந்து கொள்ளுமாறு எழுதவேண்டும். அதற்கு அவ்விடயத்தில் குறைந்த பட்சமான தெளிவு இருத்தல் போதுமானது. பனுவலின் முக்கியம் அதுதான் என்பது எனது அபிப்பிராயம்.

ஒருவேளை பனுவல் குறித்து இதை அவர் சொல்லவில்லை எனக் கொண்டால்... மதமும் மார்க்சியமும் அரசியலும் இன்ன பிறவும் பாதுகாப்புணர்வோடும், இருத்தல்வழிப்பட்டும் மரணபயத்தில் இருந்தும் தப்புவதற்கான பிராயச் சித்த வெளிப்பாடுகளாகக்கூட இருக்கலாம். O.K. சரி. அப்படிப் பார்த்தாலும் இன்றைக்கு நிலை பெற்றுவிட்ட மதமும் மார்க்சியமும் அரசியலும் இன்ன பிறவுக்கும் சார்பானதும் எதிரானதுமான எல்லா எழுத்துக்களும் இதே பாதுகாப்புணர்வு - மரணபயம் - இருத்தல் போன்ற எல்லாவற்றில் இருந்தும்தானே வருகிறது. நிலைபெற்றுவிட்டவற்றைப் பாதுகாப்பதுதான் பாதுகாப்பானது என்று எப்படி உறுதியாகச் சொல்லமுடியும். நம் சூழலில் கண்ணுக்கு முன்னால் உள்ள அனுபவங்களும் பார்வைகளும் எமக்குத் தெரியாமற்போக நாம் யேசுவையும் புத்தனையும் அதற்கும் முன்னே சோக்கிரட்டீஸையும் ஏன் 'சே'யையும் கொண்டு வந்து உதாரணம் காட்டுவது ஒரு பாதுகாப்புணர்வு என்ற ஓர் அர்த்தத்தில் புரிந்து கொள்ளலாம்தான். இதே அர்த்தப்பாதுகாப்புக்கு எதிரான எழுத்துக்களும் ஒவ்வொருவரதும் அவர்தம் சமூகத்தினதும் எதிர்காலத்தினதும் பாதுகாப்புணர்வின் வெளிப்பாடுதான் என ஏன் சொல்லமுடியாது. என்னவோ இருப்பதைக் காப்பதோ இல்லை உடைப்பதோ அடக்குமுறைகளையும் சர்வாதிகாரங்களையும் (மார்க்சிய சர்வாதிகாரிகள் உட்பட) முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கம் கொண்டதாக இருக்க வேண்டும் என்பது எனது வாதம். இந்த நோக்கமற்ற செயல்பாடு வெற்றுப்பேச்சுக்களைத்தான் பதிவு செய்யும்.

சஞ்சிகையின் முதற் கட்டுரையாக 'வர்ணாச்சிரமத்திலிருந்து வட்டுக்கோட்டை வரை' என்றகட்டுரை - நடைமுறை சார்ந்து எழும் அச்சுறுத்தலையும் அதன் ஆணிவேரையும் விதைகளையும் கூட எம் கைகளில் லாவகமாக வைத்து விடுகிறார் ஆசிரியர். வரலாறும் வாழ்வும் எல்லோருக்கும் தெரிந்து போனதுதான். எனினும் இருப்பைக் காப்பதும் உடைப்பதும் இதை வெளிப்படுத்துவதும் இலக்கியத்தில் முக்கியமானது. எல்லோர் கவனத்தையும் ஈர்க்க வல்ல வகையில் நமது சமூகத் தலைமைகளின்(?) "ஆழ்ந்த கவனங்களை"யும்(?) செயற்பாடுகளையும் மிகுந்த நிதான நோக்கோடு வெளிப்படுத்தியிருக்கிறார். வரலாற்றை வெளிப்படுத்துவதில் தனது புலமையைக் காட்டாமல் தற்கால நிலைமையின் ஜனநாயகமின்மையை கேள்விக்குட்படுத்தும் நேர்மையான நோக்கம் இக்கட்டுரையை ஒரு படி மேலே தூக்கி நிறுத்திவிடுகிறது.

பண்பாட்டு, கலாச்சார பழக்க வழக்கங்கள் எம் மூளையைச் சுற்றிக் கறள் மண்டி இறுகிப் போய்க் கிடப்பதாலோ என்னவோ எவ்வளவுதான் சாணை பிடித்தாலும் மொட்டைதான். யாழ்ப்பாணத்திலை எவடம்? என்ற கேள்வியை நானும், என்னை எத்தனையோ பேரும் எத்தனைதரம்தான் கேட்டிருப்பார்கள். அதுகுறித்து எதுவித பிரச்சனையும் இதுவரை இருந்ததில்லை. கட்டுரை என்னை எரித்துக் கரிக்கட்டையாக்கிவிட்டது. இனிமேற் பார்த்து எவனாவது கேட்கட்டும்...

என்னதான் இருந்தாலும், இந்த மரங்கள்மீது இவ்வளவு ஆழமாக அலகை வைக்க இந்த மரங்கொத்தி தேவைதான். ஆனால், தமிழ் நன்றாகப் பேசத் தெரிந்தவர்கள்தான் தமிழ்ப் படம் பார்க்கலாம் என்பதிலோ அல்லது முருங்கைக்காயை தமிழ்த் தேசிய மரக்கறியாக்குவதிலோ மரங்கொத்தி அலகை வைப்பதில் அவதானம் தேவை.

சலிப்பு - நீண்ட நாட்களுக்குப்பிறகு வாசித்த ஒரு கலைத்துவமான கதை. மிகுந்த செறிவோடும் அனுபவத்தோடும் தோய்ந்து மிதந்திருக்கிறார். வாசித்து முடித்தவுடன் தோய்ந்து துவட்டிய உற்சாகம் எழுகிறது.

"அவன்ரை தற்கொலைக்கான காரணங்களை நான் தேட வெளிக்கிடவில்லை. ஏனென்டா என்ரை தேடல்கள் ஊகிப்பாக மட்டுமே இருக்கும். ஊகிப்புகள் உண்மையாக இருக்கலாம் எண்டு அடிச்சுச் சொல்கிற துணிச்சல் என்னட்டை இல்லை."

எஸ். வி. ரபேல் சொல்வது போல் "இத்தள விரிவுகள் உருவாக்கிவிடும் பதில் இல்லாத, பதில் இருப்பதாக நினைத்துக் கொள்ளும், பதில் கைவசம் இருக்கும் எண்ணற்ற கேள்விகளை" கொண்டோர் இதை இன்னொரு தளத்திலும் புரிந்து கொள்ள உதவுகிறது.

சஞ்சிகையில் மிகமுக்கிய பிரதான விடயமாக அமைந்திருப்பது 'தென்னாசிய சமூகத்தில் பெண் நிலைவாதம்' - மொழிபெயர்ப்புக் கட்டுரை. நாங்கள் என்ன ஐரோப்பாவிலா இருக்கிறோம்? ஐரோப்பாவில் ஒரு தென்னாசியாவை நிறுவியிருக்கிறோம் என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதை வாசிக்கிறபோது புரிகிறது. இது தொடர்பான சில விஷயங்கள் ஆங்காங்கே ஏற்கனவே பதிவாகி இருந்தாலும் இதை வாசிக்கிற போது ஒரு தெளிந்த நேர்மையான மிக நிதானமான ஒரு தளவிரிவு பெண் நிலைவாதம் தொடர்பாகக் கிடைக்கின்றது. கட்டுரை தமிழிலேயே ஒரிஜினலாய் எழுதப்பட்டது போல் மொழிபெயர்ப்பு. அதனால் கூடிய பக்கங்களை எளிதாக எட்டிப் பிடிக்க முடிகிறது. எவ்வளவுதான் இலகுவாகப் புரியும்படி மிகுந்த ஆழமான விடயங்களை எழுதியிருந்தாலும் திரும்பத் திரும்ப பல தடவை வாசிக்க வேண்டும்போல் ஓர் உணர்வை ஏற்படுத்துகிறது. அனைவரும் கட்டாயம் வாசிக்க வேண்டிய கட்டுரை என்றாலும், என் மனைவியிடம் நல்ல கட்டுரை என்று சொல்லிக் கொடுக்க என்னவோ ஒரு அச்சம் ஏற்படத்தான் செய்கிறது. என்ன செய்வது?

இக்கட்டுரை குறித்த ஒரு தகவல் : இதன் தமிழ் மொழிபெயர்ப்பு ஒன்று ஏற்கனவே 1989இல் வெளிச்சம் வெளியீட்டினால் ஒரு சிறுநூல் வடிவில் வெளி வந்ததாக 126வது சரிநிகர் இதழின் ஒரு குறிப்பு தெரிவிக்கின்றது.

இதுபோன்ற ஏற்கனவே மொழிபெயர்க்கப்பட்ட விடயங்களைத் தவிர்ப்பதனூடாக வேறு பல முக்கிய விடயங்களில் மொழிபெயர்ப்பாளர் கவனத்தைச் செலுத்துவது மேலும் பயன்தரும் என்பதையும் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

தமிழ் இலக்கியச் சூழலில் கலை இலக்கியங்கள்- சில புதிய அவதானிப்புக் குரியவைகளை உள்ளடக்குகிறது. மேலும் ஐரோப்பிய கலை இயக்கங்களின் இன்றைய போக்குகள் மற்றும் வரலாற்றுப்போக்குகள் குறித்துக் கூடிய கவனம் செலுத்துவாராயின் மிகுந்த பயனைத் தரும்.

மலரா மனது - நல்ல கதை. மிகவும் இயல்பாகக் கதையை நகர்த்திச் செல்கிறார். மரபு சார்ந்த உத்தியிலே சொல்லவந்த விடயத்தை மிகவும் அழுத்தந்திருத்தமாகப் பதிய வைத்துவிடுகிறார். எனினும் இங்கிருந்து போற ஒருவரின் வழுக்கை, நரை மீசை, கன்னங்கள் காய்ந்து கோதான நிலை, கைகளின் கருங்காலித்தன்மை இவற்றைப் பார்த்து இவன் வெளிநாட்டிலிருந்து வந்தவன் என்று உடனடி முடிவுக்கு வருவது கொஞ்சம் அதிகமாகத்தான் தெரிகிறது. இன்றும் அங்கிருந்து சருகுகள்போல் வருபவர்களை நாங்கள் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம். இங்கு என்னதான் கஷ்டம் இருந்தாலும், இந்த அடிப்படை வாழ்க்கைவசதிகளை அங்குள்ள பொது நிலைமையோடு ஒப்பிடுவது சரியானதாகப் படவில்லை.

புகலிட இலக்கியம்பற்றி எழுதியிருப்பது யாரையோ குறி வைத்துத் தாக்குவது போல உள்ளது. விடயங்கள் அவதானத்திற்குரியவையாகினும் கட்டுரையில் ஆக்ரோஷங்களும் எள்ளி நகையாடல்களும் வெளிப்படுகிறது. இது அவ்வளவு அவசியமானதாகத் தோன்றவில்லை. விடயங்களை எடுத்து ஆய்வுசெய்யும்போது சிலர்களையும் சிலரின் கருத்துக்களையும் முதன்மைப் படுத்துவதால், தான் சொல்ல வந்த விடயத்தைக் கவனத்திற் கெடுக்காமல் அந்நியப்படுத்துவது போன்ற ஒரு உணர்வு தெரிகிறது. கட்டுரையாளர் இதைக்கவனத்திற் கொள்ளுவாரா?

புகலிட இலக்கியம்பற்றி அதிகம் அக்கறை காட்டுவது எல்லாம் சரிதான். அதைச் சற்றுத் தெளிவாக விளக்க முனைந்திருக்கலாம்.

அதனை அடுத்து வரும் சேரனின் கவிதை - புலரிக் கவிதையும் இரவில் சமருமாய்க் கழித்த ஒரு காலத்தின் பாடல் - மிகு நேர்த்தியான முறையில் கடந்த இரண்டு தசாப்தத்தை விரல் நுனியில் நிற்க வைத்துவிடுகிறார். இக்கட்டுரையைக் கவிதை முடித்து வைப்பதாக அல்லது புகலிட இலக்கியத்திற்கு ஓர் உதாரணமாக எண்ணத் தோன்றுகிறது.

இறுதிக்கதை - எண்ட அல்லாஹ்... மகா அற்புதமான படைப்பு. கதை என்று சொல்லுதல் அப்படைப்பை ஒரு வேளை மாசுபடுத்தக்கூடும். எம்முன் புரையோடிப்போயுள்ள இந்த நாசித்தனம் எம்மைத் தலைகுனிய வைக்கிறது. எம்மை நாமே கேள்வி கேட்க வைக்கிறது. இக்கதையைப்பற்றி நிறையச் சொல்லலாம்தான். எனினும் எனக்கேன் வம்பை.

மற்றும் கவிதைகள் எல்லாம் தேர்ந்தெடுத் தாற் போல் நன்றாகத்தான் இருப்பதாகப்படுகிறது.

ஆரவாரம் போட்டுக்கொண்டு வெளிவந்து சில இதழ்களுடன் இருந்த இடமே தெரியாமற் போய் விடுகின்ற சிறுசஞ்சிகைகள்போல் இல்லாது எக்ஸில் தொடர்ந்து வெளிவர வேண்டுமென்று விரும்புகிறேன்.

**சந்திரன்**
லண்டன்

## விளக்கமளிப்புக் கோட்பாட்டு அணுகுமுறை களை...? - கட்டுரையின்பாலான ஒரு கண் ணோட்டம்

அகன்ற ஆய்வுப்பரப்பில் வாசகனை நுழைய அனுமதித்து, அங்காங்கே சில வேளைகளில் அலையவைத்து, நிறைய விடயங்களை ஒரேயடியில் கூறவெண்ணும் எத்தனிப்பில் தோல்வியுற்று, இறுதியில் தன்னுள்ளேயே முரண்பாடுகளை வெளிப்படுத்தும், இக்கட்டுரையின் ஆய்வுத்தளம்மீதான கண்ணோட்டம் ஒன்று அவசியமெனப்படுகின்றது.

கட்டுரையின் உள்ளடக்கத்தை ஊடறுத்துச் சென்று புரிந்து கொள்வதற்குச் செய்யப்படவேண்டிய பிரயத்தனங்கள், அதற்குகந்த பலன்களை அளிக்கின்றனவா என்ற கேள்வி எழுந்து நில்லாமலும் இல்லை. கட்டுரையின் பனுவற் தொடர்ச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சியானது இடைமுறிவுகளுக்கூடானதும், இடைவெளி அதிகமாகவுள்ள தாவுதல்களிற்கூடானதுமான அறிவுறுத்தல்களுக்குச் சிரமத்தின் மத்தியில் இட்டுச் செல்வதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

எடுத்த எடுப்பிலேயே 'பயனற்ற மேலதிகச்' சொற்களைப் பனுவலில் உபயோகம் செய்வது சம்பந்தமாகவும், "மேலதிகங்களுக்கு இடமில்லை என்று இங்கே(?) எந்தத்தாளும் மறுக்காததால் இந்தநிலை அப்படியே தொடர்வது" பற்றியும் கட்டுரை ஆசிரியர் எதிர்ப்புக்குரல் எழுப்புகின்றார்.

விளக்கமளிப்புக் கோட்பாடு பற்றிய விவாதத்தை முன் வைக்கும் முதற்படியிலேயே 'மேலதிகங்கள்' என்ற தீர்மானக் குற்றச்சாட்டுடன் கட்டுரை ஆரம்பமாவது வாசகனை ஆச்சரியத்துள் தள்ளிவிடுகின்றது. பனுவல்கள்மீதான விளக்கமளிப்புக் கோட்பாடு என்பது, அப்பனுவல்களின் 'மேலதிகங்களை' அகற்றியபின் செயற்படுத்த வேண்டியதெனில் விளக்கமளிப்புக் கோட்பாட்டின் இருப்பு நியாயம் எதுவாக இருக்க முடியும்? அன்றேல் விளக்கமளிப்புக் கோட்பாடென்றால் 'மேலதிகங்களை' அகற்றும் பணியா?

இலக்கியப்படைப்பொன்றிற்கும், அதன் வாசகனிற்குமான புரிந்துகொள்ளல் தொடர்பான உறவு தனிப்பட்டதும், அகவயமானதுமாகும். எக்காரணம் கொண்டும் அவ்வுறவு புறநிலைக் கண்ணோட்டத்தால் ஈர்த்து உள்வாங்க முடியாதது. அவ்வாறெனில், பனுவலொன்றில் சொற்கள் மிகையாகவுள்ளதென்றோ அங்கு அதன் போதாமை உள்ளதென்றோ தீர்மானிப்பதென்பது ஒவ்வொரு வாசகனின் அனுபவம், நுண்ணறிவு, கற்பனாவேகம், விவேகம் போன்ற காரணிகளால் தீர்மானிக்கப்பட வேண்டுமேயன்றி, புறநிலைத் தீர்ப்பொன்றினாலல்ல.

தொடரும் ஆசிரியர், தொடர்பின்றி, "சமூகத்தில் பனுவற் படிப்புத் தளங்கள் மாறுபட்டபோதும், ஒவ்வொரு பனுவலும் அதனதன் இடத்தில்" எனக் கூறுகின்றார். இதில் புதுமையென்னவுள்ளது? பதினெட்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பனுவலின்மீது பதினெட்டு இலட்சம் படிப்புத் தளங்கள் உருவாகலாம். அதற்காகப் பனுவலை மாற்றவேண்டும் என்று எண்ணுவதில் எத்தனைதூரம் சரியிருக்கின்றது. பனுவல்கள் மீதான பனுவல்களுக்குத்தான் எவ்விதப் பஞ்சமும் இல்லையே.

பனுவலின் உற்பத்தி நுணுக்கங்களைக் காலத்திற்கேற்ப சரிசெய்யவேண்டும் அல்லது நவீனமயப்படுத்தவேண்டும் என்று ஆசிரியர் கருதுகிறாரென்ற பட்சத்தில், அவ்வாறான நவீனமயப்படுத்தல் சம்பந்தமான கோட்பாடுகளை எந்த அடிப்படையில் நிறுவுவது? இலக்கியவாதியைக் கோட்பாட்டு அடிப்படையில் பனுவல் உற்பத்தி செய்யும் இயந்திரமாக மாற்ற முடியுமா?

"எழுத்துப்பனுவல்கள் நின்று விளையாடுவதும், அதன் அவ்வவற்றிற்கேயான பனுவலிடைச் செயற்பாடுகள் உருவாகுவதும் தமது இலகுவான சாத்தியங்களைக் கொண்டிருக்கும்" புரிந்துகொள்ளக் கடினமான பூடகம்.

ஆசிரியரே கூறுவதுபோல், "புகலிடநாடுகளில் வாழ்வோரும், புலம்பெயர் நிலையினரும்(—) தத்தமது கருத்தியல் ரீதியான நிலைப்பாடுகளின் மூலமான வெளிப்பாடுகளிற்தான் அதிகமான சிக்கல்களை எதிர்கொள்கிறார்கள்" என்பதை இவ்வாறான சொற்தொடர்கள் தெளியவைக்கின்றன.

இந்நிலைப்பாடுகள்மீதாக ஆசிரியர் முன்வைக்கும் காரணங்கள் மிகப்பொருத்தமானவையே.

வரலாற்றுக்கு முன் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதன் தேடலை ஆரம்பித்தான். யாரும் விரும்பியோ விரும்பாமலோ தேடல் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. மனிதம் வாழும்வரையும் தேடுதல் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

சுயசிந்தனையின் தளவிரிவால் ஏற்படும் தேடல்கள்மீதும், அதன் பெறுபேறாக ஏற்படும் கண்டுபிடிப்புகள்மீதும் அபிப்பிராயம் வழங்கும் ஆசிரியர், திடீரெனத் தீர்மானக் குண்டொன்றைத் தூக்கியெறிகின்றார்: "தேடல் நிலையிலிருப்பது சாலச் சிறந்தது"

தனிமனித, சமூக, இனமயமான தேடல் ஈடுபாடும், தேடல் களினால் உருவாகும் பெறுபேறுகளின்மீதான பங்கும் எண்ணிக்கையற்ற காரணிகளால் வரையறுக்கப்படுகின்றன.

தேடலின் விளைவான தொடர்ச்சியான தற்காலிகக் கண்டுபிடிப்புகள் தவிர்க்கமுடியாத 'கட்டப்பொம்மன் கோட்டை'களாக இருந்தபோதும், அவ்வாறான கோட்டைகளும் உடைக்கப்பட்டு புதுப்புதுக் கோட்டைகள் கட்டப்படுகின்றன. இக்கோட்டைகளும் பின்னால் தகர்த்தெறியப்படாதிருக்கும் என்று கூறுவதற்கான எவ்வித ஆதாரமும் இல்லை.

சிலவருடங்களுக்குமுன் 'கட்டப்பொம்மன் கோட்டை' யொன்றினுள் கட்டிவைக்கப்பட்ட கம்யூனிஸ்ட் எழுத்தாளர் ஒருவர் விஞ்ஞான சோசலிசம் பற்றி விளக்கம் அளிக்க முற்படுகையில், விஞ்ஞானம் என்றால் என்ன என்பதற்கான விளக்கத்தையளிக்க மறுத்தார்.

இன்றைய உண்மைகளை உறிஞ்சி உள்வாங்கி, அவற்றையே பசளையாக்கி, நாளை மலரும் புதிய உண்மைதானே விஞ்ஞானம். உறுதிப்படுத்தல்களைத் தொடர்ச்சியாக உடைத்து மீண்டும் மீண்டும் உருவாகும் தற்காலிக உறுதிப்பாடுகளின் தொடர்ச்சிதானே விஞ்ஞானம். நிரந்தரமான உறுதியான கோட்டைகள் என எவையும் இருக்கமுடியாது. அவ்வாறான ஒரு நிலை வெறும் காலப்பிரச்சனையேயன்றி வேறொன்றல்ல.

ஆனால், இவ்வாறான தேடற் தொடர்ச்சியின், ஏதோவொரு கொடுக்கப்பட்ட கால இடைவெளியில் தற்காலிகமாக உறுதி செய்யப்பட்ட தீர்மானக் கோட்டையொன்றினுள், தனிமனிதன் தன் பாதுகாப்புணர்வு கருதி ஒதுங்கிக்கொள்கிறான் என்றால், அம்மனிதன் தன்னைத்தானே தேற்றிக்கொள்வதில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ன தவறிருக்கிறது? எந்த உரிமையில், யார் அவனைக் குறைகூற முடியும்?

**தேடிக்கொண்டேயிருக்கும் மனிதன் எதையாவது அறுதியான உண்மையெனக் கண்டுபிடிப்பான் என்பதை வரையறுத்துக் கூறும் ஆதாரம் ஏதுமில்லை. அவனது தேடல் வெறும் அபத்தமானதாகப் போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. மொத்தத்தில், தற்போதைய நிலையில், தற்காலிகக் கண்டுபிடிப்புகளும், அதனாலான திருப்தியுணர்வுகளுமே தேடுபவனை இன்னமும் தேடவைக்கின்றது. தேடலைக் கைவிட்டாலும் இவ்வகையான தற்காலிகக் கண்டுபிடிப்பிலேயே திருப்தி கொள்கிறான்.**

தேடுதலுக்காகத் தேடுவதிலுள்ள இருப்பு நியாயம் எதுவாக இருக்கமுடியும்?

தற்காலிகக் கண்டுபிடிப்புகளினால் ஏற்படும் திருப்தியுணர்வைத்தவிர வேறெந்தக் காரணத்திற்காக மனிதன் தொடர்ந்து தேடிக்கொண்டிருக்கமுடியும்?

அவ்வாறெனில் தேடலைக் கைவிட்டவனுக்கும் தேடிக் கொண்டேயிருப்பவனுக்குமான வித்தியாசமெதுவாக இருக்க முடியும்?

ஒரு புத்திஜீவி தன் திருப்தியுணர்விற்காய் வரைந்த கட்டுரையின்மீது, அதே திருப்தி உணர்விற்காக நானும் கட்டுரையின் மீதான கட்டுரை எழுதுகிறேனோ என்ற கேள்வி என்னுள் எழுகின்றது.

தனிமனிதனோ, சமூகமோ அல்லது ஒரு இனமோ எந்த நம்பிக்கைத் தளத்தில், பொருளாதாரத் தளத்தில் தனது இருப்பு நிலையை நிறுத்தி வைத்திருக்கின்றதோ, அந்தத் தளத்தின்மீதான தாக்குதல்களை ஒருபோதும் சகிக்காது, அனுமதிக்காது.

மதம், கலாச்சாரம், ஒழுக்கவியல், பொருளாதாரக் கட்டமைப்புப் போன்ற இன்னபிற நம்பிக்கை வரையறைகளில் வேரூன்றி வாழும் மனிதனோ, சமூகமோ, இனமோ தமது ஜீவன ஆதாரத்தை விட்டு அகற்ற முற்படும் அனைத்திற்கும் எதிரான போர்க்கொடியை உயர்த்துவதில் ஆச்சரியம் என்ன உள்ளது?

இவ்வடிப்படைகளில்தான், தனிமனிதன் தனிமனிதனுக் கெதிராகவும், சமூகங்கள் சமூகங்களுக்கெதிராகவும், இனங்கள் இனங்களுக்கெதிராகவும் போர்க்கொடி உயர்த்துகின்றன. உறுதியானவை என நம்பப்படும் அனைத்தின் அடிப்படையையும் கேள்விக்குட்படுத்தும் தனிமனிதர்களுக் கெதிரான அல்லது அவர்களின் சீடர்களுக்கெதிரான, சமூகத்தின் அல்லது அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரத்தின் தாக்குதல்கள் வெற்றி கொள்கின்றனவா? அன்றில் தோல்வியுறுகின்றனவா? என்பதைக் காலப் பரிமாணத்தைக் கணக்கிலெடுக்காமல் தீர்மானிக்கமுடியாது.

அதிகாரத்தைத் தக்கவைத்திருந்த, பாதுகாத்த சமூக நியாயங்களுக்கெதிரான சோக்கிரட்டீஸின் கேள்விகள் அவரைக் கொலைத் தண்டனைக்குள்ளாக்கியது.

இந்தநிலையில்கூட, தப்பியோட அனைத்து வழிகளிருந்தும், அதே அதிகாரத்தால் நிறுவப்பட்ட சட்டங்கள் மதிக்கப்படவேண்டும் என்ற சாட்டுக்கூறி, தன்னைத் தண்டனைக்குட்படுத்திய சோக்கிரட்டீஸின் 'சூதுணர்வு' சம்பந்தமான விவாதம் பலவிடயங்களை வெளிக்கொணரும் என்பதில் சந்தேகமேயில்லை.

பல நூற்றாண்டுகள் தாண்டியும், இன்னமும் சோக்கிரட்டீஸின் சுவடுகள் ஆழமாகப் பதிந்துள்ளதென்றால், அது அவரின் தற்காலிகத் தோல்வியினால் ஏற்படுத்தப்பட்ட நிரந்தரமான வெற்றியில்லையா?

ரோமாபுரியின் அடங்காத பலத்திற்கும், அதனுடன் கூட்டு விபச்சாரம் நடாத்திய யூதமேற்குடிகளின் சதியிற்கும் எதிராக வெகுண்டெழுந்த கிளர்ச்சியாளர் யேசுவின் வெற்றியின் பலத்தை இன்று எவ்வாறு காண்கிறோம். அன்றைய ஒடுக்கப்பட்டோரின் கிளர்ச்சிச் சாணக்கியம், இன்றைய ஒடுக்குவோரின் பலமான ஒடுக்கும் கருவியாக மாறிவிட்டபோதும், கருவியின் பலத்தைக் குறைத்துக் கணக்கிடமுடியுமா?

பௌத்தம் அழிந்து போனதா?

'சே வாழ்கிறார்' என அண்மையில் வெளியான 'காலக் குறி' சஞ்சிகை தலையங்கமிட்டுள்ளதே?

சோக்கிரட்டீஸ், யேசு, புத்தர், சே போன்றோர்கள், பாதுகாப்பு உணர்வோ, திருப்தியோ அற்ற மனோபாவத்தில் தொடர்ச்சியான தேடல்களில் மட்டும் செயற்பட்டார்களா? அல்லது தத்தமது உறுதி நிலைப்பாடுகள் காரணமாக அவர்கள் பாதுகாப்புணர்வுடன் கிளர்ந்தார்களா?

விடையை யாரிடம் கேட்பது?

சிலவேளை இவர்களது 'கட்டப்பொம்மன் கோட்டை' களும் உடைந்து போயினவா?

கட்டுரையாசிரியர் மீண்டும் ஒரு தீர்மானத்தை முன்வைக்கிறார்: "உலகத் தத்துவப் போக்குகளில், இன்று நீண்ட காலமாக ஒரு சார்பு எடுத்துக்கொண்டு எதிர்க்கருத்து நிலைகளோடு பொருதி நின்றுபிடித்துக்கொண்டிருப்பது மார்க்சியம் மட்டுமே"

கட்சி-தொண்டர்கள் மார்க்ஸியத்தையும் 'இன்னொரு' மார்க்ஸியத்தையும் அவர் பிரித்துக் காட்டவும் தயங்கவில்லை. கட்சிமயமாக்கப்பட்ட மார்க்ஸியவாதிகளின் மீதும் அவர்களின் தொண்டர்கள் மீதும் சீற்றம் கொள்கிறார் கட்டுரையாசிரியர். சில துணுக்குகளையும் கூறுகின்றார்:

மார்க்ஸியர்கள் யார்? மார்க்ஸிய நூல்களை வாசிப்பவர்கள்.

மார்க்ஸிய எதிரிகள் யார்? மார்க்ஸியத்தைப் புரிந்து கொண்டவர்கள்.

சற்று மேலாக, மார்க்ஸியம் மட்டுமே "நின்று பிடிக்கிறது" என்று உறுதிசெய்து அதற்குத் தோள் கொடுத்த கட்டுரை ஆசிரியர், "மார்க்ஸிய நூல்களை வாசித்தவரா" அன்றில் "மார்க்ஸியத்தைப் புரிந்துகொண்டவரா" என்பதை அறிவது கட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரையை மேலும் புரிந்துகொள்ளப் பயனுள்ளதாக விருக்கும்.

இந்தக் கட்டுரைக் 'கோட்டைக்குள்' எந்தக் கதவால் நுழைந்தாலும் இருட்டுத்தான் புலப்படுகின்றது.

தெளிவாக மார்க்ஸியத்தைப் புரிந்து கொண்ட மூவரில் ஒருவர் அதில் நம்பிக்கையற்றவராகக் காணப்படும்போது, கட்டுரையாசிரியர்மட்டும் அது "இன்னமும் நின்று பிடிக்கிறது" என்று கூறும் பூடகம் என்ன?

இவையெல்லாவற்றிற்கும் மத்தியில், விளக்கமளிப்பக் கோட்பாட்டின் அணுகுமுறையை எங்கே கண்டுபிடிப்பது?

மு.த.வின் இறுதிக்கால ஆத்மீக நம்பிக்கையை எள்ளி நகையாடும் ஆசிரியரிடம் சில கேள்விகள்:

அனுபவ முதிர்ச்சியின் இறுதிக்கட்டத்தையடைந்து, ஆத்மீக லௌகீகப்போக்குகளின் மீதான மாற்றமுடியாத உறுதியான கோட்பாட்டை (கோட்டையை) உருவாக்கி விட்டீர்களா?

(அவ்வாறெனில் அக்கோட்டையை எங்களிடமும் காட்டுங்கள், நுழைந்துதான் பார்ப்போமே!)

இன்றைய உங்களது கருத்துநிலைப்பாடுகள் மீதான எவ்வித மாற்றத்தையும் எதிர்காலத்தில் கைக்கொள்ள மாட்டீர்களா?

உங்களுக்கு மரணபயம் வந்ததேயில்லையா?

எந்த விளக்கமளிப்புக் கோட்பாட்டினூடாக உங்களது பதில்களை நியாயப்படுத்திப் புரியவைக்கப் போகிறீர்கள்?

உங்களது பதில்களின் ஊடகமான பனுவல்களில் 'மேலதிகங்கள்' என்று எவையேனும் தென்படுமா?

80ம் ஆண்டுகளின் நடுப்பகுதிகளில் பாரிஸின் தமிழ்ப் புத்தி ஜீவிகளில் சிலர் விடாப்பிடியாக மார்க்ஸியத்தை அரவணைத்த காலம்போய், இன்று அவர்கள் புதிய 'இஸம்'களைக் கட்டி அணைத்துக் கொண்டிருக்கும் இந்நிலையில், மீண்டும் புதிய மார்க்ஸியவாதிகள் பாரிஸ் வீதிகளில் வலம் வருகிறார்கள். எத்தனை நாளைக்கு என்று ஏக்கத்துடன் கேள்வி கேட்க விழைகிறது உள்ளம்.

பின் "எதற்கு வம்பை" என்று ஒதுங்கிக் கொள்கிறது.

**வாசுதேவன்**
பிரான்ஸ்

**மன்னிக்கவும்**

எக்ஸில்-1 இல் வெளியிடப்பட்ட சேரனின் கவிதையின் தலைப்பு "புலரிக்கலவியும் இரவில் சமருமாய்க் <u>கழிந்த</u> ஒரு காலத்தின் பாடல்" என்றிருக்க வேண்டும்.

"புலரிக்கலவியும் இரவில் சமருமாய்க் <u>கழித்த</u> ஒரு காலத்தின் பாடல்" என்று அச்சாகியுள்ளது.

## எட்டாமற்றுபோன ஏனது...

சூரியனைப் பிடித்து
சட்டைப்பைக்குள் திணித்துவிட்டேன்
இப்பொழுது
மின்மினியை தேடிக்கொண்டிருக்கிறேன்.

நேற்று என்னோடு கூடவிருந்து
கண்ணாமூச்சி விளையாடி
களிகொண்டலைந்த
என் மின்மினி
எங்கே மறைந்தது.

சூரியனின் ஒளிப்பிரவாகத்தில்
மின்மினி
என்கண்ணுக்கு புலப்படாதென்கிறார்
சிலர்.
சூரியத் தகிப்பில்
மின்மினி பொசுங்கிவிடுமென்கிறார்
வேறு சிலர்.
சூரியனிருக்க மின்மினி எதற்கு
என்கிறார்
இன்னுஞ் சிலர்.

எதுவாயிருந்தாலும்
எனக்கு மின்மினி வேண்டும்
அது இல்லாமல் துயருற்று
தூக்கம்வர மறுக்கிறது.

நானிப்பொழுது
சூரியனை பிடுங்கியெறியத் தயார்
ஆனால்
சூரியன் விடுவதாயில்லை.
அதன் கதிர்கள்
என்னுள் வேரூன்றி
வியாபித்துக் கிடக்கிறது
என் தேசத்தில் விதைக்கப்பட்ட
ஆயுதங்களைப் போல.

திருமாவளவன்

18.02.1998



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆந்ரே ஜீத்

## (André GIDE):

## ஒரு அறிமுகம்

## (1869 -1951)



வாசுதேவன்

> **"இதயத்தின் கட்டளைக்குப் பணிந்து, இயற்கையுடன் இசைந்து, எளிமையுடன் இன்புறும் வாழ்வையன்றி வேறெதை உனக்குரைப்பேன்"**

அதியற்புத மொழிப்பிரயோகம், சமகாலத்திற்குப் புதுமையான எழுத்து நடை, கருத்தியற் தத்துவ ஆழம், உறுதியும் நேர்மையும் கூடிய சிந்தனைப் போக்கு போன்றவை ஒருங்கிணைந்து, ஆந்ரே ஜீத்தை இருபதாம் நூற்றாண்டின் குறிப்பிடத்தக்கவொரு எழுத்தாளராக உயர்த்தியது மட்டுமன்றி, 1947ல் அவருக்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசையும், இன்னும் பல நியாயமான பரிசில்களையும் பெற்றுத்தந்தன.

1869 நவம்பரில் பாரிஸ் ஆச்சாரம் நிறைந்த பூர்சுவாப் புரட்டஸ்தாந்துக் குடும்பம் ஒன்றில் பிறந்த ஆந்ரே ஜீத்தின் இளமைக்காலம் இறுக்கமான மத போதனையில் ஆரம்பிக்கின்றது.

**"என்னை எபிராய மக்களெனக்கருதி, ஆரம்பத்தில் ஆச்சார விதிகளைக் கடைப்பிடித்தால் மட்டுமே பின்னர் ஆண்டவனின் ஆத்மீகக் கருணையில் மூழ்கலாம் என என் தாய் கூறினாள்"** என ஜீத் பிற்காலத்தில் கூறியது குறிப்பிடத்தக்கது.

மதச்சுமையில் இளமைக் காலத்தில் நசுங்கியவர்கள், அறிவெட்டும் வயதில் அதை வெறுப்பது வழமையானதாகையால், ஜீத்தும் இதற்கு விதிவிலக்கானவராயிருக்கவில்லை. மதாச்சாரக் கெடுபிடிகளுக்கெதிராகவும், அக்கால அறவியல் தடைகளுக்கெதிராகவும் கூர்ப்பான இலக்கியப் படைப்புகளை அவர் முன்வைத்தமை இளமைக்கால வாழ்வின் எதிரொலியேயன்றி வேறல்ல. குறிப்பாக 'வத்திக்கானின் நிலவறை' (Les caves du Vatican)என்ற நாவல் இதை உறுதி செய்கின்றது.

இளமைக் காலத்தில் தாய்க்குக் கீழ்ப்படிவற்ற சிறுவனாக இருந்த ஜீத், தகப்பனுடன் கொண்டிருந்த நட்புறவு காரணமாக குடும்ப ஒட்டுணர்வில் காணப்பட்டார். இருப்பினும் 'இவ்வுலக ஊட்டங்கள்' (Les Nourritures terrestres) என்ற தனது நூலில் குடும்பம்என்பதை தனிமனித வளர்ச்சிக்கும், அவனது ஆன்மீக ஈடேற்றத்திற்குமான தடையாகவும் வருணித்து "குடும்பங்களே நான் உங்களை வெறுக்கிறேன்" என்றும் கூறியுள்ளார்.

ஜீத்தின் முதற் பாடசாலை அனுபவமும் விசித்திரமானது. ஆசிரியர்களினால் மடையன் என்று கருதப்பட்ட சிறுவன், இயற்கையை ரசிப்பதில் காட்டும் ஆர்வம் வேறெதிலும் காட்டவில்லை. மூன்று மாத காலமாகப் பாடசாலையைவிட்டே விரட்டியடிக்கப்படுகிறான். ஒழுக்கமற்றவன் என்ற முத்திரை வேறு குத்தப்படுகின்றது. **"பாடசாலைக்குச் சென்று தூக்கம் செய்தேன், இன்னமும் பிறக்காத ஒரு குழந்தையைப்போன்று அங்கு நான் இருந்தேன்"** என்று தனது குறிப்பேடுகளில் ஜீத் குறிப்பிட்டுள்ளார். சித்தியடையாத காரணத்தால் ஒரே வகுப்பை இரண்டு தடவை மீளப்படிக்க வேண்டிய நிலையும் ஜீத்திற்கு ஏற்பட்டது.

ஏழைகள் என்று சகமாணவர்கள் யாரும் தம்மை உணரக்கூடாதென்பதற்காக, தனது மகனையும் எளிமையாக ஆடை அணிவித்துப் பாடசாலை அனுப்பிய தனது தாயின் செயல்மீது ஜீத்திற்கு வெறுப்பிருந்தது. ஒரு முழுமனிதனாக வளர்ந்த பின்னரே சாதாரணமாக ஆடையணியும் வாய்ப்புத் தனக்குக் கிடைத்ததெனவும் ஜீத் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




சிறுபான்மைப் புரட்டஸ்தாந்து மதத்தவர் மீதான பெரும்பான்மைக் கத்தோலிக்கர்களின் துன்புறுத்தல்களால் உளநிலை பாதிக்கப்பட்டு, பாடசாலையின் மீதான வெறுப்பு உண்டானது மட்டுமன்றி, அதுவே ஆந்ரே ஜீத்தை நோயாளியாகவும் மாற்றியது. பாடசாலை முடிந்தவுடன் அவமதிக்கப்பட்டு, கத்தோலிக்கச் சிறுவர்களால் சேறடிக்கப்பட்டும், மூக்கால் இரத்தம் வழியவும் வீடு வந்த சிறுவன் ஆந்ரே ஜீத், எதற்காக தான் எல்லோரைப் போலவும் இல்லையென்று தாயைக் கேட்டானாம்.

வருடாவருடம் புத்தாண்டு விழாவைக் கொண்டாட மாமா எமில் வீடு செல்லும்போது, தனது மூன்று மச்சாள்களில் ஒருத்தியான மதலன் மீது ஜீத்திற்கு அன்பு முகிழ்கின்றது. தனியாகத் தனது அறையில் அழுதுகொண்டிருக்கும் அவளின் சோகச்சுமையைத் தணிக்க எண்ணிய ஜீத் அதன் காரணத்தை அறிய முற்பட்டு அறிந்து கொள்கிறார்: தந்தையறியாமல் தனது தாய் இன்னுமொரு ஆடவனுடன் கொண்ட கள்ள உறவை நேரில் கண்ட வேதனையை மதலன் பகிர்ந்து கொள்கிறாள். இருவருக்குமிடையிலான அன்பை இது பலப்படுத்துகின்றது.



1888ல் உயர்கல்வி பெறுவதற்காக, பாரிஸின் புகழ்பெற்ற 'நான்காம் ஹென்றி கல்லூரி'இல் இணைந்த ஜீத்திற்கு புதிய அறிமுகங்கள் கிடைக்கின்றன. இதன்போதுதான் ஜீத்திற்கு முதலாவது இலக்கியப் படைப்பிற்கான திட்டம் மனதில் எழுகின்றது.

அதாவது, 'ஆந்ரே வல்த்தயரின் குறிப்புகள்' என்ற புத்தகத்தை எழுதிப் பிரசுரித்து, அதன் பின்னர் மதலனைத் மணம் முடிப்பது. மச்சாளைத் திருமணம் செய்வது பிரஞ்சுச் சமூக வழக்கங்களுக்கு முரணானது என்ற வகையில், அதை மறுத்து அவ்வாறான திருமணத்தை நியாயப்படுத்தி, மதலனின் மனதைக் கவரவும், தாயின் மறுப்பை மாற்றவுமே படைப்பின் கருப்பொருள் தெரிவுசெய்யப்பட்டது. தனது சக கல்லூரி நண்பனான பியர் லூயிஸ் இடமும் இறுக்கமான நட்பை வளர்த்துக்கொண்ட ஜீத், தனது திட்டத்தை அவனுடன் பகிர்ந்து ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்கிறான்.

1891ல் புனைபெயரில் பிரசுரமான 'ஆந்ரே வல்த்தயரின் குறிப்புகள்' படுதோல்வியை அடைகின்றன.

ஒஸ்கார் வைல்ட்டுடன் ஏற்பட்ட சந்திப்பானது, ஜீத்தின் வாழ்க்கையில் பெரு மாற்றத்தை ஏற்படுத்தியது. தீவிர இலக்கிய ஈடுபாடுகள் ஆரம்பமாகின. நண்பர்களுடன் இணைந்து ஆரம்பித்த 'Potage - revue', பியர் லூயிஸ்சின் தலைமையிலான 'La conque' சஞ்சிகை, 'Le centaure' போன்ற வெளியீடுகள் ஜீத்தின் இலக்கியப் பரப்பை விரிவடையச் செய்கின்றன.

இத்தாலிக்கும் பல ஆபிரிக்க நாடுகளுக்கும் பயணம் மேற்கொண்டு, பல அனுபவங்களைப் பெற்று மீண்டும் தாயின் சுகவீனம் காரணமாகப் பாரிஸ் திரும்பிய ஜீத், தாயின் மரணத்தின் பின் சில வாரங்கள் கழித்து மதலனைத் திருமணம் செய்து கொள்கின்றார்.

1887ல் வெளியாகிய 'இவ்வுலக ஊட்டங்கள்' எனப்படும் கவித்துவம் கவிந்த இலக்கியப் படைப்பு ஜீத்தின் இலக்கிய வாழ்வின் உறுதியான ஆரம்பத்தை அறிவிக்கின்றது. அது மட்டுமன்று இந்நூலில் வாழ்க்கை பற்றியதும், அறிவியல் பற்றியதுமான தனது கோட்பாடுகளைத் தயவு தாட்சண்யமின்றி, புதுவித எழுச்சிப் பாணியில் முன்வைக்கின்றார். இருபதாம் நூற்றாண்டின் பிரஞ்சு இலக்கியப் படைப்புகளில் முக்கியமானவைகளில் இதுவுமொன்றாகும். நீட்சேயின் 'அவ்வாறு கூறினான் ஸரத் தூஸ்த்ரா' என்ற நூலைப் படித்த பின்னர் உருவாகும் அதே புத்துணர்வு, ஜீத்தின் 'இவ்வுலக ஊட்டங்கள்' அதன் பின்னிணைப்பான 'புதிய ஊட்டங்கள்' என்பவற்றை வாசித்த பின்னர் உருவாகின்றது.

**"உனக்கு நான் உயர்மானிடத்தை உபதேசிக்கிறேன்"** என்று ஸரத்தூஸ்ரா மூலமாக அழைப்பு விடும் நீட்சேயைப் போலவே, **"உனக்கு நான் உத்வேகத்தை உபதேசிக்கிறேன், நத்தநாயல்"** என்று ஜீத் அழைப்பு விடுக்கின்றார். கடினமான தத்துவப் பின்னணியில் கடைந்தெடுத்த நீட்சேயின் நூலும் இலகுவான பாணியில் இயல்பாகத் தோன்றிய ஜீத்தின் நூலும் இங்கு ஒன்றிணைகின்றன என்றால் அது மிகையானதல்ல. தொடர்ச்சியான பல இலக்கியப் படைப்புகள் ஜீத்தின் இலக்கிய ஆழுமையை வெளிக்கொணர்கின்றன. 1899ல் வெளியான 'உறுதியாகப் பிணைக்கப்படாத புரொமெத்தே' (Promethée Malenchainé) என்னும் நாவல் பிரபல கத்தோலிக்க எழுத்தாளரான போல் குளோடலுடன் நீண்ட கடிதத் தொடர்பை உருவாக்குகின்றது. ஜீத்தையும் கத்தோலிக்கராக மதமாற்றம் செய்ய விரும்பும் குளோடலின் பிரயத்தனங்களும் வாதங்களும் பலனற்றுப் போகின்றன.

1908ல் ஜீத்தின் இலக்கிய நண்பர்கள் ஒருங்கிணைந்து 'La nouvelle revue française' (NRF) என்ற வெளியீட்டை உருவாக்குகின்றார்கள்.

1914ல் வெளியான ஜீத்தின் 'வத்திக்கானின் நிலவறை' என்ற நாவல் அவருடனான அனைத்துக் கத்தோலிக்கரினதும் உறவுகளைத் துண்டிக்கின்றது. போல் குளோடலுடனான உறவும் துண்டிக்கப்பட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கின்றது.

Elisabeth Van Ryselberghe என்னும் பெண்ணுடனான உறவில், 1922 ல் கதறின் என்னும் ஒரு பெண்குழந்தைக்கு ஜீத் தந்தையாகின்றார்.

இலக்கியப் புகழின் உச்சியில் நிற்கும் ஜீத்தின் படைப்புகள் தொடர்ந்து வெளியாகின்றன. தனது புத்தகங்களில் ஒரு பகுதியை விற்பனை செய்து விட்டு, மீண்டும் பயணங்கள் தொடர்கின்றார்.

பிரஞ்சுக் காலனித்துவ நாடான கொங்கோ, சாட் போன்ற நாடுகளுக்குப் பயணம் சென்ற ஜீத் காலனித்துவத்தின் இரக்கமற்ற, மனிதாபிமானமற்ற சுரண்டலைக் கண்டித்து கட்டுரைகள் வரைந்தார்.

1935ல் பல்கேரிய கம்யூனிஸ்டான டிமித்ரோவின் விடுதலை கோரி, ஆந்ரே மல்ரோவுடன் இணைந்து பேர்லினில் வெளியிட்ட கோரிக்கை ஜீத்தின் முதலாவது நேரடி அரசியல் ஈடுபாடாகின்றது. முதலாளித்துவத்தின் தீங்குகளை எதிர்த்து, கம்யூனிசக் கொள்கையின் பாலான நாட்டமும், சோவியத் யூனியனின் அரசியல் போக்கிற்கான ஆதரவும் கொண்டிருந்த போதும், தான் கார்ல்மார்க்சினால் கவரப்பட்டல்ல சுவிசேச நற்சிந்தனைகளினால் தள்ளப்பட்டே கம்யூனிஸ்ட் ஆனேன் என பிற்காலத்தில் குறிப்பிட்டார். இறுதியில் தன் கம்யூனிச ஆதரவைக் கைவிடுகின்றார்.



வைபவரீதியாக சோவியத் அரசினால் வரவேற்கப்பட்ட ஜீத், கோர்க்கியின் இறுதிக் கிரிகைகளில் கலந்து கொண்டு செஞ் சதுக்கத்தில் ஆற்றிய உரை உலகப் புகழ் பெற்றது. மீண்டும் பிரான்ஸ் திரும்பி, ஸ்டாலினின் போக்குகள் மீதும், சோவியத் அரசின் சர்வாதிகாரத்தின் மீதும் 1936ல் ஜீத் எழுதிய கட்டுரை அக்காலத்தில் பெருத்த எதிரொலியை உருவாக்கியது மட்டுமன்றி அவருக்குப் பல பகைமையையும் தேடித்தந்தது. பல சமகாலப் புத்திஜீவிகளுடன் கடுரமாக முரண்பட்டு, நேர்மையுடனும் துணிவுடனும் ஸ்டாலினியத்தை எதிர்த்த ஜீத்தின் போக்கானது அவரைக் கடிந்து கொண்டவர்களாலும் காலந் தாழ்த்திப் புகழப்பட்டது.

1947ல் ஒக்ஸ்போட் பல்கலைக்கழக 'கௌரவ டாக்டர்' பட்டத்தையும், பின்னர் அதே ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசையும் ஜீத் பெற்றுக் கொண்டார்.

1951ல் பெப்ரவரியில் ஜீத் காலமானார்.

1952 ஏப்ரலில், ஜீத்தின் ஆக்கங்கள் அனைத்தும் தகாதவையென கத்தோலிக்க உயர்பீடம் பிரகடனம் செய்தது.

▲▲▲

'இவ்வுலக ஊட்டங்களின்'தொனி, முன்னர் குறிப்பிட்டது போல், எழுச்சியானது. விழித்து விரைந்து சென்று பட்டுணர்ந்து அனுபவித்து இன்புறும் வாழ்க்கையெனும் போராட்டத்தில் இன்றே குதித்துவிடு என்று இளைஞனுக்கு அழைப்புவிடும் சக்தி மிகுந்த வார்த்தைகளினாலும், கருத்துக்களினாலும் புனித ஆக்கிரமிப்புச் செய்யும் தன்மை வாய்ந்தது.

**"நத்தநாயல், உனக்கு நான் உத்வேகத்தை உப தேசிக்கிறேன்"** இது ஜீத்தின் அறைகூவல்.

யார் இந்த நத்தநாயல்?

வேறுயாருமல்ல, அது ஜீத்தேதான்.

எதிர்கால இளைஞனுக்கூடாகத் தான் மறுபிறப்பெடுத்து மீண்டும் மீண்டும் புதிய வாழ்க்கையை வாழத் துடிக்கும் வேகம் நிறைந்த அகத்தின் பேரவா.

**"எனது இந்தப் புத்தகத்தை வாசித்தவுடன், அதை எறிந்துவிட்டுப் புறப்படு. புறப்படும் ஆசையை என் புத்தகம் உனக்களித்திருக்குமென எண்ணுகிறேன்.**

**எங்கிருந்தேனும் புறப்படல்.**

**உனது நகரத்தில் இருந்து, உனது குடும்பத்திலிருந்து, உனது அறையிலிருந்து, உனது சிந்தனையி லிருந்து...**

**எனது புத்தகத்தை கொண்டு செல்லாதே.**

**நான் மெனால்க்ஆக இருந்திருந்தால், உனது இடதுகை அறியாது வலது கையைப் பற்றி உன்னை அழைத்துச் சென்றிருப்பேன். பின் பல நகரங்களைக் கடந்து, என் கையை விடுத்து 'என்னை மறந்துவிடு' என்று கூறியிருப்பேன்.**

**எனது புத்தகம் தன்னிலும் பார்க்க உன்னில் அக்கறை காட்ட உனக்குக் கற்பிக்கட்டும். பின்னர் உன்னிலும் பார்க்க உலகத்திலுள்ள அனைத்திலும் அக்கறை காட்டக் கற்பிக்கட்டும்"**

ஜீத்தின் பேருந்தல் நிதானமானது, மனித சக்தியின் எல்லையை மறவாதது.

**"நத்தநாயல், அனைத்து இடத்திலுமன்றித் தெய்வத்தை வேறெங்கும் காணாதே"** என்று தனது புத்தக ஆரம்பத்திலேயே கூறி, மானிட நிபந்தனையின் பலவீனத்தை வேரறுக்க முற்படுகின்றார்.

**"மற்றவர்கள் எழுதுவதிலோ அல்லது பிரசுரிப்பதிலோ ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, நானோ கசடறக் கற்றவற்றை மறந்துபோகும் நோக்கில் மூன்று வருடங்களாகப் பயணத்தை மேற்கொண்டிருந்தேன்."**

ஜீத் மற்றவர்களுக்கு இலவச ஆலோசனை சொன்னவரல்ல. பூட்டிய அறைக்குள் குந்தியிருந்து புத்தகங்களை வாசித்துக் கொண்டு மற்றவர்களுக்கு 'புறப்படு' என்று கட்டளையிட்டவரல்ல.

**"கடற்கரை மணலின் இதம் காலுக்குச் சுகமானது என்று வாசிப்பதில் நான் திருப்தியுறேன். என் கால்கள் அதை உணரவேண்டும். அனுபவத் தால் உணராத அறிவிலெனக்கேது பயன்"**

என்று கூறியவர். கலாச்சாரம், பண்பாடு, பாரம்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ரியம் என்ற பாத்திரங்களின் அடிமண்டிகளைப் பெறுமானமாக்கி, அதையே கல்வியென்றும் போதிக்கும் 'சமூகநலவாதிகளின்' பிடியிலிருந்து வேரறுந்து தொலைந்து போ என்று அன்புடன் சபிக்கும் ஆணைக்குரலில் தேங்கி நிற்பது அகங்காரம் அல்ல. அக்கரைக்குப் போய்வந்த அனுபவத்தால் ஏற்பட்ட புளகாங்கிதம்.

**"கற்றதை மறப்பதென்பது கடினமாகவும், தாமதமாகவுமே எனக்குச் சாத்தியமானது. மனிதர்களால் எனக்குத் திணிக்கப்பட்ட அனைத்துக் கல்விகளிலும் எனக்கு மிகவும் உபயோகமாய் இருந்தது இக்கற்றலை மறத்தலேயாகும். இதில்தான் எனது உண்மையான கல்வியே ஆரம்பமானது"**

தப்பபிப்பிராயங்களுக்கும், தனிமனித வழிபாடுகளுக்கும், மேடைக்கூப்பாடுகளுக்கும் தலை வணங்கும் தலைமுறைக்கு வழங்கக்கூடிய புனித ஆலோசனை இதைத் தவிர வேறெதாக இருக்க முடியும்.

'அனைத்துப் பெறுமானங்களுக்குமான மாற்றுப் பெறுமானங்கள்' என்ற நீட்சேயின் கோட்பாட்டுப் புனருத்தானம் இங்கும் இலகுவான முறையில் ஜீத்திடமிருந்து வெளிப்படுகின்றது. இலவசமாகப் பகிர்ந்தழிக்கப்பட்ட இரவற் கோட்பாடுகளைச் சுமந்து கொண்டு செல்லும் மனிதனை அழைத்து, **"பாரத்துடன் எங்கே போகின்றாய் பாவி மனிதனே? இறக்கி வைத்துவிட்டு ஒரு கணம் நின்று இயற்கையிடம் விபரம் கேள்"** என்கிறார் ஜீத்.



[illegible]

**மாறி விட்டாலோ, அன்றில் சூழல் உன்னைப் போன்று மாறிவிட்டாலோ, அங்கு அறிய உனக்கேதுமில்லை. விட்டுச்செல். உன் குடும்பத்தையும், உன் அறையையும், உன் இறந்த காலத்தையும் தவிர ஆபத்தானவை உனக்கேதுமில்லை. ஒவ்வொன்றிலுமிருந்தும் கிடைக்கும் அனுபவத்தை மட்டும் பெற்றுக்கொள். அதிலிருந்து பிரவகிக்கும் போதையிலே மீண்டும் அதையிழந்து விடு"**

'இவ்வுலக ஊட்டங்களை'த் தொடரும் பின்னிணைப்பான 'புதிய ஊட்டங்கள்'(Les Nouvelles Nouritures) (கூடிய நிதானத்துடன் , உத்வேகம் தணிந்து) மீண்டும் அதே கருத்துக்களை வலியுறுத்துகின்றது.

**"உலகின் ஓசை என் செவிகளுக்கு எட்டாத போதும், என் உதடுகள் அங்கு பனித்துளிகளைச் சுவைக்க முடியாதபோதும் வரவிருப்பவனே, சிலவேளை நீ என்னை வாசிக்கக் கூடுமென்பதால், உனக்காக இந்தப் பக்கங்களை எழுதுகிறேன். ஏனெனில் வாழ்தலைப் பற்றி சிலவேளை நீ போதியளவு ஆச்சரியம் கொள்ளாது விடக்கூடும். வாழ்க்கை என்ற இந்த மகா அதிசயத்தை நீ ரசிக்காது விடக்கூடும்"**

**"இப்போது என் புத்தகத்தை தூக்கியெறிந்து விடு நத்தநாயல்! அதிலிருந்து விடுபடு. என்னை விட்டகன்றுபோ. தொந்தரவு செய்யாது, வழிமறியாது, என்னை விட்டகன்றுபோ. நான் உன் மீது கொண்ட உயர் அன்பு என்னை ஆக்கிரமிக்கின்றது. யாருக்கோ கல்வியூட்டு கிறேன்**

[illegible]



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தின் மீது வெட்கம் கொள்.

உனக்காக நான் தேடும் உணவை உண்ண உனக்கு பசியெடுக்காது.

உனக்காக நான் போடும் படுக்கையில் உனக்கு உறக்கம் வராது.

என் புத்தகத்தை எறிந்து விடு.

வாழ்வின் ஆயிரமாயிரம் சாத்தியக் கூறுகளில் அது வெறுமனே ஒன்றுமட்டும் என்பதை உணர்ந்து கொள்.

உனது பாதையை நீ தேடு.

உனக்காக மற்றவர் போட்ட பாதையிலே நீ செல்லாதே.

உன் போன்றே யாராலும் எழுதக்கூடுமெனில் நீ அதை எழுதாதே.

உன்போன்றேயாரும் ஒன்றைச் செய்ய முடியுமெனில் நீ அதைச் செய்யாதே.

உன்போன்றே யாரும் ஒன்றைக் கூற முடியுமெனில் நீ அதைக் கூறாதே.

உன்னில் நீ உள்ளுர உணர்ந்தவற்றிலன்றி வேறெங்கும் உன்னை நீ பிணையாதே.

ஆ! ஈடற்ற ஜீவனென ஈற்றில் நீ மாறு."



உரோமங்கள் சாய்ந்த திசையில் வருடி விட்டு ஒருமைக்குள் அனைத்தையும் அடக்கிவிட எண்ணும் உலகில், ஒரு கவிஞன் பன்மையின் மீது பாடிய வாழ்த்துப்பா.

வித்தியாசங்களுக்கு 'விழாவெடுக்கும் புதிய போக்கு.

ஜீத்தின் கருத்துக்கள் சீருடை அணியாதவை. ஒருமைப்பட்ட தோற்றங்களுக்குள்ளே ஒளிந்திருக்கும் வித்தியாசங்களை வெளியே இழுத்து வந்து வெளிச்சம்போட முயல்பவை.

சலிப்பும் வெறுமையும் கூடிய சராசரி வாழ்க்கை வாழ்ந்து பழக்கப்பட்டு, அதன் காரணமாகவே வாழ்க்கையை அபத்தமாகக் கருதிவிட்ட மனிதனுக்கு ஜீத் கூறுவதென்ன?

ஏற்றுக்கொண்ட பெறுமானங்களை விட்டு விடல். புதிய பெறுமானங்களை உருவாக்கல்.

"அகத்தில் இருந்து அனைத்தையும் பெருக்கி அகற்றியபின்,

ஆரம்பமாவதோ புத்தம் புதிய தொடக்கம்,

சிருஸ்டித்து நிரப்பவுள்ள ஆகாய வெளியின்முன்,

கன்னி நிலத்தில் நிர்வாணமாய் நிமிர்கிறேன்."

"புதிய ஆதாமாகிய நான்தான் இன்று அனைத்திற்கும் ஸ்நானம் செய்து நாமமூட்டப் போகிறேன். இந்த நீரோடைதான் என் தாகம், இந்தச் சோலை நிழல்தான் என் நித்திரை, இந்த நிர்வாணக் குழந்தை என் பேரவா, பறவையின் பாட்டில் தொனிப்பது என் காதலின் குரல், தேன் கூட்டின் தேனீக்களின் ரீங்காரம் என் இதயத்தின் ஓசை.

அசைந்து செல்லும் அடிவானமே, நீ என் எல்லையாக இரு.

சரிந்த சூரியக்கற்றைகளின் கீழ் விலகி விலகி இன்னமும் தூரச் செல்.

தெளிவற்றுப்போ.

நீலமாகு."

"நத்தநாயல், பயணித்துக் கொண்டே அனைத்தையும் பார், வழியிலெங்கும் தரிக்காதே. தெய்வத்தையன்றி நிரந்தரமானதொன்று இவ்வுலகில் ஏதுமில்லை" என்று கூறிய ஜீத், அன்பு பாசங்களுக்குள் அகப்படும் மனிதன் எவ்வாறு பலவீனப்படுத்தப்படுகிறான் என்பதைப் பல இடங்களில் குறிப்பிடுகின்றார்.

அரைவாசி மானிடனாகவும், அரைவாசி தேவனாகவும் பிறந்த கிரேக்க நாயகன் அஷிலின் தாய், அவனுக்கு அழியாவரம் கிடைப்பதற்காய் அவனைப் புனித நீர்த்தடாகம் ஒன்றில் குதிக்காலில் பிடித்தபடி முழுக்காட்டுகிறாள். அதனால் அவள் கை பிடித்திருந்த குதிக்கால்பகுதி நனையாது அவ்விடத்தில் மட்டும் அஷில் பலவீனமாகி அதுவே அவனது அழிவிற்கும் காரணமாகி விடுகின்றது. புராணத்தின் பூடகத்தைப் புரியுமாறு அழைக்கிறார் ஜீத்.

"தாயவளின் பாச விரல் பட்டுப் பலவீனப்பட்ட குதிக்காலிலன்றி, வேறெங்கும் அஷில் வெல்லற்கரியனாய் விளங்கினான் என்று கூறுமந்தக் கதையே காண்."

"கனிந்து விட்ட பழமே கிளையை விட்டுக் கழன்றுபோ, உன் தசையை ஊட்டியபின் விதையே முளைத்துவா, பூமிக்குள் புகுந்து உன் உடையையிழந்து கிளர்ந்து வா, பூமிக்கு மீண்டும் நிழல் வேண்டும், கடமையை முடிக்கக் கனியே உன் சுவையையிழந்து, உன்னையிழந்து, இறந்து, மீண்டும்பிற."

ஜீத்தின் தாவரவியல் அறிவும், இயற்கையின் மீதான அளவு கடந்த நாட்டமும், தனிமனித விடுதலையினதும், அவனது தனிப்பட்ட மறுமலர்ச்சியினதும் தேவையை ஒப்பீட்டு முறையில் ஊர்ஜிதம் செய்கின்றன.

"மயிர்கொட்டிக்கும், வண்ணத்துப் பூச்சிக்கும் இடையில் நடைபெறும் ஜீவன மாற்றம் கூறுவ தென்ன?

இரண்டும் வேறுவேறானவையல்ல.

இரண்டினதும் அடையாளம் ஒன்றேதான்.

ஆனால் வழக்கங்களும், வாழ்முறைகளும் மாறிவிடுகின்றன.

"உன்னையே நீயறிவாய்"

எத்தனை அசிங்கமானதும், ஆபத்தானதுமான கோட்பாடு.

தன்னைப்பற்றி அறிய மயிர்க்கொட்டி காலத்தைக் கழித்திருந்தால், அது வண்ணத்துப் பூச்சியாய் வரக் காலமிருந்திருக்காது."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மீண்டும் ஒரு மின்னல். ஜீத் என்ற மேகத்தில் நீட்சே என்னும் மின்னல்கோடுகளுக்கு அளவில்லை. சோக்கிரட்டீஸின் அறவியலைத் தகர்க்கும்வண்ணம் அதே உத்வேகம். மனிதனைப் பல வீனப்படுத்தும் எல்லாவிதமான ஒழுக்க விதிகளுக்குமெதிரான உச்சஸ்தாயியிலான எதிர்க்குரல்.

பல்சாக்(Balzac), ஸ்தொன்டால்(Stendhal), ப்ளோபேர்(Flaubert), கோத்தியே (Gautier) போன்ற செவ்விலக்கிய எழுத்தாளர்களை நிறைய விரும்பிப் படித்த ஜீத், ஜேர்மனிய எழுத்தாளர்களில் பெரிய அக்கறை காட்டியதற்கான ஆதாரங்கள் இல்லை.

இருப்பினும் நீட்சேயின் ஆரம்பக் குருவான ஷொப்பனோவரின் (Schopenhauer) 'உலகமென்பது எனது உளவிருப்பாகவும், பிரதிமையாகவும்' என்ற நூல் ஜீத்தின் சிந்தனை ஓட்டத்தில் தாக்கங்களை ஏற்படுத்தியதென்பதை அவரே ஒத்துக்கொள் கின்றார்.

ஆயிரமாயிரம் துன்பங்களைக் கொணர்ந்து கண்முன் காட்டுபவர்கள் எவ்வாறு மனிதனைப் பல வீனமாக்கி அவனைப் பயன்படுத்துகிறார்கள் என்பதை அறிந்த ஜீத் தனது 'புதிய ஊட்டங்களின்' இறுதியில் கூறுகிறார்:



**"துன்பமே உனைக்கண்டு நான் கலங்கேன்,**

**அலறல்களையும் விம்மல்களையும் தாண்டி எனக்குக் கேட்பதுவோர் இனிய பாடல்.**

**என் மனம்போன போக்கில் நானே வரிகளை அமைக்கும் பாடல்.**

**இளகவெண்ணும் என் இதயத்தை இறுக வைக்கும் பாடல்**

**தோழனே உன் பெயரால் நான் நிறைக்கும் அந்தப்பாடல்"**

இதன் பின்னர் 'நத்தநாயல்' என்ற பெயரை விடுத்துத் 'தோழனே' என்று அறைகூவுகிறார் ஜீத்.

**"குனிந்த நெற்றிகளே, நிமிர்ந்து பாருங்கள்! கல்லறைகளில் தரித்துவிட்ட பார்வைகளே, வெற்று வானத்தைப் பார்க்காது, பூமியின் அடிவானத்தை நோக்குங்கள்.**

**தோழனே, புத்தெழில் நிரம்பி, உறுபலம் கொண்டு, உன்பாதங்கள் பிணங்கள் நாறும் இடங்களை விட்டு புதிய அடிவானத்தை நோக்கி உன் எதிர்பார்ப்பை அழைத்துச் செல்லட்டும்.**

**நேற்றைகளின் நினைவுகள் உன்னை நிறுத்தாதிருக்கட்டும்.**

**நாளையை நோக்கி உந்தியெழு!**

**கவித்துவத்தைக் கனவினுள் தள்ளாதே.**

**அதை யதார்த்தத்தில் காண விழை."**

**"தணிக்கப்படாத தாகங்கள், தீர்க்கப்படாத பசிகள், நடுக்கங்கள், காரணமற்ற காத்திருப்புகள், களைப்புகள், தூக்கமின்மைகள் —**

**இவையெவையும் உனக்கு வராதிருக்கட்டும்.**

**ஆ! தோழனே.**

**உன் கரங்களையும் உதடுகளையும் நோக்கிப் பழுத்த மரங்களைச் சரிக்க விரும்புகிறேன். சுவர்களை நொருக்கி வீழ்த்துவதும், "தனியார் உடமை, உள்ளே வராதீர்கள்" என்ற அறிவிப்புப் பலகையுடன் கூடிய தடைகளைத் தகர்த் தெறிவதும்கூட எனது விருப்பங்களே.**

**உனது கடினமான உடைப்பிற்கான நிஜமான ஊதியத்தை எவ்வாறேனும் பெற்றுவிடல் தோழனே!**

**அதை எவ்வாறேனும் பெற்றுவிடல்."**

தான் கம்யூனிஸ்ட் அல்ல என்று கூறிய ஜீத்தின் வார்த்தைகளே இவையும். தனியார் உடமைக்கெதிரான தாட்சண்யமற்ற குரல். பாரதி இன்றிருந்தால் கூட, தனது எதுகை மோனையை மேலும் செழுமைப்படுத்தி **"தனியொருவனுக்குணவில்லையேல், தனியார் உடமையைப் பகிர்ந்திடுவோம்"** எனப் பாடியிருப்பான் என்பதில் சந்தேகமில்லை.

**"திடங்கொண்டோன் நீயென்று உணரும் போது சோகமின்றி இவ்வுலகத்தை விட்டகல்வேன்.**

**எடுத்துக்கொள் என் மகிழ்வுணர்வை.**

**ஆனந்த நிலையுற்று, அந்நிலையை அனைவர்க்கும் கொடு. உழை, போராடு.**

**எதையும் உன்னால் மாற்றமுடியாதெனக் கருதாதே.**

**நான் நினைத்தால் அனைத்தும் நடக்குமென நம்பு.**

**ஒதுங்கிக் கொள்ளலை உன்னத அறிவு என்று ஒருபோதும் நம்பாதே.**

**அவ்வாறெனில், உன்னத அறிவைப் பற்றியேதும் அறிந்தவன் போல் உளறாதே.**

**தோழனே,**

**நாயகர்களுக்காய் உன்னைத் தியாகம் செய்யாதே!"**

தனது எண்பதாவது வயதிலும் 'French boy' என ஜப்பானிய மாணவர்களால் பட்டம் சூட்டப்பட்ட ஜீத்தின் படைப்புகளில் இருந்து பெறக்கூடிய செய்திகள் மட்டற்றவை.

தனிமனிதனை நசுக்கியெறியும் சமூக ஒப்பந்தங்களுக்கெதிரான யுத்தப் பிரகடனம், ஒழுக்கவியல் ரீதியான வரையறைகள் கொண்டுள்ள அழுக்குகளை அகற்றி, தனிமனித ஈடேற்றத்திற் கூடான சமூக விடுதலைக்கான வழிசமைத்தல் போன்ற தளங்களிலே ஜீத்தின் படைப்புகள் பரிணமித்தன.

'உறுதியாகப் பிணைக்கப்படாத ப்ரொமெத்தே', 'ஒழுக்கமற்றவன்'(Immoraliste) போன்ற நாவல்கள் ஆழமான தத்துவ விசாரணைகளைக் கொண்டுள்ளன.

மானிடவாழ்நிலை, இருத்தல்நிலை என்பவை முரண்பாடுகளாலானவை. இம்முரண்பாடுகளுக்குச் செயற்கை முலாம் பூசி, அவற்றையும் ஏதொவொரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோட்பாட்டு ரீதியில் நியாயப் படுத்துவது எத்தனை வெறுமையானதும் கேலிக்குரியதும் என்பதை ஜீத் தெளிவுற விளக்கியுள்ளார்.

போலி ஒழுக்கவிதிகளின் பெயரால் சுய இயல்பைச் சுட்டெரிக்கும் இழிநிலை, மனிதர்களுக்கு தண்டனையாக வழங்கப்பட்டுள்ளதைக் கண்டித்து வெகுண்டெழும் ஜீத், இவ்வாறான தண்டனைகளால் தானே பாதிக்கப்பட்டார் என்பதனை அவரின் சொந்த வாழ்க்கை பற்றிய குறிப்புகளில் தாராளமாகவே குறிப்பிட்டுள்ளார்.



அறிவியல் மேம்பாட்டின் ஒரு குறிப்பிட்ட எல்லையைத் தாண்டியவர்களுக்கு அடையாளப் பிரச்சனை என்பது ஒரு வெறுமையான விடயமே என்று கூறினார் ஜீத்.

தேசியவாதியான மொறிஸ் பரஸி (Maurice BARRES)ன் 'வேரறுந்தவர்கள்' (Déracinés) என்ற புத்தகம் வெளியானபோது அதற்கெதிரான விவாதங்களை முன்வைத்து, நொர்மாந்தி (Normandie)த் தாய்க்கும், உஸஸ் (Uzes) தந்தைக்கும் பாரிஸ் பிறந்த என்னை எங்கே வேரு ண்டச் சொல்கிறீர்கள் திருவாளர் பரஸ் அவர்களே? என்று எதிர்க் குரல் எழுப்பினார் ஜீத்.

பிரான்சின் கலைப்படைப்புகளின் மேன்மை பற்றி 'தேசியவாதமும் இலக்கியமும்' என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் ஜீத்.

**"கலைப் படைப்புகளின் மேன்மை நிலை பிரான்சுக்கு எங்கிருந்து கிடைத்தது? கிரேக்கத்திலிருந்தும், இன்று தேசியவாதிகள் வெறுக்கும் பல இனமக்களின் ஒன்றுகூடலிலுமிருந்தே. ஏனெனில், எமது மிகப்பெரிய கலைஞர்கள், இக்கலப்பினால் உருவாகியவர்களும், இடம் பெயர்ந்து வந்தவர்களுமே. அதாவது மாற்று நிலத்தில் நாற்றிடப்பட்டவர்கள்"**

நிலப்பயிர்ச் செய்கைப் பண்பாட்டில், மாற்றுப் பயிர்ச் செய்கையை வரவேற்கும் அறிவுஜீவிகள், தமது அறிவை மழுங்கடிக்க வைக்கும் தேசியவாதத்தால், இயற்கை அளிக்கும் பாடத்தை வெறுத் தொதுக்கி, கலாச்சாரத்திலும் மாற்றுக் கலாச்சாரத்தை அனுமதித்துச் செழிப்படைய மறுப்பது பற்றி ஜீத் நீண்ட விவாதத்தினையே முன்வைத்தார்.

**"என்னில் கொண்டுள்ள முரண்பட்ட பெறுமானங்களின் முரண்பாடுகளைத் தணிப்பதற்காகவே நான் இலக்கியம் படைக்கத் தள்ளப்பட்டேனோ என்று நான் அடிக்கடி எண்ணுவதுண்டு. கலப்பினால் தோன்றுபவற்றில், வேறுபட்ட மூலகங்கள் கூடியிருப்பதாலும், அவை தம்முள் வேற்றுமை தணிந்திருப்பதாலும், அவற்றிலிருந்தே மேன்மையான கலைகள் உருவாகக்கூடும்"** என்றும் தனது இளமைக் கால வாழ்க்கையை விஸ்தரிக்கும் 'விதையழிந்தால்...' என்ற புத்தகத்தில் குறிப் பிட்டுள்ளார்.

▲▲▲

பிரமாண்டமான ஒரு மலையிலிருந்து ஒரு சிறு கல்லையுடைத்தெடுத்து கொண்டுவந்து காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம். மலையைத் தேடப்போக இதுவொரு சிறிய உந்தலாக அமையுமெனில் அதுவே போதுமானது. ●



ஓவியம்: ஜோன்ஸன்ராஜன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சரணடைவின் கொடுக்குகள்

தேவா

அந்த வீடு தூரத்தில் இருந்து பார்க்கையில் மிக அழகாகத் தெரிந்தது. வீட்டை நெருங்குகையில்தான் அது பாழடைந்து கிடக்கிறமாதிரி அவளுக்குப் பட்டது. ஆள் நடமாட்டம்கூட அங்கிருக்கிறதா என்ற சந்தேகம் எழுந்தது. இந்த வீட்டில் வீட்டுவேலைக்கு ஆள் தேடுவதாய் விளம்பரம் வந்திருந்ததை வாசித்து, பக்கத்து ரூம்காரி இந்த வீட்டின் விலாசத்தை எழுதித் தந்திருந்தாள்.

"என்னமோ ஒருமாதிரியாய் வீட்டைக் கண்டு புடிச்சாச்சி" கேட்டின் கம்பியினூடாக தலையை நுழைத்துப் பார்த்தாள். எங்காவது பொல்லாத நாய் தெரிகிறதா என்று.

"இப்புடி பங்களாக்கள்ல இருக்கிறவுக எப்பிடியாச்சும் நாயி வச்சிருப்பாக. ஆமா இவுகளுக்கு எதுக்கு நாயி. இவுகளே நாய்மாதிரி நம்மளப்போல மனிசரக் கண்டாரே பாய்வானுகளே. அந்த நாயி... இவுக வூட்டுக்குள்ள யாராச்சும் வந்திராம பாத்துகினு... குரைச்சுகினு... இவுகள கண்டா வால ஆட்டிக்கினு... போட்ட சாப்பாட்ட துன்னுகிட்டு... நாயேன்னு படுத்து கெடக்குது. ஆனா நாம்ப இடுப்பு ஒடிய ஒடிய வேல செய்யணும். செஞ்ச வேலைக்கும் ஏதாச்சும் சொல்லிகிட்டே இருப்பாக. நாம செய்யிற வேலய வேல மாதிரியே எடுத்துக்கிற மாட்டாக."

மீண்டும் எண்ணங்களுக்கு முடிச்சுப் போட்டாள்.

"யாராச்சும் இருக்கீகளா"

நாய் குரைக்காத சத்தமே அவளுக்கு கொஞ்சம் தைரியம் தந்தது. கேட்டின் கதவுகளை பலமாக ஆட்டினாள்.

"அம்மாவ்... யம்மா... அம்மா..." யாராவது கதவருகில் வருவார்களா என ஆர்வத்தோடு பார்த்தாள். சிறிது நேரத்தின் பின் ஒரு முதிய உருவம் வீட்டுள்ளிருந்து வெளிப்பட்டது. அறுபது வயதிருக்கும். அக்குளில் பத்திரிகை. விபூதிப்பட்டை அணிந்த நெற்றி. மேல்சட்டை ஒன்றுமில்லாமல் தேவாரம் ஒன்றைச் சத்தமாகப் பாடியபடி, கேட்டடிக்கு வந்தவரைக் கண்டபோது இவளுக்குச் சிரிப்பு வந்தது.



"நம்ம ஊரு கோயில்ல இருக்குமே முனிசாமி, அவரு மாதிரியே நெத்தில நல்லா வெள்ளயடிச்சிருக்காரு".

இவளைக் கண்டவுடன் எரிச்சல் முகம் காட்டினார் அவர்.

"என்ன வேணும்?"

அந்தப் பார்வையே இவளைத் துரத்தியது. இவள் முந்திக்கொண்டு கையில் வைத்திருந்த பத்திரிகை விளம்பரத்தைக் கேட்டின் கம்பிகளுக்கிடையால் நீட்டினாள். அதை வாங்கிப் பார்த்தவர் கேட்டைத் திறந்து விட்டார். அவள் எங்கே வீட்டுப் படியில் ஏறி உள்ளே வந்து விடுவாளோ என்ற எச்சரிக்கையுணர்வோடு கீழ்ப்படியிலேயே நின்றுகொண்டு அவளைப்பற்றிய விபரங்களைக் கேட்கத் தொடங்கினார்.

"உனது ஊர்?"

"டிக்கோயா"

"முந்தி எங்கை வேலை செய்திருந்தாய்?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நா எட்டு வயசில இருந்து எத்தினியோ பங்களாக்கள்ல வேல செஞ்சிருக்கேன். அத எல்லாத்தையும் யாரு கணக்குப் பாத்தா..."

"முந்தி வேல செஞ்ச இடத்தில என்ன பிரச்சினையாம்? ஏன் உனக்கு அங்க இருக்க ஏலாம போனதாம்?"

முந்தி வேலை செய்த இடத்தில் அவள் சம்பளத்தைக் கேட்டதற்காக அவர்கள் அவளுக்குக் கட்டிய 'திருடி'ப் பட்டம் பற்றி இந்த மனிதரிடம் சொல்ல முடியுமா என்ன.

"சம்பளத்தைக் கூட்டிக் கேட்டேனுங்க. போன்னு சொல் லிட்டாக. நம்மளுக்கா வேல கெடைக்காது. சம்பளந்தான் கெடைக்காது. ஆனா வேல தான் எனக்காக எங்கயுமே காத்துக்கிட்டிருக்கே."

கசந்துபோன அவள் அனுபவங்கள் அவளையறியாமலே அங்கு குதித்தன.

"சரி சரி வீட்டுவேலை பொம்பிளயளுக்கு பெரிசே"

"இப்புடி சொல்லுறவுக தானுங்களே வேல வாங்குறதில குறியா இருக்கிறாக. நா சவுதிக்கு போக இருக்கிறேனுங்க. நெடுக நாம வூட்டுவேல செஞ்சுகிட்டு இருக்க ஏலுங்களா?"

"நீ சவுதி போறதெண்டால் ஏஜண்டுக்கு குடுக்க காசு வேணுமே?"

"கடன கிடன பட்டுகிட்டு போனா காட்டியும் அங்கேருந்து ஒழச்சி அனுப்புற காசில சமாளிச்சுப்புடலாம். ஏஜண்டுகாரனும் அந்தா அனுப்றேன் இந்தா அனுப்றேன் என்னு சொல்லி கிட்டிருக்கான். அவன் என்னய அனுப்புறவரைக்கும் நம்ம பாட்டுக்கு ஏதாவது தேடணுமே. இந்த டவுன்ல இல்லாத்துக்கும் காசி."

"அப்பிடியெண்டால் சவுதியில வேல கெடச்சிட்டா நீ உடன போயிருவ. உன்னை வேலைக்கு நான் எடுத்துப் போட்டு... நீ விட்டிட்டு போயிடுவ. நீ வர முன்னம் கனக்கப் பேர் வந்திட்டுப் போயிருக்கினம். நான் இன்னும் முடிவு செய்யேல்ல."

அவளும் பல வீடுகளில் வேலை செய்திருக்கின்றாள். வீட்டுவேலைக்காரிகள் கிடைப்பது எவ்வளவு கஷ்டம் என்ற விடயம் அவளுக்குத் தெரியாத தல்ல. அவளுடைய உழைப்பின் மகத்துவம் அவளுக்கு மட்டு மல்ல அவளை வேலை வாங்கி யோருக்கும் நன்கு புரிந்துதான் இருந்தது. அவளது சிறிய வயதில் விளக்குமாறால் அவள் ஆர்வத்தோடு லயத்தின் முன் வாசலைக் கூட்டிக் கொண்டிருந் ததை ஒருநாள் ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்த இவள் தகப்பன் அடுத்த நாளே ரயிலில் இவளை ஏற்றிக் கொழும்புக்குக் கூட்டி வந்து ஒரு பெரிய வீட்டில் வேலைக்குச் சேர்த்துவிட்டான். தன்னைப் போன்ற பல சிறுமிகள் குசினிகளில் வாழ்வது அவள் கேள்விப்பட்டதுதான். அவளுடைய சொந்தங்கள் சிநேகிதங்கள் எல்லாம் தேயிலைத் தோட்டத்தில் கொழுந்தெடுக்கிறவர்கள். நாளுக்கும் பொழுதுக்கும் உழைத்தும் வயிறு நிரம்ப சாப்பிடக்கூட முடியாத நிலை. மண்ணெண்ணை வாங்க பட்ஜெட் இடம் கொடுக்காத நிலையில் பாயை விரித்தோம். வேலையால் நொந்த உடலை அங்கே கிடத்தினோம் என்றாவது இருக்கும்.

"நாமளுவ மத்தவங்களுக்கு வேல செஞ்சு குடுக்கிறதுக்கே பொறந்தவங்களாயிட்டோம்"

இவள் படுக்கை, நடமாடு தல், உணவு எல்லாமே அவளிடம் வேலை வாங்குவோர்களின் கையில் இருக்கிறது. வாழ்வின் அடிப்படைத் தேவைகள் தீர்க்கப்படும்போது இனியென்ன இவளுக்கு வேண்டும் என்ற திட்ட வட்டமான கருத்துக் கொண்டோரிடம் இவள் தன் சம்பளத்தைக் கேட்டுவிட்டால்... பார்க்க வேண்டுமே அவர்களின் ஆர்ப் பாட்டங்களை. அதைக் காணவில்லை, இதைக் காணவில்லை என்று சத்தம் போடுவார்கள். குசுகுசுவெனக் கதைப்பார்கள். இவள்மேல் சந்தேகம் கொள்கிற பார்வை இருக்கும். ஆனால் இவளை வேலையிலிருந்து மட்டும் நீக்கமாட்டார்கள். இந்த நயவஞ்சகத்தனங்களை அவள் தன் சிறுவயதிலிருந்து பார்த்திருக்கின்றாள். ஏன் என்றால் அவர்களுக்குத் தெரியும் இவளை விட்டால் வேறு வேலைக்காரி இவர்களுக்குக் கிடைக்க எவ்வளவு கஷ்டம் என்று. இதிலே தாங்கள் பெரிய தாராள மனதுக்காரர்கள் மாதிரியும் இவளுக்குத் தான் அவர்களின் அருமை தெரியவில்லை என்றும் புலம்புவார்கள். இவள் அனுபவத்தில் நிலைமை இப்படியிருக்க...

"ஆமா இவருக்கு மட்டும் வேல செய்ய எத்தினியோ பேரு பாத்துகிட்டிருக்காங்களாக்கும். சம்பளத்த இத்தினின்னு தெரிஞ்சு கிட்டா அந்த ஏஜெண்டு நம்மள அனுப்புறவரைக்கும் ஒரு மாதிரியா சமாளிச்சிடலாம். இந்த ஆளு பெரிய ராங்கிக்காரனாயிருக்கானே. நம்மளுக்கு உண்டு இல்லைன்னு சொல்லாம அதென்ன பேப்பரு வாசிக்கிறாரு. சரி கெளம்புவோம். வேற எடத்த பாப்போம்." யோசித்த அவள், "அப்ப நா வரேனுங்க" என்றவாறே கேட்டை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

இப்போது பத்திரிகையில் புதைந்திருந்த முகம் வெளிக் கிளம்பியது.

"சரி சரி. நீ மாதம் எவ்வளவு கேட்கிறாய். மற்றத பிறகு கதைப்பம். இஞ்சை பார். இந்த வீட்டில என்ன வேல கிடக்கு. பிள்ளைகளெல்லாம் வெளி நாட்டில. நான் ஒருத்தன்தான் தனிக் கட்டையா இந்தப் பெரிய வீட்டில கிடக்கிறன். உந்த வீட்டில என்ன வேல உனக்கு கொட்டிக் கிடக்கும் பார்."

"நா முந்தி வேல பாத்த எடத்துல சாப்பாடு, வருசத்தில ரெண்டு தடவ உடுபொடவயும் தந்து மாசம் ஆயிரம் ரூவா தந்தாக. ஐந்நூறு ரூபாவைக் கூட வாங்கியதற்குக் காரணமும் இருந்தது. மாதமுடிவில் எப்படியும் தகப்பன் இவளைத் தேடி வந்து, உன் தம்பிக்கு சுகமில்லை, தங்கைக்கு ஆஸ்த்மா என்று முழுக்காசையும் பிடுங்கி விடுவான். அதற்கு முன்னர் இந்த ஆளையும் ஒருமாதிரி சமாளிக்கவேணும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"சம்பளக்காசி இல்லாத்தையும் எங்கையில தரணும்"

ஒரு அதிர்ச்சிப் பார்வையொன்றை இவளை நோக்கி வீசியவர் மீண்டும் பத்திரிகைக்குள் மறைந்தார். முன்னர் வேலை செய்த வீட்டில் சம்பளக் காசை ஒவ்வொரு மாதமும் முதலாந்தேதிக்கு அவளைத் தேடிவரும் இவள் தகப்பனிடம் கொடுத்ததாய்ச் சொன்னார்கள். அவன் அங்கு வரும் பொழுதுதான் அவளுக்கே தெரியும் ஒரு மாதம் ஆகிவிட்டதென்று. அந்தப் பாழாய்ப்போன தகப்பனிடம் எவ்வளவு காசு கிடைத்ததென்று கேட்டால் அரைவாசிச் சம்பளமே தன்னிடம் தந்ததாய்ச் சத்தியம் பண்ணுவான். அதையும் அடுத்தமுறை வரும் போதுதான் சொல்வான். அவன் பொய்யும் சொல்லுகிறவன் என்பதும் அவளுக்குத் தெரியும். இவன் வந்து காசு வேண்டும் வரை அங்குதான் நிற்பான். அதன் பின்னர் ஆள் சொல்லிக் கொள்ளாமல் ஓடி விடுவான். அவனிடம் சம்பளத்தைக் கொடுக்கும்போது இவளுக்கும் நிறைய வேலை கொடுக்கப்பட் டிருக்கும், இவளை அங்கு இங்கு நகரவிடாதபடி. இப்படிச் சில தடவைகள் நடந்தத்தன் பின் அவள் சொன்னாள்: முழுச் சம்பளத்தையும் தனது கையில் தரும்படி. அதற்கு அங்கு சொல்லப்பட்ட காரணம்: அவளுக்குச் சரியாக கணக்குப் பார்க்கத் தெரியாதாம். அதனால் ஒரு புத்திமதி: அவளுக்கென்று ஒரு பாங்க் புத்தகம் திறந்து ஒவ்வொரு மாதமும் அவளின் அரைவாசிச் சம்பளத்தை அதில் போட்டு விடுவோம். எப்பவாவது நீ அதை உபயோகிக்கலாம். இவள் வேலை செய்துகொண்டேயிருந்தாள், இரவு நித்திரை கொள்ளும் நேரம் தவிர. முழுக் குடும்பமும் மாலைநேரங்களில் தொலைக்காட்சிப்பெட்டியைப் பார்த்துக்கொண்டிருக்கும் சமயங்களே இவளுக்குக்கிடைத்த சிறிய விடுதலை நேரமாக இருந்தது. அப்படி அவளால் தொலைக் காட்சி பார்க்கமுடிந்ததை, அந்த வீட்டுக்காரர்களின் தயாள குணத்தை, அவள் மெச்சி நன்றி காட்ட வேண்டு மெனக் கருதப்பட்டது. ஒரு மூலையில் அவள் நிலத்தில் குந்தியிருந்து மிக அடக்கமாய்த் தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் சமயத்திலும் கூட கதிரையில் உட்கார்ந்து ரசிப்பவர்களுக்குத் தண்ணீர் கொணர்தல், தேநீர் தயாரித்தல், பிள்ளைகள் தொலைக் காட்சிப்பெட்டியின் முன் நித்திரையாகிவிட்டால் அவர்களைத் தூக்கிச் சென்று கட்டிலில் கிடத்துவது போன்ற வேலைகளையும் அவள் செய்ய வேண்டும். ஏனெனில் காலையில் அவர்கள் வேலைக்குப் போகிறவர்கள். பாடசாலைக்குப் போகிறவர்கள். நிறைய காசு சம்பாதிக்கிறவர்கள். நிறைய படிப்பு படித்தவர்கள், படிக்கிறவர்கள். நிறைய விடயங்கள் தெரிந்தவர்கள். அதனால் அவர்கள் இவளை வேலை வாங்குபவர்களாக இருந்தார்கள். தானும் என்றோ ஒரு நாளில் திருமணம் முடித்துப் பின்னர் பிள்ளைகள் பிறந்தால், தன்னுடைய பிள்ளைகளும் ஒரு காலத்தில் மேசையில் உட்கார்ந்து சொகுசாய் வேலை செய்யவேண்டுமென்றதாகம் அவளுள் அடிக்கடி பெரிதாய் எழும். அதன் வெளிப்பாடாய்த்தான், அவள் அரபு நாடொன்றுக்குப் போய் முழுதாய்ப் பணம் திரட்டிவிட யோசித்தாள். அவள் வேலை செய்த இத்தனை காலங்களில் எவ்வளவு பணம் சேர்ந்திருக்கும்? தகப்பன் வந்து பிடுங்கிக்கொண்டு போனதுபோக. இப்படிப் போட்ட கணக்கை ஒருநாள் கேட்கப்போன இடத்தில்தான்... வந்தது வினை. திடீரென ஒரு தங்கச்செயின் காணாமல் போனது. இவள் அந்தச் செயினைப் பிடித்து ஒரு தடவை தடவிப் பார்த்து ஆசைப்பட்டது உண்மைதான். அதற்காக! அவளின் உடுப்புக்கள் அடங்கிய சின்னத் துணி மூட்டை சோதனைக்கு உள்ளாக்கப்பட்டது. தலைமயிர் பற்றி இழுக்கப்பட்டது. முதுகில் அடியும் விழுந்தது. பொலிசில் பிடித்துக் கொடுப்போம் என பயமுறுத்தப்பட்டது. அவளுடைய பாங்க் புத்தகத்திலிருந்து காசை எடுப்போம் எனப்பட்டது. அவள் அப்பிடியொரு புத்தகத்தையே இது வரை காணவில்லை. காண்பிக் கப்படவுமில்லை. இவள் அந்த வீட்டை விட்டு ஓடிவிட்டாள்.

எப்படியோ இன்னொரு வீட்டில் சாப்பாட்டுக்கும் படுப்பதற்குமாக வேலை கிடைத்தது. சில வாரங்களின் பின்னால் அவள் வீதியில் நிற்கும்போது தற்செயலாக அவளைக் கண்டு கொண்ட இவள் கடைசியாய் இருந்த வீட்டுக்கார மனுசி இவளைக் கண்டு கொண்டு நெருங்கி வந்து இவளிடம் குழைந்தாள்.

"எங்க வீட்டுக்கு மறுபடியும் வந்துடுறியா. நாங்க செயின் விசயத்த மறந்துட்டோம். இப்பி டித்தான் நாம உழைக்கிறது எங்கேயோ போயிடறது."

அவள் கேட்க நினைத்தாள்: "அப்படீன்னா நா உங்களுக்கு மாடா உழைச்சதெல்லாம் எங்க போச்சி"

"நாங்க எல்லாத்தையும் மறந்துட்டோம். எங்க மாதிரி யார் உன்ன வச்சி பாப்பா"

"அதுதான் பாத்தீங்களே"

நாக்கு நுனிவரை அவள் வார்த்தை வந்தாலும் அடக்கிக் கொண்டாள்.

"ஏ சம்பளக்காசை முதல்ல தந்தீங்கன்னா அப்புறமா நா ஓங்க கிட்ட வாறத யோசிக்கறேன்"

"இங்க பாரு. நாங்க ஒருத்தருமே செயினப்பற்றிக் கதைக்க மாட்டம்"

"அப்படீன்னா என்ன எதுக்குத் திருட்டுப்பட்டம் கட்டினீங்க. ஓங்க வீட்டில நா வந்து வேல செய்யணுமா?"

அவள் தேம்பித் தேம்பி அழுதவாறே பெருகிவந்த கண்ணீரை அழுந்தத் துடைத்துக் கொண்டு அங்கிருந்து விரைவாக ஓடினாள். இனிமேல் வீடுகளில் வேலை செய்வதில்லை என்றுதான் அவள் உறுதி கொண்டிருந்தாள். ஆனால் இப்போதிருக்கும் வீட்டில் சில நாளைக்கு மேல் அவளைத் தங்க விடமாட்டார்கள். அவளை நெடுக நச்சரித்துக் கொண்டே இருக்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ன்றனர் எப்போது இங்கிருந்து போவாய் என்று. கொழும்பில் தற்போது வாழும் எல்லாத் தமிழர்களும் பொலிசில் பதிந்திருக்க வேண்டுமாம். இவளை இப்படி வைத்திருந்தால் தங்களுக்கு ஆபத்து வந்துவிடும் என்று அடிக்கடி நினைவுபடுத்தினார்கள்.

ஆனால் சிறுவயதில் இருந்தே அவள் கொழும்பில் பல வீடுகளில் வேலை செய்திருக்கின்றாள். யாருமே அவளைக் கேட்டதில்லை நீ இங்கு பதிந்திருக்கின்றாயா என்று. அவளுக்கு சவூதி போகும் எண்ணம் வந்தபோது தான் அடையாளஅட்டை எடுப்பதற்கான செலவுக்கு அவள் பாங்க் புத்தகத்திலிருந்து பணம் எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. அவளுக்கு அடையாளஅட்டை இருந ததால்தான் இப்போதாவது தங்குவதற்கு ஒரு இடம் கிடைத்திருக்கின்றது. அந்த வீட்டில் யாராவது ஒருவர் எப்பவும் தன்னைக் கண்காணித்துக் கொண்டிருப்பதும் அவர்களுடைய பாத்திரங்களை, சேலைகளை, நகைகளை இவள் களவெடுத்துவிடுவாள் என்ற பயம் அந்தக் கண்களில் நிறைந்திருந்ததை அவள் அறியாமல் இல்லை. என்றாலும் இருக்க இடம் தந்தார்களே என்ற நன்றியுணர்வில் அவள் முதுகு வலிக்க வலிக்கக் கழுவிய பாத்திரங்களும் கையுளையத் துவைத்த துணிகளும் அவள் வியர்வையாலும் கண்ணீராலும் நனைந்திருக்கின்றன. அவள் பெண்ணாயிருப்பதால் எங்கேயாவது வீதியின் கரையில் துணியை விரித்தோம் படுத்தோம் என்று முடிகிற காரியமா? ஆணுக்கு அல்லவா அதுகூட சாத்தியமாயிருக்கிறது!

அவளது எட்டு வயதிலிருந்து பெரிய வீடுகளில் கொழும்பில் பங்களாக்களில் வேலை செய்திருக்கிறாள். அந்த சின்னஞ்சிறு வயதிலேயே அழுத அழாத குழந்தைகளையும் இடுப்பில் வைத்திருக்கப் பழக்கப்படுத்தப்பட்டாள். அவளை விடப் பாரமான பழுக்களைச் சுமந்திருக்கின்றாள். அழுக்கானதும் உலராத உடைகளோடும் அவள் வாழவேண்டு மென்பது எழுதப்படாத சட்டம். தரையிலேயே குந்தி, வேலை செய்து, படுத்து, வாழ்ந்தது அவள் வாழ்வு. அவள் தலை விதிக்கு அவள் இப்படி வேலை செய்யவேண்டி இருப்ப தாயும் அவளுக்கு சோறு தரவும் படுக்க இடம் தரவும் எங்கேயோ புண்ணிய ஆத்துமாக்கள் இருக்கிறமாதிரியும் அவள் வேலை செய்த எல்லா வீட்டிலுமே கூறப்பட்டது.

அவள் திறந்துகொண்டு வெளியேறுகையில்,

"இஞ்சபார், நீ கேட்ட சம்பளம் கூட. சாப்பாடும் தந்து இருக்க இடமும் தந்து மாதத்துக்கு ஐநூறு ரூபாவுக்கு மேல் யாருமே



உனக்குத் தரமாட்டினம். நானெண்டபடியால உனக்கு ஐம்பது ரூபா கூடப் போட்டுத் தாறன்."

இவளைவிட்டால் தனக்கு யாரும் கிடைக்கமாட்டார்கள் என்ற நிலையைக் காட்டிக் கொண்டால் எப்படி? அப்படிக் காட்டிக்கொண்டால் அவருடைய சுய கௌரவம் என்னாவது? அந்த ஆளைப் பொறுத்தவரை - பிள்ளைகள் அனுப்பும் மாதப்பணத்தில் - பத்தில் ஒரு பங்கு கூட இவளுக்குத் தரப் போகும் சம்பளத்துக்குச் சமனாகாது. வெளிநாட்டில் இருக்கும் பிள்ளைகள் பேரில் மாதத்துக்கு ஒரு தடவை பூசை செய்யவும் அவர்களுக்கு விபூதி அனுப்பவும் இந்தத் தொகையை விடக் கூடப்போகும் இவருக்கு. அவருடைய பிள்ளைகள் அங்கு நல்லாய் இருப்பதற்கு இவருடைய பக்தியும் பூசையும் உதவுகின்றன என்பதில் பிடிவாதம் கொண்டவர்.

இவள் நினைத்தாள்: இந்த ஒற்றை மனிசனோடு இந்த வீட்டில் என்ன வேலை இருக்கலாம்?

"நம்மளுக்கும் நல்ல காலமின்னு ஒண்ணு வராமயா போப் போவுது!"

இந்த மனிதனின் உறவுகள் எங்கேயோ வாழ்வதால் விருந்தினர் கஷ்டங்களும் இருக்காது. முன்னர் வேலை செய்த இடங்களில் இருந்த வீட்டார் கொடுத்த வேலையைவிட வீட்டுக்கு வந்திருந்த விருந்தினர்கள் இன்னும் சுமையை மேலும் தந்தார்கள். அவர்களும் இவளை ஏவி வேலை செய்விக்க வைத்தார்கள். இவளுடைய வியர்வையில் சுகம் கண்டார்கள். இவள் வேலை செய்ய சம்மதித்தாள். ஆனால் முழுச் சம்பளமும் தன்கையில் தந்துவிட வேண்டும் என்ற இந்த உடன்படிக்கை அவளது வேலைக்காரி வாழ்வில் முதன் முதலாக வெற்றிகண்டது.

முன்னர் இருந்த வீடுகளில் மாதிரி, வேலையொன்றும் பிரமாதமாக இருக்காத மாதிரி ஒரு பிரமை ஆரம்பத்தில் ஏற்பட்டது. மார்க்கட் போவது, கிழவர் சொல்லும் சமையல் சமைப்பது, பாத்திரம் உடுப்பு கழுவுவது, வீடு முற்றம் கூட்டுவது, செடிகளுக்குத் தண்ணீர் விடுவது, ஒவ்வொரு வெள்ளியும் வீடு கழுவுவது, ஒட்டடை அடிப்பது, பாரமான சாமான்களைத் தூக்குவது... அவள் வேலைகள் எப்படி எப்படியெல்லாமோ முளைத்துக் கொண்டே இருந்தன. சாமான் வாங்க இவள் கையில்காசைக் கொடுத்துவிட்டு ஒவ்வொரு சதத்துக்கும் கணக்குப் பார்ப்பதும், சாப்பாட்டின் அளவு இவ்வளவுதான் இதற்கு மேல் தரமுடியாது என்கிறமாதிரி சமைக்க வைப்பதும் இவளுக்கு பழகிப் போன விடயங்களாயின. குசினியைத் தவிர மற்ற அறைளில்- அவள் துப்பரவாக்கும் நேரம் தவிர்ந்த மற்ற நேரங்களில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவளுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்ததை புரிந்து கொள்ளவும் முடிந்தது. அவள் வாழும் இடம், நித்திரை கொள்ளும் இடம் எல்லாமே குசினியாக இருந்தது. உயிர் வாழ்தலுக்கு அவசியமான உணவு படைக்கும் அவள் வாழ் நாட்கள் அங்கேயே அடைந்து போனது. இந்த மனிதனிடம் எவ்விதத் தேவைகளுக்கும் கேள்வி இருந்தால் குசினியின் பின்வாசலால் வெளியேறி வீட்டைச் சுற்றிக் கொண்டு முன்வராந்தா வாசலில் நின்றுகொண்டு, மனிதர் அங்கு இல்லாவிட்டால் சத்தம் போட்டு வெளியில் வரப்பண்ணிக் கேட்கவேண்டும். முன்வாசலுக்குள்ளால் அவள் வீட்டுக்குள் போகக்கூடாது. அவர் படுக்கப் போகமுன் அவள் அவர் காலை அமுக்கிவிட வேண்டும். இவள் வாசல்படிகளில் நிலத்தில் அமர்ந்து கொள்ள, அவர் வசதியாய்க் காலைப் படிகளில் தொங்கப் போட்டுக்கொண்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்திருப்பார். எந்த நேரமும் ஏதாவது தேவாரத்தைப் பாடிக்கொண்டேயிருப்பார். இவருடைய பக்திதான் இவரை இப்படியானதொரு நிலையில் வைத்திருக்கின்றதோ என அவள் நினைத்தாள். காலையில் எழும்பிக் குளித்து முடித்தபின் சாமி அறைக்குள் மனிதன் புகுந்தார் என்றால் மிகுந்த சத்தமாக தேவாரங்கள் பாடுவார். இவளுக்குத் தேவாரங்கள் தெரியாத போதும் எந்தத் தேவாரத்தில் இவர் தொடங்குவார் எந்தத் தேவாரத்தில் இவர் முடிப்பார் என்பதும் கொஞ்ச நாட்களிலேயே விளங்கிக் கொண்டது. இவர் தேவாரங்கள் பாடி முடியவும் இவள் காலைப் பலகாரம் செய்து முடித்து அவைகளை மேசையில் கொண்டுவந்து வைத்து இலையான் மொய்க்காமல் மூடி வைக்கவும் சரியாக இருக்கும். இவருக்கு எந்த நாளும் சுடச்சுட ஒவ்வொரு உணவும் இருக்க வேண்டும். சுத்தமாய் இருக்க வேண்டும். புதிதாய் செய்திருக்க வேண்டும். பிட்டு, இடியப்பம் செய்ய அவளே ஏற்கனவே அரிசி இடித்து மாவாக்கி வைத்திருக்கவேண்டும். மத்தியான உணவுக்கு அவளே மார்க்கட்டுக்குப்போய் புதிதான மரக்கறி வாங்கி வந்து சமைக்க வேண்டும். வெளிநாட்டில் உள்ள அவரது பிள்ளைகள் அவர் சுகமாய் இருக்கவேண்டும் என்பதற்காக இப்படியெல்லாம் சமைத்துச் சாப்பிடச்சொல்லி இருக்கிறார்களாம். எவ்வளவு பணம் போனாலும் பரவாயில்லை. அப்பா சுகமாக வாழ வேண்டும் என்று பிள்ளைகள் விரும்புகிறார்களாம். இதை அந்த மனிதன் அடிக்கடி சொல்லிக் கொள்ளுவார்.

மாலைநேரத் தேநீருக்கும் ஏதாவது சின்னப் பலகாரம் புதிதாய் செய்யப்பட்டிருக்க வேண்டும். இரவுச்சாப்பாடு மீண்டும் வழமை போல புதிதாய்... அவள் மீதியானவற்றை அடுத்த நாளும் சாப்பிடலாம். அது அவளுக்குப் பழக்கமானதாய் இருக்கும். அது அவளுக்கு ஒன்றும் செய்யாதாம். இந்தச் சாப்பாடு கிடைக்கவே அவளுக்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் எனச் சொல்லப்பட்டது. ஆனால் அவளுக்கு 'கொடுத்து வைத்திருக்கப்பட்டதோ' அந்த மனிதன் அளவாகக் கொடுத்த மிஞ்சிய உணவுகளே. பிள்ளைகள் அனுப்பும் பணத்தில் அந்த மனிதன் சுகமாக வாழ வேண்டும். இந்த மனிதன் சுகமாக வாழ இவள் ஓய்வில்லாமல் உழைக்கவேண்டும். இவர் படுத்தபின் படுத்து இவர் எழும்பு முன் எழுந்து செய்த வேலைச் சுமைகள் இது வரை பெரிதாகக் கஷ்டப்படுத்தவில்லை. எனினும் பகலில் குசினிப் பக்கமாக மறந்தும்கூட வராத இந்த மனிதன் அவள் அப்பாடா என்று காலை நீட்டிப் படுக்க ஆயத்தமாகும் சமயங்களில் தண்ணீர் வேண்டும் அல்லது வேறு ஏதோ தேடி வந்தேன் என்ற சாக்கில் வந்து போவது இவளைச் சுருங்கப் பண்ணியது. பகலில் இந்த ஆளின் நாலுமுள வேட்டி நீள மாய்த் தொங்கும். இரவில் குசினிக்குள் வரும்போது அது இரண்டாய் மடித்துத் தூக்கிக் கட்டப்பட்டிருக்கும், தொடைகள் தெரிய. இதனைக் கவனித்த அவள்:

"ஏங்க நேர காலத்தோட சொல்லப்படாதுங்களா. நானே கொணாந்து வச்சிருப்பேனுங்களே."

பாயிலிருந்து எழுந்து காலை மடக்கி உட்கார்ந்து விடுவாள். முனங்குவாள்.

"லைட்டைப் போட்டு வந்தீங்கன்னா நல்லாய் இருக்குமே" மின் விளக்கைத் தட்டாமல் வருவது வேறு எரிச்சலைக் கிளப்பியது.

"நீங்க வயசு போனவரு. எங்கியாவது விழுந்து கிழுந்து தொலைச்சீங்கன்னா. நம்மால ஒங்கள தூக்கமுடியுங்களா."

இதற்கு கிழவர் பதில் சொல்ல மாட்டார். போய்விடுவார்.

ஆனால் இந்த மனிதர் ஒரு நாள் அவள்மேல் உண்மையாகவே விழுந்தார். அவளை எழும்ப விடாமல் அந்த மனிதர் முரட்டுத்தனமாய் அவள் உடலை நிலத்தோடு அழுத்தியபோது தான் அவளுக்குப் புரிந்தது இந்தக் கிழவன் உண்மையில் தடுமாறி தன்மேல் விழவில்லை என்று. அவள் பெரிதாகக் கத்த முயன்றதைத் தடுக்க முயன்ற அந்தக் கைகளை தன் முழுப்பலத்தையும் திரட்டி உதறினாள். தன் இரண்டு கைகளையும் அந்த மிருகத்தின் நெஞ்சில் அமுக்கி, கீழே புரட்டிவிட்டு எழுந்தாள்.

"சீ! நீயும் ஒரு மனிசனா?"

முழு எச்சிலையும் கூட்டிக் காறித் துப்பினாள்.

கையில் கிடைத்த எதனாலும் இவன் தலையில் அடிக்க வேண்டும். ஆத்திரம் பொங்கியது. அந்த உருவம் எழும்புவதற்கு முயன்று கொண்டிருந்தது. குசினிக் கதவைத் திறந்து கொண்டு ஓடுவது சரியென அந்த நிமிசம் அவளுக்குப்பட்டது. இந்த இருட்டு நேரத்தில் எங்கே ஓடுகிறோம் என்று தெரியாமல் அவள் ஓடிக் கொண்டிருந்தாள். ஆத்திரம் தலை உடம்பு எல்லாவற்றிலும் புகுந்து கொதித்துக் கொண்டிருந்தது. ●

(02. 03. 1998)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எமது கலை/விமர்சன மரபு மீது... I

**சிவலோகன்**

புதிய சமூகங்களும் புதிய வாழ்வுப் போக்குகளும் எமது கலை மரபு, விமர்சன மரபு இவைகளை விசாரணைக்கு எடுக்க வேண்டிய ஓர் அவசியத்தை வலியுறுத்துகின்றன.

நேற்றைய படைப்புகள் போல எமது இன்றைய படைப்புகளும் இருக்குமா? நேற்றைய படைப்பு நுகர்வும் இன்றைய படைப்பு நுகர்வும் ஒன்றானது எனச் சொல்லலாமா? புதிய நூற்றாண்டுக்குள் நுழையத் தயாராகும் இந்தக் கடைசி ஆண்டுகள் கலைபற்றி எமக்குத் தரும் முடிவான கொள்கைகள் எதுவாம்? கலையை முன்னிறுத்தி ஓர் கொள்கையை வரைதல் எனது கட்சியல்ல. பிடிவாதமான கொள்கைகளுக்குள் கலைக்கு இலக்கணம் வரைவோர் கலையின் உண்மையான மூலங்களுக்கு அந்நியமானவர்களாகவே இருப்பர். இருத்தல்பற்றிய ஓர் வெளிப்பாட்டு ஊடகமாகவே நான் கலையைக் காண்கின்றேன். கலை எவ்வாறு பாட்டாளி வர்க்கமயமாக்கப்பட்டதோ அது போல முதலாளித்துவ வர்க்கமயமாக்கப்பட்டும் உள்ளது. இந்த இரு வர்க்க உற்பத்திகளும் தொடர்ந்து நடத்தும் போர் இந்த நூற்றாண்டோடு முடியும் விஷயமல்ல. இனி வரும் நூற்றாண்டில் முடிந்துவிடும் என்றுகூடச் சொல்லமுடியாது. ஓர் தனிமனிதனின் ரஸிப்பு உணர்விலே தலையிடும் உரிமை எமக்கு உள்ளதா? வர்க்கங்களைத் தழுவி எழுதும் விமர்சகர்கள் விமர்சனம் என்கின்ற பேரிலே செய்வதெல்லாம் இத்தகைய தலையீடுகளே. மாக்ஸிம் கோர்க்கியின் 'தாய்' எனக்கு உவப்பூட்டும் ஓர் நாவல். கார்ல் பொப்பரின் அரசியல் எழுத்துகளும் எனக்குப் பிடித்தமானவை. கோர்க்கி பாட்டாளி வர்க்க சிந்தனையின் ஓர் இலக்கியக் குறியீடு எனின், பொப்பரோ, வர்க்க சிந்தனையின் கர்ண கடூர விமர்சகர். இந்த வித்தியாசமான சிந்தனைகளை நாம் எப்படி நிராகரிப்பதாம்? ஓர் கருத்துடன் நாம் உடன்பாடில்லாமல் இருக்கலாம். இந்த உடன்பாடின்மையை முன்னிலைப்படுத்தி அந்தக் கருத்தினைக் குருட்டுத் தனமாக நிராகரித்தல் என்பது பேதமைத் தனமான விஷயமே. இதற்கு அர்த்தம் அந்தக் கருத்தினை அங்கீகரிக்கவேண்டும் என்பதல்ல. நிராகரித்தலுக்கும் அங்கீகரித்தலுக்கும் மத்தியிலே நின்று சிந்திக்கப் பழகும் ஒழுக்கமே - எமது சிந்தனை இயக்கத்தை நெறிப்படுத்த உதவும் என நான் கருதுகின்றேன்.

முறைப்படி பார்த்தால் நாம் தேடும் வழிகள், கண்டுபிடித்த வழிகள் சரியானவையா என்பது கேள்விக்குரியதே. வழிகள் ஓர் தற்காலிக இருத்தலின் தேவை கருதியவையே. ஒவ்வொரு தனிமனிதனும் தனது ஓர் காலகட்டத்தின் தேவைக்கொப்பவே தனது வழிகளையும், தனது ரசனைகளையும் தீர்மானித்துக் கொள்கின்றான் என்பதே உண்மை. எமது நிலைப்பாடுகள் யாவும் காலம் தழுவியதும், சமூகங்களின் வளர்ச்சி தாழ்ச்சி தழுவியதுமே. மார்க்சிஸம் பேசிய பலருக்கு, இந்த இஸம் ஓர் பண்டமாகிப் போனதென்பது உலகம் தழுவிய ஓர் பேருண்மையே. இத்தகைய ஓர் சூழலிலே எமது கலை - இலக்கிய மரபுகள் மீது திட்டவட்டமாக எதனையும் சொல்லுதல் இலகுவான விஷயமா?

கலைவடிவங்களின் மாற்றம் - நிச்சயமாக சமூகங்களுக்கிடையிலே ஓர் மாற்றம் வந்து விட்டது என்பதற்கு அத்தாட்சி தரும் விஷயம் அல்ல. புதிய கலைவடிவங்கள், புதிய சமூகங்களினது அவதைகளை பிரக்ஞாபூர்வமாகவோ அல்லது பிரக்ஞாபூர்வம் இல்லாமலோ வெளிப் படுத்துவதால்தான் அவை புதிய கலைவடிவங்கள் என ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

புதிதாகத் தொடங்கவுள்ள நூற்றாண்டின் தொடர்ச்சிகளிலே கலை தனது பழைய குறியீடுகளை இழந்து போகலாம். இதற்கு அர்த்தம் கலையின் புதிய குறியீடுகள் சுத்தமானவை அல்லது அழியாதிருக்கும் என்பதல்ல. இத்தகைய ஒரு சூழலிலே எமது கலை விமர்சன மரபுமீது எம்மால் திட்டவட்டமாகப் பேசமுடியுமா? நவீனத்துவம் பேசிய காலகட்டத்தில், அது திட்டவட்டமானது போலத்தானே எமக்குப் பட்டது. இன்றோ நாம் பின்-நவீனத்தின் பின்னால். பின்-நவீனத்தின் பின் நிச்சயமாக ஏதாவது ஒன்று வரும். எனவே ஓர் காலத்தின் கலை எழுச்சிகளுக்குப் பின்னால் ஓடிப்போய் ஒட்டிக்கொள்ளாமல் கலையை அவதானித்தலே எமக்கு எமது கலை விமர்சன மரபு மீது சில விளக்கங்களைத் தர உதவும் என நான் கருதுகின்றேன்.

[தொடரும்...]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நான் காணும் நனவுகள்

இரவு வரும்
சிலநேரம் பகலும்...

சோர்ந்து உளவருந்தி
கனவுகளைச் சுமந்து கொண்டு
விமானம் முகிலுக்குள்
இறகு விரிக்கும்.

இடறுகின்ற எதிர்காலம்
சுமை எழுப்ப
பொதி சுமந்து
மனம்
பணம் நினைக்கும்.

இன்னும் முகில் வரும்
விமானம்
கணனியில் கீறும்
அளவுகள் பெரியது.

வெள்ளிப் பனிமலைபோல
இல்லை வாழ்வு
அது கரையும்.

கொஞ்சி உதடு நனைத்து
பிரிவது போல
அல்லவே இது!

எந்த அடுப்புக்குள்
தலை நுழைத்திருக்கிறான்
நண்பன்,

எந்த மேசையில்
கை துடைக்கிறான்
இன்னுமொருவன்.

படாடோபம் பற்றிய
நினைப்புகளில் மட்டும்
கழிந்து கொண்டிருந்ததே
மனது.

இல்லை என்பது
கண் முன்னால் விரிகிறதே
மேலும் கீழுமாக...

சீமெந்துச் சோலைகளுக்குள்ளும்
இயந்திரங்களின்
உச்சாடனங்களுக்குள்ளும்
குகைகளின்
இருள்களுக்குள்ளும்
புதைந்து போனானோ
என்னவன்?

"மீள வா!"
என்று சொல்ல எனக்கென்ன
திராணி?

நான்தான்
பார்த்துக் கொண்டிருக்கிறேனே
தாயகத்தையும்
ஐரோப்பாவையும்...

இளைய அப்துல்லாஹ்

(பாரிசில் இருந்தபோது)
09.06.1998



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# மதிப்பு மறுப்பிகள்

சுகன்



தலகணிகள் இரண்டை எதிர் மூலைப்புறங்களாக மடித்துப் பெண்ணாக்கி உறவு கொண்டாயிற்று. புணர்ச்சியின் களைப்பில் படுக்கலாமெனில் தலைவலி. வழமையான நித்திரையின்மைக்குக் குளிசை போடுவதற்குப் பதில் அன்று ஏதாவது செய்தாக வேண்டியிருந்தது. முடிவில் சுவரிற்குக் கையால் இரண்டு தரம் குத்தினேன். பக்கத்து றூம் கிழவன் ஸாபிர் வந்து கதவைத் தட்டினான்.

"என்ன?"

"கொஞ்சநாளைக்கு ஆரும் அரேபியப் பேரழகியை என்னோடு தங்குவதற்கு உன்னால் ஒழுங்கு பண்ணமுடியுமா?"

"கொனார்..." திட்டியபடி கிழவன் போய்விட்டான்.

இந்தாபிடி' என்று என்னைக் கேட்பதுபோல் இருந்தது. சும்மா தட்டிப் பார்த்தேன். தொழில்காரிதான். அவள் 'மாசோசிஸ்ட் பெண்' எனில் நேற்று நான் குற்றுயிரும் கொலை உயிரும் தான் இல்லையா?

சரி அவளை விடு. நீ இரவு வரவில்லை.

விடியத்தான் வந்தாயா?

சொன்னால் நம்பமாட்டாய் இரவு முழுதும் ஒரே கூட்டுக் கலவி. நான், முகம்மட், அலிசா, மகலி, சாந்தி - நீயும் வந்திருக்கலாம்.

பின்னேரம் எங்கே போனாய்? வந்து தட்டிப் பார்த்தேன். நீ இல்லை. மகலி உன்னை ஏன் கூட்டி வரவில்லை என்று கேட்டாள்."

"நான் இல்லாவிடிலும் உங்களுக்கு சந்தோசமாக இருந்தது தானே!"

"நிச்சயமாக. நீண்ட நாளைக்குப் பின் அப்படி ஒரு வாய்ப்பு - இந்தப் பெண்களுக்கு கூட்டுக்கலவிக்கு நல்ல விருப்பம். பெண்களுக்கென்ன எல்லோருக்குமே கூட்டுக்கலவிக்கு விருப்பம்தான்... இல்லையா! ஆனால் அதற்கான சூழ்நிலைக்குக் கொண்டு வருவதற்குள் உயிர் போய்விடும். முன்னர் நிறைய நிறைய. நிறைந்து வழியும் பெண்கள். சில நேரங்களில் நான் கேட்பேன். சில நேரங்களில் அவர்கள் - டெபொங்.

பப்பா வந்த புதிதில் என் கையைக் கட்டிப்போட்டது போல் தான். கிழவன் முட்டாள். இப்போது கொஞ்சம் தேறி விட்டான்.

இரவு சந்திப்போம்.

அலுவலகத்துள் நுளைந்தேன். எப்போதும்போல் என்னை முதலில் எதிர்கொள்ளும் பெரும் உடலும் குழந்தை முகமும் கொண்ட அம்மணி இருந்தாள். சில செக்கன்களாவது அவளுடன் பேச வேண்டும். இல்லையோ குழந்தை முகம் போய்... குரங்கு தான். மேசையெல்லாம் தாறுமாறாகக் கீறுவாள்.

உங்கள் புருசனுடன் நீங்கள் சந்தோசமாக இல்லை என்பதற்காக மேசையெல்லாம் கீறி எனக்குச் சிரமத்தைத் தருவது தொடர்ந்தும் நல்லாயில்லை மடம்.

உனக்கு எப்படித் தெரியும் நானும் புருசனும் தொடர்ந்து சண்டையென்று.

தேனீர் சாயம் கூடியதால் இன்னொரு கோளை சுடுதண்ணி கலந்து, ஸாபிர் கதவைத் தட்டினேன். மகன் திறந்தான்.

"நில் நானும் வாறன்."

ஒன்றாக இறங்கினோம் வேலைக்கு.

பப்பா சொன்னார், இரவு நீ சுவரைத் தட்டியதாக.

"ஏதாவது பிரச்சினையா?"

"இரவு பயங்கர அட்டகாசம். அவள் என்னை உதைந்து தள்ளி விட்டாள். போய்ச் சுவரோடு விழுந்து விட்டேன்."

"ஆ! அழகானவளா?"

"பெரிய முலைகளுள்ள பெரிய பெண்ணவள். தெருவில் நடந்து வந்தாள். முலைகள் 'இந்தா பிடி

அதுதானே நீங்களும் உங்கள் புருசனும் தொடர்ந்து சண்டை பிடிக்கிறீர்கள் என்று நான் ஏன் நினைக்க வேண்டும்? உங்கள் மீது கொண்ட அன்பின் விளைவால் எனக்கு அப்படியொரு எண்ணம் ஏற்படுகிறது போலும்!

குழந்தை முகத்தில் இப்போது பால் வழிகிறது.

உங்களுக்குத் தெரியுமா தங்கள் கிறுக்கல்களை அழிப்பதில் மட்டும்தான் இப்பொழுது எனக்கு ஓரளவாவது நிம்மதி இந்த வேலையில் கிடைக்கிறது.

இந்த வார்த்தைக்காக 50 பிராங் மேசையில் இன்று எப்படியும் இருக்கும். எல்லாவற்றையும் தயார் செய்து, உடுப்பு கழுவும் மருந்துகள், துடைக்கும் துணிகள், அஸ்பி



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றேற்ரர்.

முதல் பீரோவிற்குப் போகிறேன். தன்னை நிறவெறியன் இல்லையென நிருபிக்க எனக்கு வணக்கம், சுகமா இத்தியாதி கேட்டுக் களைத்து விட்டான் இந்தப் பிரஞ்சுக்காரன். இப்போது இல்லை. கேட்டுக் களைத்துப் போன சிரிப்பு முகத்தில் தெரிகிறது. அவனது செக்கிரட்றி வரவில்லை. பீரோவில் தனியே அன்று இருந்தவன் பலநாள் திட்டமிட்டவன் போல மேசையைத் துடைப்பதுபோல் என்ர சப்பாத்தையும் துடைக்கிறியா என்றுபகிடியாகக் கேட்பது போல் கேட்டான். நானும் பகிடியாக நீ முதலில் எனது சுண்ணியைச் சூப்பு பிறகு உனது சப்

இல்லை, அவன் கட்டை அடித்துவிட்டு வந்து உடனே படுத்துவிட்டான். நானும் ஆவலோடு அவனை எழுப்பிக் கதை கேட்கிறேன். அவன் எழும்புவதாக இல்லை. ஆ...! இரவு எவ்வளவு ஆவலோடு அந்த நாயை எதிர்பார்த்தேன் தெரியுமா!

முழுமையான ஒரே ஒரு இனிய இரவிற்கான எதிர் பார்க்கை இப்படியா நிராசையாகப் போகவேண்டும்! கடவுளே உலகத்தில் மிகவும் துயரமானது இதுமட்டும் தான் மடம். வேறு எவரையும் விட மகிழ்ச்சியாக அதியற்புத சந்தோசத்தில் நீங்கள் சுகித்திருக்கும் அந்த இனியநாளுக்காக நான் தினமும் இறைவனைப்

த்திக் கொண்டிருந்தாள். என்னைப் பார்த்தவுடன்தான் அவளுக்கு அப்படிப் பேச வருகிறதா? சில நாட்கள் பிரோவால் வெளியே வந்து அந்த ஒழுங்கையில் அவளை எதிர்பார்க்கத் தொடங்கினேன். அவள் வசையை விரும்பி, வசை கேட்க பெருவேட்கையோடு அலையும் விடலை மனோநிலை ஏன் இன்னும் என்னை விட்டுப் போகுதில்லை! வந்தாள். அவள் கவனத்தைக் கவர அவளுக்கு முன்னால் நடந்தேன். சுவரை இடித்துக்கொண்டு போய்விட்டாள். பின்பு காணவில்லை.

அலிசா பிரோ முன் காத்திருந்தாள். நேரத்துடன் இருவரும் தூங்கிவிட்டோம். ஏதாவது கதை



பாத்தைத் துடைக்கிறேன் என்றேன். மகனே இப்படி எத்தனை சிரிப்பைப் பார்த்து விட்டேன். எத்தனை பேருக்கு இந்தா என்று நடுவிரலை நிமிர்த்திக் காட்டியிருக்கிறேன். மறுநாள் அம்மணிக்கு விசயத்தைச் சொன்னேன். அவள் அதைக் கருத்தோடு கேட்கும் மனநிலையில் இல்லை. "அவனை விடு! அவனுக்கு மூளைக்கோளாறு!" என்றாள்.

ஏன் இன்று ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்.

பிரார்த்திக்கிறேன்.

குறைந்தது 50பிராங் ஆகுதல் இன்றும் இருக்கும். பிரோவால் வெளியே வந்து நடக்கிறேன். ஒழுங்கையில் இருந்து வந்த ஒருத்தி நீ உன்ர அம்மாவுக்கு முன்னுக்குச் செய்தால் என்ன பின்னுக்குச் செய்தால் என்ன எனக்கு அதைப்பற்றி எந்தக் கவலையுமில்லை என்று அடிக்குமாப்போல் கையைக் காட்டிப் பேசிவிட்டு போனாள். இரவு தூங்க நெடுநேரமாகி விட்டது. அவள் என்னை வரு

சொல்லச்சொல்லி நடுச்சாமத்தில் என்னை எழுப்பினாள் அலிசா. நல்ல நித்திரையில் யாராவது என்னை எழுப்பினால் எனக்கு மிகவும் பிடிக்கும். அப்படியான நேரம் சில சமயங்களில் வாய்க்கும். கொத்துக் கொத்தான அவளது கூந்தலை முழுதுமாகக் கூட்டி எனது கழுத்தோடு கட்டி முடிச்சுப் போட்டுக் கொண்டு கதையைத் தெரிந்தேன்.

ஆண்-பெண் சேர்க்கையில் யாருக்கு இன்பம் அதிகம் என்பது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பற்றிய பாரதக்கதைப் பாத்திரம் ஒன்று. கவனமாக்கேள் அலிசா. பங்காஸ்வன் ஆணாக இருந்து பெண்ணாக மாறிவிட்டான். பின் அவனால் எல்லாவற்றையும் பெண் நோக்கோடு பார்க்க முடிந்தது. எல்லா சந்தோசங்களையும் பெண்ணாக இருந்து அனுபவிக்க முடிந்தது. ஆண், பெண் ஆகிய இரண்டு அனுபவங்களையும் ஒன்றுசேர அனுபவிக்க முடிந்த அவன் இறுதியில் ஆணாக மாறும் வாய்ப்புக் கிடைத்துங் கூட அதை வேண்டாம் என்று பெண்ணாகவே இருந்துவிட முடிவுசெய்கிறான். பெண்ணாக இருக்கும்போதுதான்ஆண்-பெண் சேர்க்கையில் இன்பம் அதிகமாகக் கிடைக்கிறது என்றுணர்ந்து ஆணாவதை மறுத்துவிடுகிறாள்.

அலிசா என் மார்பின் காம்பில் மெலிதாகக் கடித்தாள். பொக்கணியில் சுண்டுவிரலால் வருடினாள். அலிசா...! அலிசா, இந்தக் கதை உனக்கு ஏதாவது சலனத்தை ஏற்படுத்துகிறதா?

இதனால்தானே உன்னை எனக்கு மிகவும் பிடிக்கிறது. இந்த நடுநிசியில் என்னைக் கலவரப்படுத்த வேறு யாரால் முடியும் உன்னைத் தவிர. வழமையான கூட்டுக்கலவிக் கூட்டத்தை இருவரும் தவிர்த்து விட்டு அதுவும் எனது வற்புறுத் தலால்தானே நீ இன்று தனியே என்னோடு இருக்க ஓம் என்றாய். எனக்குத்தெரியும் உனக்கு எல்லாமும் ஒன்றுதான் என்று. ஆனால், ஏனோ உன்னை ஓரிரு முறையாவது தனியே சந்திக்க விரும்பும் மனது. கூட்டுக்கலவியில் அதிகமான சந்தோசமும் கும்மாளமும் திறந்தமனதும் முழு மனிதத்தன்மையும் ஆனந்தமும் ஒரே அமர்க்களம். ஆயினும் ஓர் மெல்லிய மனதிற்கான வருடல் சுகம். அதை நீதானே எனக்குக் காட்டியது.

உன்முகம் புதுக்களையுடன் அமைதிகொள்ளும் அமைதியாக, உன்முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்க, பேச, வருட பேசு.

நீண்ட கணங்களுக்குப் பின் பேசினாள் சிரிப்புடன்: அதிகமாகக் கிடைக்கின்ற காரணம் குறித்து தன்னை ட்ரான்ஸ் செக்சுவல் செய்து கொண்ட உன் மூதாதையுடன் உன்னை ஒப்புநோக்கிப் பார்க்கிறேன். நீ ஏன் செய்யக் கூடாது.

நான் மௌனமானேன்.

இப்போது ட்ரான்ஸ் செக்சுவல் செய்த ஓர் ஆண் தனது வாழ்க்கையைச் சுயசரிதையாக எழுதாவிடத்து அல்லது அவனூடாக அவன் குரலைக் கேட்காவிடத்து இப்படியான பாத்திரங்கள்மேல் இட்டுக் கட்டியிருக்கும் இலக்கியப் புராணப் பொய்மைகள் எனக்கு ஏனோ எரிச்சல்வர வைக்கிறது. எம்முடன் தினமும் வாழும் ட்ரான்ஸ் செக்சுவல்களின் குரலாகவா இந்தப் பாத்திரம் இருக்கின்றது?

கன்னத்தில் லேசாகத் தட்டினாள் அலிசா.

இவ்விடயத்தில் என்னால் இன்னும்கூட உன்னை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. புளொரன்ஸ் வந்தபொழுது அவள் ட்ரான்ஸ்செக்சுவல் என்ற காரணத்தினால் தானே ஓர் எதிரினையப்போல அவளை அப்படி நடத்தினாய் நான் கூட்டி வந்தேன் என்றும் பாராமல். அவள் உன்னில் எவ்வளவு நேசத்தோடும் எதிர் பார்ப்போடும் வந்தாள். பெரிய ஆண்தனத்தோடு நீ அவளை எத்தனை முறை கேலியாகக் குத்திக் காட்டினாய். மற்றெல் லோருக்கும் அது சாதாரணமாகப் போய்விட்டது. என்னால் முடியவில்லை. அந்த ஆத்திரம் தான் அன்று. நான் நினைக்கிறேன் நீ ஆணாக இருக்கும்மட்டும். கர்ப்பிணிப்பெண்ணின் வயிற்றைக் கிழித்து குழந்தையை எடுத்து அக் குழந்தையுடன் உடலுறவு கொள்ளும் சாடின் ஆண்களுக்கிடையில் கொஞ்சக் கொஞ்ச வித்தியாசமே உள்ளது.



சரி அதைவிடு! உனக்கு இன்னொரு உண்மைக் கதை கூறுகிறேன். ஆனால், கதையில் வரும் கழுதையை நீ உன்னோடு ஒப்பிடக்கூடாது. சரியா! ஓர் உற்சாகமான உடலசைப்பில் ஆர்வமானாள் அலிசா.

நான் ஓமானில் வேலைக்குப் போயிருந்தபோது இது நடந்தது. நாங்கள் தங்கிய முகாமில் எங்களோடு இருந்த ஒருவன், அங்கு வந்த கழுதையுடன் ஓர் நாள் உடலுறவு கொண்டான். அதன் பிறகு அந்தக் கழுதை சுதியில் அதே நேரத்திற்கு எங்கள் முகாமிற்கு தினமும் வந்து ஒரு மாதிரியாக் கத்தும். அவன் அக்கழுதையிடம் போய் விடுவான். இப்படித் தினமும் நடந்தது. ஒருநாள் அவன் அழுது கொண்டே இருந்தான். நீண்ட நாளாக அழுதான். கழுதை வருவதில்லை.

எனது கழுத்தை நெரித்தாள் அலிசா.

"ஏன் மற்றவர்களோடு இயல்பாகப் பேசுவதுபோல் நீ என்னோடு பேசுவதில்லை. ஏன் என்னை எப்போதும் தவிர்க்கிறாய்" தமிழில் கேட்டாள் சாந்தி. நான் ஹசனைக் கூப்பிட்டேன்.

"ஹசன்! நான் சாந்தியுடன் இயல்பாகப் பேசுவதில்லை என்று என்மேல் விமர்சனம் வைக்கிறாள் சாந்தி. உண் மையா? நீ அவதானித்தாயா!"

"சாந்தியுடன் மட்டுமல்ல எங்கள் எல்லோருடனும் எப்போதும் நீ இயல்பாகப் பேசுவதில்லை. இவ்வளவு காலமாகியும். மகலி இன்னும் வரவில்லையா?" என்று குற்றம் வைத்தான்.

பகிடிபோலவும் உண்மை போலவும் பேசுவதற்கு இந்த உலகத்திற்கு ஒரே ஒருவனாக அனுப்பப்பட்டவன் அவன். ஹசனுக்கு முன் சாந்தியை இறுக்கி அணைத்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"மன்னிக்கவேண்டும். உனக்கு அப்படி ஒரு சங்கடத்தை ஏற்படுத்தியதற்காக" ஆனால் வெளிப்படையாக இயல்பாகப் பேசுவது எல்லோர் முன்னிலையிலும்தான். இன்னொரு தனிமையை தனியே காண எனக்கு எப்போதும் பயம். எல்லாம் சரியாகி விடும்.

சாந்தியின் நாடியைத் தூக்கினேன். ஏதோ பேசுவதற்காக முயன்றாள். நான் பேச்சையும் அவளையும் தவிர்க்க முயன்றேன். அவளை இன்னொரு தனிமை என்பதை நான் அவசரப் பட்டுச் சொல்லியிருக்கக்கூடாது. நானும் அவசரப் பட்டுக் காட்டியிருக்கக்கூடாது.


"ஹசன்! நான் பேசுவதையெல்லாம் இப்போது நீ கஸ்ரப் பட்டு விளங்க முயல்கிறாய் முன்னர் அப்படியல்ல" என்றேன்.

"கொனார்... இந்தப் பெண்ணைப் பார். இன்று எவ்வளவு ஆவலுடன் உன்னை எதிர்பார்க்கிறாள்." உன்னுடைய ஆரம்பத் தயக்கம் எனக்குத் தெரியும். அதே இனத்துப்பெண்ணிடம் முதலில் நெருக்கத்தை ஏற்படுத்துவதற்கு சங்கடங்கள் எவ்வளவுதான் மறைத்தாலும் வந்து விடுகிறது. ஆனால் நாம் என்ன குழந்தைகளா? மனித உணர்வுகளை மதிக்கும் பக்குவம் அளவுக்குமேல் சித்திக்கப் பெற்றவர்களாயிற்றே.

இருவரும் அவளது ஆடைகளைக் களையத் தொடங்கினோம். சாந்தி என்னைக் களையத் தொடங்கினாள்.

"ஆ... நீண்ட நாட்களுக்குப் பின் நீ இன்று சவரஞ்செய்து வந்துள்ளாய்."

"இருக்காதா ஹசன். உனக்கு இது விளங்காதா ஹசன். சவரங்களில் நானும் மகலியும் இப்போது மீண்டும் அக்கறைப்படத் தொடங்கியுள்ளோம். அதுவும் இன்று விசேடமாக இதே கவனத்துடன்



ஓவியம்: புரொன்ஸினோ 'நன்றி' The Great Artists -Vol.33 & 49

இருந்தேன். இவருக்காக. சவரம் பற்றிய நமது அக்கறைகள் பற்றி நாம் பெரிய புத்தகமே எழுதலாம் இல்லையா! (இடையில் ஹசன் எனக்கு முயற்சித்தான். நான் அவனை விலக்கினேன்.) முன்னர் முஹமட், சவரஞ் செய்தவர்கள் எல்லோரும் ஒரு பக்கத்திலும், செய்யாதவர்கள் ஒரு பக்கத்திலும் நிற்கும்படி கட்டளையிடுவான். நமது குறும்புகள் முஹமட்டுக்கு ஏற்படுத்தும் எரிச்சலில் அவன் எத்தனை நாள் கோவித்துச் சென்றிருக்கிறான். இந்த இடத்தில் சில நேரங்களில் அவனது மனோநிலையை விளங்கமுடியாது அவனைக் கோபத்தில் கத்தியிருக்கிறேன். அவனது அந்த மூடுண்ட மனோநிலை தான் அவனை இன்னொரு கூட்டுக் கலவி முகாமிற்கு இட்டுச்சென்றது. அவர் ஒருநாள் ரெலிபோனில் தன்னை மன்னிக்கச் சொன்னார். அது ஒரு ஆரம்ப நிலைக் குழாமாம். ஆர்வங்கள் இருக்கின்ற அளவிற்கு திறந்த மனோநிலை இல்லையாம். தன்னைக் குருநாதராக, தலைவனாகக் கருத வெளிக்கிட தனக்கு மற்றவர்களில் பயமும் அந்நியத்தன்மையும் வந்து கொண்டிருக்கிறது என்றார். அங்கே கிடந்து அழுந்தி வேதனைப்பட்டுச் சாவு என்றேன்.

"இங்கு வருவதற்கு அவரது குற்றஉணர்வு சங்கடப்படுத்துகிறது. நீ குற்ற உணர்ச்சியில் குழம்பும்வரை உன்னைக் குழந்தையைப் போல் தான் எம்மால் கருத இயலும். குழந்தைகளோடு எங்களால் அன்பாக இருக்க முடியாது. குழந்தைகள் விளையாடும் பூங்காதான் உனக்குப் பொருத்தமான இடம் என்றேன்" என்றாள் சாந்தி.

"உங்களைத் தனியே சந்திக்க அவாவுகிறது எனது மனது. ஏனோ தெரியவில்லை" என்றேன் சாந்தியிடம்.

"இல்லை எனக்கு உந்த ஏரியா தெரியும். அதையெல்லாம் கடந்து பக்குவமடைந்து விட்டேன். மன்னியுங்கள்!" என்றாள். ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கண்ணோடு காண்பதெல்லாம் தலைவா... ஜீன்ஸ்
# காதோடு கேட்பதெல்லாம் தலைவி... எக்ஸில்

**அர்விங் அப்பாதுரை**

பெண்ணியம் இரட்டைப் போர்க்களங்களை உள்ளடக்குவதாகும். ஒரு களம் தேசிய/ சர்வதேசிய அளவிலும், மற்றொன்று ஒவ்வொரு கலாச்சாரத்தின் உள்ளும் இருக்கின்றது.

பொருளாதார சுதந்திரம், சட்ட/அரசியல் போன்றவற்றில் சமஉரிமை, கல்வியுலகில் சமஉரிமை, வேலை வாய்ப்புகளில் சமஉரிமை போன்றவை உலக மகளிர் அனைவருக்கும் பொதுவான போராட்டங்கள்.

இவைகளைத் தவிர ஒவ்வொரு கலாச்சாரத்திலும், கலைப் பொருட்கள், இலக்கியம், தகவல் சாதனங்கள், மரபுகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றின் உள்ளடக்கம் பெண்களை ஒடுக்கும் தன்மையைக் கொண்டிருப்பதால், இவற்றை எதிர்த்துப் போராடுவது கலாச்சார பெண்ணியப் போராட்டம் என்கிறோம். தமிழ்ச் சூழலில் இவ்வகையான போராட்டத்தை தமிழ்க் கலாச்சார பெண்ணியப் போராட்டம் என்று வழங்குவதே நலன் நல்கும் என்பது என்னுடைய கருத்து.

## தலித்தியம், கம்யூனிசம், பெண்ணியம்

தலைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் மூன்று போராட்டங்களையும் ஒன்று சேர்த்துப் பார்ப்பதும் விவாதிப்பதும் இன்று வழக்கில் இருந்து வருகின்றது. இக்கண்ணோட்டம் சில குழப்பங்களை உண்டாக்கும் தன்மையுடையது என்பது என் கருத்து.

ஜாதி வேற்றுமை, பெண்ணை ஒடுக்கும் விதிமுறைகள் ஆகியவற்றைப் போதிக்கும் மனு தர்மம் என்ற நூலை எதிர்த்துப் போராடுவதில் மட்டுமே தலித்தியமும் பெண்ணியமும் ஒன்று சேருகின்றது. மற்ற எல்லாப் பரிமாணங்களிலும் பெண்ணியமும் தலித்தியமும் வெவ்வேறு போராட்டங்கள்.

தத்துவரீதியில், கம்யூனிசம் என்பது சம உரிமைக்கான போராட்டம். இது முக்கியமாக பொருளாதார சமத்துவத்திற்கான போராட்டம் என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். மனிதப் பிறவிகள் எல்லாம் சமமானவர்கள் என்ற கருத்தும் மார்க்சியவாதிகளின் கொள்கைகளில் ஒன்று. இதன் அடிப்படையில் மார்க்சியவாதிகள் பெண்ணியப் போராட்டத்தில் பங்கு பெறுவோருக்கு துணைநிற்கக் கூடும். இதைத் தவிர்த்து கம்யூனிசத்திற்கும் பெண்ணியப் போராட்டத்திற்கும் என்ன நேரடித் தொடர்பு இருக்கின்றது என்பது ஒரு பூடகம்.

## கடமை - உரிமை

தமிழ்க் கலாச்சாரத்தை ஆராய்ந்தோமானால், பெண்களுக்கு மரபுரீதியில் நிறையக் கடமைகள் இருக்கின்றன. வாரிசுக்கு ஒரு ஆண் பிள்ளையாவது பெற்றுத்தர வேண்டும், கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்பன இவைகளில் சில. ஆனால் பெண்களுக்கு உரிமை ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆண்களை எடுத்துக்கொண்டோமானால் அவர்களுக்கு கடமைகளும் உண்டு. அதேபோல் உரிமைகளும் நிறைய உண்டு. கடமைகள்: மணவாழ்க்கையை நடத்த பொருள், பணம் தேடித் தருவது, பெற்றோர்களின் வாழ்க்கையின் அந்திமப் பொழுதில் அவர்களுக்கு உதவுவது போன்றன. உரிமைகளும் பல உள்ளன. வீடு, நிலம் போன்ற நகராத சொத்துக்களில் உரிமை, மனைவிமேல் உரிமை, சகோதரிகளின்மேல் உரிமை போன்றன. இந்தக் கடமை/உரிமை பிரிவுகளை அவதானிக்கும் பொழுது பெண்களுக்கு பாதகம் விளைவிக்கும்படியாகவே தமிழ்க்கலாச்சாரம் அமைந்திருக்கின்றது என்பது யாராலும் மறுக்கமுடியாத உண்மை. பெண்களின் உரிமைக்காகப் போராடும் பெண் நிலைவாதிகள் பெண்களின் கடமைச் சுமையையும் குறைக்கவும் போராட வேண்டும்.

## தமிழ்க்கலாச்சாரத்தில் ஆண் ஆதிக்கம் செலுத்தும் ஒரு முக்கியமான ஆயுதம்: தமிழ் சினிமாப்பாடல்கள்

கண்ணதாசன், வாலி, வைரமுத்து, கங்கை அமரன் என்று பல பொம்மலாட்டக்காரர்கள் தமிழ் சினிமாவுக்குப் பாட்டெழுதி, பி.சுசீலா, வாணி ஜெயராம், ஜானகி போன்ற 'பெண் பொம்மைகளை' பாட வைத்திருக்கின்றார்கள். பல்லாயிரக்கணக்கான பாடல்களைக்கொண்ட தமிழ்த் திரைப்பட உலகில் ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்ணைக்கூட பாட்டெழுத அழைப்பதில்லை. ஏன்? ஆண்களை மட்டும் தான் பாட்டெழுத விடமுடியும். ஏனென்றால் தமிழ் சினிமா பாடல்கள், தமிழ்க் கலாச்சாரத்தில் ஆண் ஆதிக்கம் நடத்தப் பயன்படும் ஒரு முக்கியமான ஆயுதம்.

படிக்கத் தெரியாத, படிக்கத் தெரிந்திருந்தும் படிக்கிற பழக்கமில்லாத தமிழர் கூட்டம் மிகப் பெரியது. ஆனால் தமிழ் சினிமாப் பாடல்களைக் கேட்காத ஒரு தமிழ்க் குழந்தையைக்கூட நாம் காண முடியாது. சினிமாப்பாடல்களை தமிழ்ச் சமுதாயத்தின் கூட்டு பிரக்ஞையை (collective consciousness) வழி நடத்தும் ஒரு அதிமுக்கிய கருவியாய்த் திகழ்கின்றன என்று நம்மால் சொல்லமுடியும். பிரபலமாகும் ஒவ்வொரு பாடலையும் நாம் பலமுறை கேட்பதால் இப்பாடல்களில் சொல்லப்படும் கருத்துகள் வெண்ணெயில் குண்டூசி பாய்வது போல் வெகு சுலபமாக நம் உள்மனதில் பதிந்து விடுகின்றன

சினிமாப்பாடல்களுக்கு விமர்சகர்கள் இல்லை என்பதனால், சினிமாப்பாடல்களை விமர்சனம் இன்றிக் கேட்கிறோம் என்றே கணிக்க வேண்டும்.

இப்படி தட்டிக்கேட்க ஆளில்லாமல் சுவாரசியமாக நம் மனங்களைச் சூறையாடிக் கொண்டிருக்கும் சினிமாப் பாடல்களே நம் சமூகநீதிக் கோட்பாடுகளையும் கட்டமைக்கின்றன. மேலே சொல்லப்பட்டுள்ள தமிழ் மரபுரீதியிலான கடமை/உரிமை கூறுகளின் கோட்பாடுகளைப் பேணிக் காப்பது மட்டுமன்றி அவற்றையே தனிமனித பிரக்ஞைக்குள் சினிமாப்பாடல்கள் திணிக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. இப்பாடல்கள் நம் கூட்டுநினைவில் (Collective Memory) ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதையும் மறந்துவிடக்கூடாது. இது மட்டுமன்றி இளம் வயதுள்ள ஆண்கள் பெண்களின் கனவுகளும் சினிமாப் பாடல்களின் பின்னணியில்தான் தோற்றம் பெறுகின்றன என்பதையும் அவதானிக்க வேண்டும். இதனால் ஆண்-பெண் காதல் உறவு இப்பாடலில் கிடைக்கும் நீதிநெறிச் சிந்தனைகளின் கட்டுப்பாட்டில்தான் அமைக்கப்படுகிறது.

தமிழ்க்கலாச்சாரத்தில் சினிமாப்பாடல்கள் பெண்களை ஒடுக்கும் ஒரு தீயசக்தியாய் விளங்குகின்றன என்று காட்ட சில வெகு பிரபலமான உதாரணங்களே போதும்.

**அடிக்கிற கைதான் அணைக்கும்!** என்று தொடங்கும் பாடல், பல்லாயிரத் தமிழ்ப் பெண்களின் வாழ்க்கையை இன்றும் அழித்துவருகிறது. அடிக்கிற கைதான் அணைக்கும், அப்படியென்றால் அடிக்காத கை அணைக்காதா? உன் கணவன் உன்னை அணைப்பவனாக இருக்க வேண்டுமென்றால், அவன் உன்னை அடிப்பவனாகவும் இருக்கவேண்டும் என்று சொல்லி கவிஞன் இவ்வன்முறைச் செயலை, கணவன் மனைவியை அடிப்பதை 'ஒரு அன்பின் சின்னமாக' உயர்த்தியிருப்பதை பெண்ணிய ரீதியிலான விமர்சனத்தால் எதிர்த்து இந்தப்பாடலைத் தடை செய்ய வேண்டும். பின்வரும் மற்ற அடிகளிலும் அபத்தத்தைக் கலந்து தமிழரின் பிரக்ஞையில் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டான் கவிஞன்.

"இனிக்கிற வாழ்வே கசக்கும்" என்கிறான். "கசக்கிற வாழ்வே இனிக்கும்" என்கிறான். இப் பாடல் நேர்மையான கண்ணோட்டத்தை வெளிக் கொணர வேண்டுமானால்

"அணைக்கிற கைதான் அணைக்கும்
இனிக்கிற வாழ்வே இனிக்கும்
கசக்கிற வாழ்வே கசக்கும்" என்று எழுதப் பட்டிருக்கவேண்டும் என்றால் வியப்படையாதவர்கள், ஆணுக்குப் பெண்துணை தேவையென்றால் வியப்படையக்கூடும். இதற்கு ஒரு முக்கிய காரணம், இந்தப் பாடலைப் போன்ற இலக்கியங்களும் கலைப்பொருட்களும் தான்.

"மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" என்ற பாடலின் கடைசி வரியாக அமையும் "கணவனின் துணையோடுதானே காமனை வென்றாக வேண்டும்" என்பது, பெண்களிடம், உங்களிற்கு ஆண்கள் முக்கியம் தேவை. உங்கள் பாலுணர்வுகளை உங்கள் கணவர்கள் இல்லாமல் தணித்துக் கொள்ள முடியாது என்று எடுத்துரைக்கின்றான் கவிஞன், மனைவியின் துணையோடுதானே காமனை வென்றாக வேண்டும் என்றும் சொல்லியிருக்கலாம். அந்தப் பாடலின் உள்ளடக்கத்தின் பண்பு அதற்கும் இடம் கொடுக்கிறது. அப்படி இருந்தும் "கணவனின் துணையோடுதானே காமனை வென்றாக வேண்டும்" என்று சொல்லியிருப்பது பெண்ணுக்கு ஆண்துணை அவசியம் தேவை என்பதைப்போல் நம்மை வந்தடைகின்றது. இக்கருத்து நம் உள்மனதில் ஆழமாகப் பதிந்து இதுவே சமூகத்தில் உண்மை என்ற தோற்றம் பெற்றுவிடுகிறது. அதற்குத்தான் இன்றும் பெண்ணுக்கு ஆண்துணை தேவை என்றால் யாரும் வியப்படைவதில்லை. ஆனால் காதலின் ரீதியிலும், கலவியின் ரீதியிலும், இல்லறவாழ்வின் ரீதியிலும், மற்ற வாழ்க்கையின் எல்லாப் பரிமாணங்களிலும், ஆணுக்கு பெண்ணின் துணை தேவை. **இன்று பெண்ணுக்கு ஆண்துணை தேவை.**

இன்றைய தமிழ் சினிமாப்பாடல்களை எடுத்துக் கொண்டோமென்றால் முன்பைவிட நிலைமை மோசமடைந்து கொண்டே வருகிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

"காலங்களில் அவள் வசந்தம்" என்று இயற்கையின் துணைகொண்டு வர்ணித்த காலம் போய்விட்டது.

"50kg தாஜ்மஹால்", "flight இல் வந்த நந்தவனம்" என்று பெண்ணை ஒரு பொருள், அதுவும் விமானத்தில் பறக்கும் பொருள் என்று பாட்டு எழுதுபவர்களைக்கொண்டு செயல்படுகிறது இன்றைய தமிழ் சினிமா.

தமிழ் சினிமாக்களில், பெண்ணை ஒடுக்கி வைக்கும் கருத்துக்களைக் கொண்ட பாடல்கள் ஏராளம். இவைகள் விமர்சனத்துக்குட்படுத்தப் பட்டு, எதிர்க் குரல்களால் இவற்றின் சக்தி ஒடுக்கப்படவில்லை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யெனில், தமிழ்ச்சூழலில் பெண்ணின் நிலை உயர எண்ணுவது கானல்நீர் போல்தான் நீடிக்கும் என்பது உண்மை.

இன்றைய 'டாப் ஹிட்'டான ஜீன்ஸ் படப்பாடல்களில் ஒன்றான "எனக்கே எனக்கா"என்ற பாடலை எடுத்துக்கொள்வோம்.

அதில் ஐந்து முக்கிய 'கருக்களை' தேர்ந்தெடுப்போம்.

1. ஆண் தன்னால் பெண்ணுக்கு என்ன தர முடியும் என்று சொல்வது

2. பெண் தன்னால் ஆணுக்கு என்ன தர முடியும் என்று சொல்வது

3. பெண் ஆணைப் புகழ்வது

4. மெய்யியல் (metaphysical) ரீதியில் ஆண்-பெண் உறவில் ஆணும் பெண்ணும் வகிக்கும் இடம்

5. ஆண் பெண்ணைப் புகழ்வது

இவ்விமர்சனம், கவிஞன், ஆணும் பெண்ணும் இச்சமூகத்தில் எந்த சமூகப்பாத்திரத்தை (social role) வகிக்கவேண்டும் என்று எடுத்துரைப்பதை வெளிக்கொணர உதவும். கவிஞன் ஆணாதிக்கத்தின் பிரதிநிதியாக, இப்பாடலின் மூலம் ஆணுக்குச் சாதகமான ஒரு social role ஐ அமைத்துக் கொடுத்து பெண்ணுக்குப் பாதகமான இடத்தை ஒதுக்கிப் பாடியிருக்கிறான் என்று இவ்விமர்சனத்தின் முடிவில் தெளிவாகும்.

## 1. ஆண் தன்னால் பெண்ணுக்கு என்ன தரமுடியும் என்று சொல்வது

*"அன்பே இருவரும் பொடிநடையாக*
*அமெரிக்காவை வலம் வருவோம்*
*கடல்மேல் சிவப்புக் கம்பளம் விரித்து*
*அமெரிக்காவில் குடிபுகுவோம்"*

ஆண் முன்மொழிகிறான்: வா கண்ணே என்னுடன் சேர்ந்து இவற்றையெல்லாம் நான் செய்ய உன்னை அழைக்கிறேன் (சந்தோஷமான விஷயம்தான்!). உலகைச் சுற்றிப் பார்க்கும் உன்னத சுகத்தை என்னால் உனக்குத் தர முடியும் என்கிறான்.

## 2. பெண் தன்னால் ஆணுக்கு என்ன தரமுடியும் என்று சொல்வது

*"முத்தமழையில் நனைஞ்சுக்கலாமா*
*கூந்தல்கொண்டு துவட்டிக்கலாமா"*

இந்தப் பாடல் முழுவதும் பெண் ஆணுக்கு என்ன சொல்கிறாள் என்றால், வா என்னுடன் வந்து இதைச் செய் என்று சொல்வது இவற்றை மட்டும்தான். அதாவது தன் உதடுகளையும் (முத்தமழையில் நனைய), தன் உடலையும் கூந்தலையும் தரமட்டுமே வல்லவளாக படைக்கப்பட்டிருக்கிறாள். ஆணுக்கு இருக்கும் உன்னதத்தன்மை பெண்ணுக்கு மறுக்கப்பட்டிருப்பதை அவதானிக்கவேண்டும்.

## 3. பெண் ஆணைப் புகழ்வது

*விண்ணைத் தாண்டி நீ*
*வெளியில் குதிக்கிறாய்*
*உன்னோடுதான் என்னாலதான் (எனக்கு)*
*கும்மாளமோ கொண்டாட்டமோ*
*காதல் விழியில் நீ காற்றைக் கழிக்கிறாய்*
*பிள்ளை மனம்தான்*
*பித்தாகுமோ என்னாகுமோ*

ஆண்மகனே உன்னால் உலகைவிட்டு வெளியில் சென்று குதிக்க இயலும், குதிக்கிறாய். உன்னோடுதான் எனக்குக் கும்மாளமும் கொண்டாட்டமும். காதல்(உன்னதமான பொருள்) அதனுடன் எனக்குத் தொடர்பு இருக்கிறது. உனக்கு பிள்ளை மனம், நீ மாசு படியாதவன். உன் மனம் மாதவியைக் கண்ட கோவலனைப் போல் பித்துப்பிடித்து விடுமோ என்னவோ.

*உன் காதலை நீ சொன்னதும்*
*தென்றலும் பறவையும்*
*காதல் தோல்வியில் கலங்கியதே*

நம் காதலை நாம் சொன்னதும் தென்றலும் பறவையும் காதல் தோல்வியில் கலங்கியதே என்று பாடியிருந்தால் கதையே வேறாக இருந்திருக்கும். ஆனால் உன் காதலை நீ எனக்கு அறிவித்ததால் உன்னோடு காதல் கொண்டிருந்த தென்றலும் பறவையும் காதல் தோல்வியில் கலங்கியது. தென்றலும் பறவையும்கூட உன்னிடம் காதல் கொண்டிருந்தது என்று புகழ்கிறாள் பெண்.

## 4. மெய்யியல் (metaphysical) ரீதியில் ஆண்-பெண் உறவில் ஆணும் பெண்ணும் வகிக்கும் இடம்

ஆண் - எனக்கே எனக்கா?
பெண் - எனக்கே எனக்கா!

ஆண் கேட்கின்றான், பாடலின் துவக்கத்தில் எனக்கே எனக்கா? என்று. பெண் பிரமித்து நிற்கிறாள். ஆச்சரியக்குறியைப் பின்வைத்து சொல்கிறாள். நான் எனக்கே என்றா கேட்கிறாய்? என்ன கேள்வி இது. நான் உனக்குத்தான். இதைச் சொல்லி முடித்தபின், ஆண் தொடர்கிறான்.

ஹைரப்பா - (கடவுளே என்று பொருள்)
*50kg தாஜ்மகால் எனக்கே எனக்கா?*
*பிளைட்டில் வந்த நந்தவனம்*
*எனக்கே எனக்கா?*

பெண் - கடவுளே, கடவுளே (இது என்ன கேள்வி)

இதில் பெண் ஆணின் உடமை. ஆனால் அந்த ஆண், அந்தப் பெண்ணின் உடமை என்று சொல்லாமல் விட்டதால், இந்த விடயத்தில் ஏற்றத் தாழ்வு தெரிகிறது என்று கணிக்க நமக்கு உரிமை இருக்கிறது.

*சிந்தும் மழைத்துளி மண்ணில் விழுவதே*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**உன் கன்னத்தில் நீராடத்தான்**

மழை உடலில் விழுந்தால் உடல் முழுவதும் நனையும். ஆனால் எல்லாருக்கும் தெரியும் கன்னங்களில் வழிவது கண்ணீர் மட்டுமே என்று. **மழைத்துளி மண்ணில் விழுவதே உன் கன்னத்தில் நீராடத்தான்** என்பது, உன் கன்னங்களில் நீர் வடியும். நீ அழுவதற்காகப் பிறந்தவள் என்று சொல்வதுபோல் இருக்கின்றது.

**இதயத்துடிப்பு நின்றாலும்,**
**அன்பே என்னுடன் உயிரிருக்கும்**
**அன்பே என்னை நீ நீங்கினால்**
**ஒரு கணம் என்னுயிர் தாங்காது**

அவன் போய்விட்டால் (ஒரு கணம் நீங்கினாலும்) அவள் உயிர் தாங்காது. இந்த இரண்டு வரிகளிலும் பெரிய மாயவித்தையே இருக்கின்றது.

சில ஆண்டுகளுக்கு முன் விஞ்ஞானிகள் கண்டு பிடித்தார்கள், உயிர் நீங்குவது மூளை நிற்கும் சமயத்தில்தான் என. ஆனால் முன்பு நம்பப்பட்டது இதயம் நின்றுவிட்டால் உயிர் போய்விடும் என்று. அதனால் அவள் சொல்கிறாள், இதயம் நின்றாலும் உன் உயிர் என்னுடன் தான் இருக்கும். ஆனால் நீ நீங்கி விட்டால் என்னுயிர் தங்காது என்று.

இதற்குப் பொருள் என்னவென்றால், அந்தப் பெண்ணின் (அவள் மூளையே அவன்தான்) உயிரையே அவள் உடலில் வைத்துக் காப்பவன் அந்த ஆண்தான். அப்படியென்றால் அவன் கடவுளுக்குச் சமமானவன். ஏனென்றால் கடவுளுக்கு மட்டும்தான் ஒரு உடலுள் உயிரை வைத்துக் காப்பாற்றும் சக்தி இருக்கின்றது என்று எல்லா மதங்களும் நம்புகின்றன. (God sustains the life). இந்தப் பாடலில், அந்தப் பெண் அப்படிப் பாடுவதால், 'கணவனே கண்கண்ட தெய்வம்' என்று வாழ்ந்த அக்காலத்துப் பெண்டிருடன் அவள் சேருகிறாள். அவனும் முந்தைய தலைமுறையில் வாழ்ந்த புருஷர்களுள் ஒருவனாகிறான்.

இப்பாடலை கட்டுடைப்பதன் மூலம் ஒரு விடயம் தெளிவாகிறது. அந்தக் காலத்துக் கவிஞர்கள் 'அவள் காஞ்சிபுரத்தோடு வந்தாள்' என்று பாடினால், அவள் காஞ்சிபுரத்து மக்களோடு வந்தாள் என்று பொருள். ஆனால் தற்காலக் கவிஞர்கள் 'அவள் காஞ்சிபுரத்தோடு வந்தாள்' என்று பாடினால், அவள் காஞ்சிபுரப் பட்டுப்புடவையோடு வந்தாள் என்று புரிந்து கொள்ளவேண்டும். இந்த மாற்றம், பெண்களை ஒடுக்கும் பாடல்கள், மிகத் துல்லியமான இலக்கியத் திறனுடன் எழுதப்படுகின்றன என்பதனை எடுத்துக்காட்டுகின்றது.

## 5. ஆண் பெண்ணைப் புகழ்வது

**ஒற்றைக் காலிலே பூக்கள் நிற்பது**
**உன் கூந்தலில் நின்றாடத்தான்**
**பட்டுப் பூவே குட்டித்தீவே**
**விரல் இடை தொட வரம் கொடம்மா**

இவை கவிஞன் பெண்ணுக்கு அளிக்கும் 'நன்கொடை' என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். "பூக்கள் நிற்பதே உன் கூந்தலில் நின்றாடத்தான்" என்பது அழகான சிந்தனை. பட்டுப் பூவே என்பது, உயிரில்லாத பூவாகப் பெண்ணைச் சித்தரித்தாலும், பட்டு என்ற உரிச்சொல், அதை ஈடுகட்டுகிறது. விரல் இடை தொட வரம் கொடம்மா. சொல்வதையெல்லாம் சொல்லி விட்டு என்னால் உன்னை மதிக்கவும் 'கொஞ்சம்' தெரியும் என்று சொல்லும் கவிஞனைக் குறை சொல்வது...

ஆராயப்படாத வரிகள்:

ஆண்: **துண்டை எடுத்து உடுத்திக்கலாமா?**
**உதட்டின் மேலே படுத்துக்கலாமா?**
**உதட்டின் மேலை படுத்துக்கலாமா?**

என்று ஆண் கேட்பதற்குப் பல விளக்கங்கள் தரலாம். ஆனால் கவிஞனின்மேல் நமக்கிருக்கும் அன்பால், இவ்விரு வரிகளையும் 'அமைதியாக' வாழவிடுவோம்.

புரியாத வரிகள்:

ஆண்: நானும் உன்னை முத்தாடவா?

பெண்: **Fax இல் வந்த பெண் கவிதை உனக்கே!**

நானும் உன்னை முத்தாடவா என்ற வாக்கியம் எனக்குப் புரியவில்லை. **Fax இல் வந்த பெண் கவிதை உனக்கே** என்று சொல்வதன மூலம் நான் எழுதி உனக்கு faxஇல் அனுப்பிய கவிதை உனக்கே என்று அந்தப் பெண் சொல்கிறாளா, இல்லா, Faxஇல் வந்த பெண் கவிதையே நான்தான் என்று சொல்கின்றாளா? என்று புரியவில்லை.

இப்படிப் பெண்களை ஒடுக்கும் ஆயுதமாகப் பயன்படும் சினிமாப் பாடல்கள் நமக்கு அலாதி சுகம் தருகின்றன என்பதில் சந்தேகமில்லை. இச் சுகத்தின் மூலக் காரணத்தை அறிய குறைந்த பட்சம் இன்னொரு கட்டுரையாவது வேண்டும். சினிமாப்பாடல்கள் இல்லாமல் போய்விட்டால் வாழ்க்கை பாலைவனமாக மாறிவிடுமோ என்ற ஐயமும் இருக்கின்றது.

சினிமாப் பாடல்கள் பெண்ணை ஒடுக்கப் பயன்படும் தீயசக்திகள். அவற்றின் கொடூரத்தை எதிர்த்துப் போராட விமர்சனத்தை தவிர வேறு வழியில்லை.

இவ்விமர்சனத்தைப் படிப்பவர்களில் சிலர், இவ் விளக்கங்களையெல்லாம் மனதில் தாங்கிக் கொண்டு கவிஞன் படைத்திருக்கமாட்டான் என்று நினைப்பார்கள். அவர்களின் முட்டாள்த் தனத்தை வெட்டிப் புதைக்க நான் வைத்திருக்கும் வாள் பிரெஞ்சுத் தத்துவஞானியான 'மெர்லோ போன்ற' யின் வாக்கியம் ஒன்று.

"சொல்பவனைவிட, அதைக் கேட்பவர்களுக்கு, சொல்லப்பட்டதன் விளக்கம் முழுமையாக விளங்க வாய்ப்பிருக்கிறது"

இது இப்படி இருக்க...

**காதோடு கேட்பதெல்லாம் தலைவி...** விமர்சனத்துக்குள்ளாக்கப்பட வேண்டும். இல்லையேல் பெண்விடுதலை என்பது கானல் நீராகிவிடும். ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இன்னும் எஞ்சியுள்ளன...

மெதுவாகத் தன் தலையைத் திருப்பி ஒரு பார்வை, பதிலேதுமில்லை. தாவீதின் தலை மீண்டும் குனிந்து கொண்டது

"கேட்பதற்குப் பதில் சொல். நான் பொலிஸ்காரன்."

"நான் ஏதும் செய்யவில்லை, குற்றமானதாக."

"பரவாயில்லை. நீஇங்கு இருக்கக் கூடாது. இது உனக்குத் தெரியுமா?"

"ஏன்? நான் இந்தநாட்டுப் பிரஜை. பிரஜாவுரிமை அற்றவனல்ல."

"அதுசரி. நீ எங்காவது போகலாம் இந்த வட்டாரத்தைத் தவிர."

"ஏன் இந்த வட்டாரத்தில் வாழ எனக்கு உரிமையில் லையா?"

**"நீ உன் உரிமையைக் கோருவது சரி. அது மற்றவர்களின் உரிமையை மறுக்கும் தொனியில் இருக்கக்கூடாது அதுதான் பிழை."**

"நான் அப்படி என்ன செய்து விட்டேன். என்னை நிம்மதியாக விடு."

அந்த சர்வதேச உதைபந்தாட்டப் போட்டிக்காய் பரிஸ் பட்டணம் பரபரப்பாக தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தது. அறுபது வருட இடை வெளிக்குப் பின் மீண்டுமொரு முறை தொழிலாளிகளும், அறிவாளிகளும் குவிந்து கிடக்கும் உலகின் குப்பைமேடான இப் பட்டணத்தை ஒழுங்குபடுத்தியெடுப்பதற்கு பிரஞ்சின் அரச யந்திரம் பகீரதப் பிரயத்தனத்தில் இறங்கியிருந்தது. அல்ஜீரிய இஸ்லாமியத் தீவிர வாதிகளிடமிருந்து எந்தவித எதிர்ப்பு நடவடிக்கைகளும் ஏற்பட்டு விடக்கூடாதென்பது தொடக்கம் சாலைகளை சுத்தம் செய்து முடிப்பது வரை கடலளவு கவலைகள் அதற்கு. உதை பந்தாட்டப் போட்டி நடைப்பதற்கென்றே எண்பதாயிரம் இருக்கைகளைக் கொண்ட அந்த பிர மாண்டமான மைதான அரங்கு கட்டி முடிக்கப்பட்டுக் கொண்டிருந்தது, பட்டணத்தின் வடக்கு நோக்கிய புறநகர்ப் பகுதியான சென்-டெனிஸ் பிரதேசத்தில்.

படையினரின் பாதுகாப்பு முன்னேற்பாடுகள்...

பேருந்துகளின் நிறந்தீட்டல்கள்....

போட்டி முடிவுகளை உடனுக்குடன் அறிவிக்க போக்குவரத்துக் கம்பனியால் அமைக்கப்படும் தற்காலிக மத்திய நிலையங்கள்...

ஆங்காங்கே அநேகமான ஐரோப்பிய மொழிகளில் அறிவிப்புப் பலகைகள்.

கொக்காகோலாவின் விளம்பர உத்தியாளர்களின் கெட்டித்தனங்கள்....

உலகில் எல்லாமே இந்த கிண்ணந்தான் என்ற மாயையில் கட்டுண்ட மக்களின் விவாதங்கள் வீதிவீதியாய்... வீடுவரை.

பட்டணத்தின் இத்தனை நிகழ்வுகளுக்கும் பதினெட்டாம் வட்டாரமே மகுடம். காரணம் அதுவே சென்டெனிஸ் செல்வதற்கான அண்மிய பகுதி. அதே வேளை இங்குதான் வெளி நாட்டார் எனச் சொல்லப் படுவோரின் பெரும்பான்மைக் குடியிருப்புகள்.

கள்வர் காடையர் எனப்படுவோரின் உல்லாச உலாத்தல்கள்.

வீதித்தொழில் செய்யும் விபச்சாரிகள், போதைப் பொருளினை புகலிடமாக்கியோர், வதிவிடமற்ற வைன்கேசுகள் எனப்படுவோர்களின் எஞ்சியுள்ள வாழ்க்கையின் சில நாட்கள்.

சமூகத்தின் எல்லைகளில் எஞ்சியிருந்த இந்தக் கூட்டத் தின் ரின் தஞ்சமாகிப் போன வீதிகளின் சந்துபொந்துகளும், சுரங்கரயில்களின் சந்தடி குறைந்த மூலைமுடுக்கு வழி நடைப் பாதைகளும் பொலிசாரின் கழுகுப் பார்வைக்குள். இவர்களையெல்லாம் அந்நியச் செலாவணியை அள்ளிக்கொண்டு வரும் வெளிநாட்டாருக்கு மறைப்பதெப்படி. எங்கே எப்படி இவர்களை அப்புறப்படுத்த முடியும்!

தாவீது இவன் பிரஞ்சு காலனித்துவத்தில் இன்னும் எஞ்சியுள்ள 'மாட்டினிக்' தீவைச் சேர்ந்தவன். இரண்டாம் உலகப் போரில் குடும்பங்களை இழந்து பிரெஞ்சு நாட்டிற்காய்ப் போராடியவன். தகுந்த 'கடதாசி' அத் தாட்சிகளின்றி தன் வாழ்க்கையின் தன் தேசத்திற்கான அர்ப்பணிப்பை நிரூபிக்க வழியின்றி இன்றோ நாளையோவென்று தன் இறுதி நாட்களை எண்ணிக் கொண்டு சுரங்க வீதிகளில் வாழ்பவன். வைன் போத்தல் சகிதம்.

"இங்கு நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

மெதுவாக எழுந்து நடக்க முயன்ற தாவீது கிழவனின் அந்த நீண்ட காற்சட்டை பின்புறம் முழுக்க நனைந்திருந்தது. அவனது சிறுநீரால் மட்டுமல்ல மலத்தாலும். ஒரே துர்நெடி. மூக்கைப் பொத்திக்கொண்ட பொலிஸ்காரன்.

"இதோபார்! நீஇந்த இடத்தில் மலசலம் கழித்திருக்கிறாய். அது மற்றவருக்கு தொந்தரவைக் கொடுப்பதாகும் என்பது தெரியாதா?"

"அப்படியானால் நான் எங்கு அதைச் செய்வது. எனக்கென்று தான் வீடு இல்லையே. அது உனக்குத் தெரியாதா?"

"எனக்குத் தெரிகிறது ஆனாலும் பொது மலசலகூடங்களுக்கு பரிஸில் குறைவில்லையே. மதுபான சாலைகளுக்குள் கூட நீ அதைச் செய்யலாம்."

"மதுபானசாலைகளுக்குள் என்னை அனுமதிக்க மாட்டார்களே! பொது மலசலகூடங்கள் பணமின்றித் திறந்து கொள்ளாதே."

" அது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வொன்றும் பெரிய தொகையல்லவே ஒன்றோ இரண்டோ பிராங்குகள்தான்."

"அது உனக்கு பெரிதாயில்லாமலிருக்கலாம். ஆனால் எனக்கு?"

"நீ அதிகம் கதைக்கிறாய்."

"அது ஒன்றும் குற்றமில்லையே. நாங்கள் இன்னும் பிரஞ்சு நாட்டில்தானே உள்ளோம்."

"இருக்கலாம். ஆனாலும் பரிஸ் பட்டணத்துச் சாலைகளில் மலசலம் கழிப்பது சட்டப்படி குற்றமாக்கப்பட்டுள்ளது."

"சட்டம் யாருக்காக உண்டாக்கப்பட்டது. பணம் உள்ளவர்களுக்காக பணமுள்ளவர்களால் அது தெரியுமா உனக்கு. சட்டம் எங்களை கவனத்தில் எடுக்கவில்லையே. இப்பட்டணத்து செல்வச்சீமாட்டிகளின் நாய் பூனைகளெல்லாம் காலையும் மாலையும் சாலைகளை என்ன பாடுபடுத்துகின்றன. அதுவெல்லாம் மற்றவர்கட்கு தொந்தரவில்லையா என்ன?"



"அவற்றையெல்லாம் துப்பரவு செய்ய நகரசபையினால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது."

"அப்படியானால் எங்கள் மலசலங்களையும் கழுவ..."

ஜீப் வண்டி அண்மையில் உறுமிக் கொண்டுவந்து நின்றது. நான்கு பொலிஸ்காரர்கள் கைவிலங்குகளுடன் அதிலிருந்து திமுதிமுவென்று குதித்து வந்தனர். ஒரு பிடி உமிப்பாரம் கூட தூக்க நாதியற்ற இந்த தாவீதை நோக்கி... ●

14.06.98

# பஸ்ஸ எழுமனஷ்! பஸ்ஸ எழுமனஷ்!

என்றோ ஒரு நாள் எழுமெனத்தானோ
இத்தனை காலம் தூங்கிக் கழிக்கின்றோம்

என்றோ ஒரு நாள் எழுமெனத்தானோ
பூகோளத்தின் எல்லாத் திக்கிலும்
தூசிப்படலமாய்...
அந்தந்த நாட்டினர் முகத்தைச் சுழிக்கும்
அகதிப் பிண்டமாய்...
மிதந்தலைகின்றோம்.

எப்போ எழுமென
நாளுமறிகிலோம்
எப்படி எழுமென
குறியுமறிகிலோம்
இப்படி எழுமென
நுண்மான் நுழைபுலம் எதுவுமறிகிலோம்

எப்படி ஆயினும்
நாங்கள் மக்கள்!
திடமாய் இருக்க உறுதி பூண்டனம்!

எல்லாவற்றையும் மறந்து பேசியும்
எல்லாவற்றையும் மறைத்துப் பேசியும்
எல்லாவற்றையும் திரித்துப் பேசியும்
எல்லாவற்றையும் பேசாதிருந்தும்
திடமாய் இருக்க உறுதி பூண்டனம்
திடமெனப்படுகிற ஜடத்தொடு ஜடமாய்.

எங்கெங்கு காணினும்
வரலாறென்பது இரண்டாய் உள்ளது
வார்த்தை கொண்டு எழுதப்படுவதும்
வாழ்வு கொண்டு எழுதப்படுவதும்

வாழ்வுகொண்டு எழுதப்படுவதால்
ஆழ்மன அடியை ஆள்பவன் கவிஞன்.
என்றோ வேண்டாம் இன்றே எழுக!
மானுட விழுமிய கூறுகளனைத்தும்.

இரா. ரஜீன்குமார்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# என்ன வரம் தந்திர் பரம்பொருளே!

**மரங்கொத்தி**


புலவர் பொன்னையா பூலோகத்தில் இருந்து மேலோகம் செல்கிறார். லண்டனில் நடக்கும் பாரிய பிரச்சனையாம் 'கானக்குயில் 98' க்கு ஒரு முடிவு தரமுடியுமா என்று அந்த எல்லாம் வல்ல இறைவனிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதுவே அவரின் விஜயத்தின் நோக்கம்: வானொலிகளில் பாட்டுக்குப்பாட்டு போட்டி நடக்கும். வானொலிகளுக் கிடையே போட்டிக்குப் பாட்டு என்றால் யாராலே ஆறுதல் சொல்லமுடியும். ஆண்டவா! என்று அழுது கொண்டே ஆண்டவனின் உறைவிடம் சென்ற பொன்னையாவுக்கு அங்கொரு அதிர்ச்சி காத்துக் கிடந்தது. பரம் பொருள் குறைகேட்டறியும் மண்ட பத்தில் சிவனும் பார்வதியும் பேச்சு எதுவுமின்றி ஆளுக்கு ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கின்றனர்.

**புலவர்:** என்ன நாரதா நடந்தது?

**நாரதர்:** அம்மை அப்பனுக்கிடையில் யார் பெரியவர், யார் கூட காசு உழைக்க வல்லவர் என்ற விவாதம் வந்து, கடைசியில் இருவரும் பிரிந்து விட்டனர்.

**புலவர்:** லண்டனில் நடக்கும் அதே பிரச்சனை போலவே இருக்கிறதே. எந்த வானொலியைக் கேட்க இருந்தாலும் ஒரே ஒப்பாரியாய்க் கிடக்கு. ஒரு முடிவு தெரிஞ்சு போவம் எண்டா, இங்கேயும் அதே பிரச்சனை! எதற்கும் அம்மையை முதலில் நாடுவோம்.

[புலவர் அம்மையை நோக்கிச் செல்கிறார். திருமதி தில்லைநாதன் யோகமாய் அமர்ந்திருக்கிறார்.]



PUTHINAM

## கானக்குயில் இசை நிகழ்ச்சி தொடர்பாக வதந்திகள் பல உலாவுகின்றன

நேயர்கள்,ரசிகர்கள் குழப்பம் அடைய வேண்டியதில்லை

93ம் ஆண்டு முதல் இவ்வருடம் 6வது ஆண்டாக நடைபெறும் கானக்குயில் பாடலிசைப் போட்டி 'சன்றைஸ்' வானொலி தமிழ்ச் சேவையின் முழு உரிமை பெற்றது

சன்றைஸ் வானொலி பெருமையுடன் 6வது ஆண்டாகப் பெருமையுடன் ஐரோப்பாவின் ஒப்பற்ற இசைமாலை

## சன்றைஸின் கானக்குயில் 98

20ஜூன் 1998 சனிக்கிழமை மாலை சரியாக 6 மணிக்கு

LEE VALLEY LEISURE CENTRE
PICKETTS LOCK LANE
EDMONTON, LONDON N9

சன்றைஸ் வானொலி தமிழ்ச் சேவை 0181-904 5933

7



PUTHINAM

லண்டனில் 6வது ஆண்டாக பெருமையுடன் வழங்கும்

## கானக்குயில் 98

ஐரோப்பாவின் புகழ்பெற்ற RAINBOW இசைக்குழுவின் பின்னணி இசையில்
1998 JUNE 13ம் திகதி சனிக்கிழமை மாலை 6.30மணிக்கு
LOGAN HALL(University of London)
20, BEDFORD WAY , Off Russel Square, LONDON WC1 இல் நடைபெறுகிறது

'ஆம், இல்லை' போட்டி

RAJU PATTNI & SON , WESTERN JEWELLERS வழங்கும் முதற் பரிசுகள்

'கானக்குயில் 98' நடக்கும் லோகன் மண்டப பிரவேச டிக்கட்டுகளை வாங்கும்போது, ஜூன் 13 நடக்கும் றெயின்போ இசைக்குழுவின் பின்னணி இசையில் நடைபெறும் 'கானக்குயில் 98' க்குரிய டிக்கட் எனக் கேட்டு வாங்குங்கள்.

8

ஒரே இதழில் வெளியான இரு விளம்பரங்களும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அம்மை: புலவரே இங்கு வாரும். எனக்கு நித்தியானந்தப் பரம்பொருளுடன் ஒரு சண்டை. அதனால் நானும் ஒரு பாட்டுப்போட்டி வைக்கிறேன். அதிலே நீ பாடவேண்டும். அப்படி நீ பாடினால் உனக்கு நான் 'கானக்குயில் 98' என்று பட்டம் சூட்டுவேன்.

புலவர்: அம்மையே! அடுத்த மூலையில் அமர்ந்திருக்கும் நித்திய ஆனந்தம் போல் பரம்பொருள் தானும் ஒரு போட்டி வைப்பதாக நாரதன் சொன்னானே. அப்படியானால் எந்தக் கானக்குயில் சிறந்தது? எது உண்மையான கானக்குயில்?

தில்லை: முட்டாள், நானே பாட்டைக் கண்டுபிடித்தேன். நானே குயிலையும் கண்டுபிடித்தேன். அவர் உத்தமன் போல் பேசுவது வேடிக்கை. வினோதம். ஆகவே நான் பிடிக்கும் குயில்தான் உண்மையான குயில் எனவே பேச்சை நிறுத்திப் பாடத்தொடங்கு.

[புலவர் செய்வதறியாது பாடுகிறார்]

*கானம் கண்டாய்,*
*குயிலையும் தந்தாய்*
*தில்லைநாதனின் துணையே!*
*யோகமாய் இருந்து*
*போட்டியைத் தொடுத்தாய்*
*காசாய்க் குவியட்டும் தாயே!*
*இந்தியச் சினி இசை*
*எங்களை ஆழ்வதா*
*என்றே முழங்கிய தேவி!*
*எல்லாம் மறந்தாய்*
*போட்டி தொடங்கினாய்*
*என் சொல்வேன்!!*
*ஈழத்துப்பாட்டு காசு கொடுக்காது*
*புண்டயிலை[1] ஆகட்டும் அதுவே!*
*பாடுவேன் பாட்டு கக்கக் கல்லூரிச்சாலை*
*தருவீரோ கா கா கா கா கானக்குயில் 98.*

[[1]புண்ட இலை: ஓட்டை விழுந்த இலை பந்திக்குதவாது. அதுபோல் ஆகட்டும் ஈழத்திசை]

பாடலைப் பாடிவிட்டு 'கானக்குயில் 98' பட்டத்துடன் புறப்படத் தயாராயிருந்த பொன்னையாவைக் கண்ட நித்திய ஆனந்தப் பரம்பொருள் சீற்றமுடன் எழுந்து வருக இவ்விடம், எங்கே புறப்பட்டீர் என்றார்.

[புலவர் முணுமுணுக்கிறார்: இது என்ன வம்பு. ஒரு வருடத்தில் இரண்டு பட்டம் அதுவும் ஒரே பேரில்...]

நித்தி: புலவா! (வான்) ஒலியை முதலில் தந்தவன் நானே! என்னிடம் அடிமையாய் இருந்தவள் தில்லையம்மணி. அவளின் பட்டம் செல்லாக்காசு. இந்தப் பட்டம் ஒரு புண்டயிலை. நீ வை அதை அண்டயிலை. நான் தருகிறேன் உண்மையான பட்டம். எனது போட்டியில் நீ பாடத் தொடங்கு.

புலவர்: நீரும் இந்திய சினிமாப்பாடல் பற்றிப் பேசி இருக்கிறீரே! மறந்து போய் விட்டதோ! காசு வரும் கலை என்றால் கத்தரிக்காய் பற்றிப் பேசுகிறேன் என்று சிரிப்போ. நன்றாகச் சிரியும். இன்னும் எத்தனை கானக்குயிலோ எதிர்காலத்தில்...

[புலவர் பாடத் தொடங்குகிறார்.]

*ஒலி முதல் தந்தவனே!*
*கெலி கொண்டாய்*
*அம்மை புதுப்போட்டி தொடங்க,*
*கொட்டை[2] மேனியுடன்*
*கப்பல் பழம் இருக்க*
*தட்டத் தனியிருந்து*
*கட்டாயம் வைப்பேன்*
*கானக்குயில் என்றாய்*
*விட்டுவிட மாட்டேன்*
*பட்டம் கொடுப்பதனை*
*தொட்டுவிடு பாடல் எனச்*
*சொன்னவனே!*
*ஈழத்து இசை இங்கு*
*அரித்த கொட்டையாகட்டும்*
*அள்ள நினைப்பவனே!*
*நல்ல கானமும் [3]'புண்டரியம்'*
*உனக்கெதற்கு*
*தந்தேன் பாட்டு இதோ!*
*கொக்கு சைவக் கொக்கு கொண்டை*
*மீனைக் கண்டு*
*மன்னிக்க மகானே! மச்சமாய்ப் பாடினேன்.*
*அள்ளித் தா 'கானக்குயில் 98'*

[[2]கொட்டை: உருத்திராட்சக் கொட்டை
[3]புண்டரியம்: தாமரைப்பூ]

(இருவரும் 'கானக்குயில் 98' என்று பட்டம் கொடுக்க குழம்பிப்போன புலவர் இருந்த மயிரையும் புடுங்கிக் கொண்டு நடக்கத் தொடங்கினார்) ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அழுபீச்சு

ணங்... ணங்... ணங்... கொட்டின் சப்தம் தூக்கம் கலைத்தது. தப்பும் அலுக்கும் நீயா நானாவென போட்டி போட்டுக் கொண்டு... இருப்பினும் அதிலும் ஒரு தாளகதி. ஒரே சீராய் விட்டு விட்டு முழங்கிக் கொண்டிருந்தன. கொட்டின் தெறிப்பில் என்னுள் துளிர்த்த மகிழ்ச்சியின் ஈரம் ஒரு சில நொடிக்குள் உலர்ந்துவிட்டது. ஒலியிலிருந்து வழிந்து காற்றில் அழுதது துக்கக் குரல்களாய்... வாசிக்கும் முறை எழவு வீடென்று உணர்த்தும்போது, யாராய் இருக்கும், மனசு துடித்தது.

காலைக் காத்து குளிரெடுக்க, கட்டிலைத் தூக்கிக் கொண்டு போய் தாவாரத்தில் சாத்திவிட்டு, திண்ணையில் போய்ப் படுத்தேன். ம்கூம், தூக்கம் வரவில்லை. தூக்கத்தைத் துரத்திக் கொண்டிருந்தது எழவுக் கொட்டு. விரல்கள் வீசும் அசைவுகளை உள்வாங்கி ஒலித்துக் கொண்டிருந்தது. "ணங் ணங் ணங்..."

எந்த வீட்டிலிருந்து தப்படிக்கிறார்கள்? யாரு செத்துப் போயிருப்பா? மூளை வேகமாய் ஒலியின் பின்னே ஒளிந்துள்ள காரணகாரியங்களை ஆராய முற்பட்டது. அம்மாவும் பட்டியிலிருந்து சாணி எடுத்து வந்து வாசலில் தெளிக்கும் 'சளக் சளக்' கென்ற ஒலியும் சாணிப் பாலுக்கே உரிய வாசனையும் ஒரு கணம். கேள்விக்கான விடையை அம்மாவிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று குரல் கொடுத்தேன்.

"யாரு ஊட்லம்மா தப்பு அடிக்கிறாங்க?"

"என்னடாப்பா காத்தாலேயே முழிப்புத் தட்டிடுச்சா. என்னுமோ எம்பளாம்மெண்டோ என்னவோ போவுணும்னு எழுப்பச் சொன்னியே, அதான் எழுப்பலாம்னுட்டு இருந்தேன்... ஆ... அதான் நம்ப பரட்டையன் ஆயா இல்ல அந்தக் கெழவிதான் தவறிட்டா"

"ஓ! கறி போடுவாரே அவரு தானாம்மா?"

"ஆமா... ஆமா"

அதற்கு மேல் அம்மாவிடம் பேசத் தோன்றவில்லை. அதற்கு மேல் அம்மாவும் கிளறவில்லை.

ஏதோ ஒரு உருண்டையை முழுங்கியதுபோல் மூச்சு முட்டியது. பாட்டி, பாசமே மொத்த உருவமாய் அவதாரமெடுத் ததுபோல் அபூர்வ மனுஷியாய் இதுநாள் வரை அன்பைத் தெளித்துக் கொண்டோடிய நதி வற்றி விட்டதா? நினைக்க நினைக்கக் கண்ணீர் முட்டியது.

காற்று பெலமாய் வீச வீச முன்னிலும் அதிகமாய்க் கொட்டின் சத்தம் கேட்கிறது.

கூன் விழுந்த முதுகோடு கம்பு ஊணிக்கொண்டு பாட்டி வருவதைப் பார்த்தாலே நின்னுவிடு

**பாப்லோ அறிவுக்குயில்**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேன். என்ன ஏதுன்னு விசாரித்து முடிக்கும்வரை அமைதியாய்க் கேட்டுவிட்டுப் பொறுமையாய்ப் பதில்சொல்லிவிட்டுத்தான் அடுத்தடி எடுத்தடி வைப்பேன். பாட்டியும் அப்படித்தான் வெளியூர் போய் விட்டு நான் எப்ப வந்தாலும், ஊரின் எல்லையில் கால வைக்கும் போதே விசாரிக்கும் முதல் குரல் பாட்டியோட குரல்தான்.

"மவராசா வாடாப்பா வாடா நல்லாருக்கியா. ஒம்மா ஒன்ன நெனச்சித்தாண்டா புலம்பிகிட்டே கெடக்கா. புள்ள எளச்சிப் போச்சே. போப்பா போ. மொதல்ல ஊட்டுக்கு போயி ஒம்மா மொவத்த பாரு. களப்பெல்லாம் கரைஞ்சிடும்".

கனிவாய் விசாரித்து செல்லும் ப்பாட்டியின் அன்பு ரெண்டு மயிலு நடந்து வந்த களப்பை விரட்டி உடம்புக்கு புதுத் தெம்பே வந்தது போலிருக்கும்.

அதுபோல நான் விசாரிப்பதையும் காது குளிரக் கேட்டு, தல ஆட, கம்பு கோலம் போட, வெத்தலை எச்சில் கடவாயிலிருந்து வழிய, முகத்தை வருடி ஆசையாய் ரெட்டி முறிக்காமல் பாட்டியும் விடாது. அந்தப் பாட்டியா...? தொண்டை அடைத்தது.

அன்பே ஊனாய் உடலாய் உயிராய். அன்பின் மொத்த உருவாய் வலம் வந்த பாட்டி... பாட்டி போய்விட்டது, போயே போய்விட்டது. சொந்த சகோதரனையே பணத்துக்கும் கையளவு மண்ணுக்கும் பலி வாங்கும் மனிதர்களைவிட்டு, உண்மையும் நேர்மையும் துடிதுடிக்க, மொன்றுகொண்டு கூசாமல் சிரிக்க, சிரிக்க பொய் பேசும் மனிதர்களைவிட்டு வாடி வதங்கி ஆறு பிள்ளைகளைப் பெத்த வவுறு எரிய எரிய, முடிந்த மட்டும் அன்பைப் போதித்துவிட்டு எங்கோ அன்பு சுரக்கும் இடம் தேடி பாட்டி போய் விட்டது.

அம்மாவும் புலம்பிக் கொண்டே - "சீக்கிரம் கௌம் புடா. அப்புறம் என்னய குற சொல்லக் கூடாது" நான் வேலை வாய்ப்பு அலுவலகத்துக்குப் போவதைப்பத்தி அடிக்கடி துரிதப்படுத்திக் கொண்டு அது அதுபாட்டுக்கே வேலை செய்து கொண்டே இருந்தது.

சாணி தெளிச்சி, கூட்டி, பெருக்கி மளமளவென்று வழக்கமாய்த் தான் செய்யும் வேலையில் மூழ்கிப்போய் இருந்தது. அதற்குத்தானே சம்பளமில்லாத வேலைக்காரியாய் விசுவாசமான அடிமையாய் அம்மாவைக் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறார் அப்பா.

இன்றோடு புதுப்பிக்க வேண்டிய நாள் முடிவடைவதால் கட்டாயம் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சென்றே ஆகவேண் டும், என்ன செய்வது? புதுப்பித்தல் தானே உடன் போய்விட்டுத் திரும்பிவிடலாம். பாட்டியைச் சுடுவாட்டுக்குக் கொண்டு போவங்காட டியும் வந்திடலாம். அவசர அவசரமாய் காக்காக் குளியலோடு புறப்பட்டேன். பழையதை அள்ளிப் போடக்கூட நாழியில்லை. அஞ்சி மணிக்குக் கௌம்பினாத்தான் வீட்டிலிருந்து தார்ச்சாலைக்கு ஆறு மணிக்காவது நடந்து போய்ச் சேரமுடியும். ஆறு பத்துக்குத் திருச்சி போவும் புறநகர் பேருந்து 'சண்முகத்'தைப் பிடித்தால்தான் ஒன்பது மணிக்காவது அலுவலகம் போய்ச் சேரலாம்.

நீராகாரத்தில் குடலைக் கொஞ்சம் ஈரப்படுத்திக்கொண்டு புறப்பட்டேன். பனிபூத்துச் சிரிக்கும் ஆவாரம் மலர்களின் வசீகரம். இன்று ஏனோ ரசிக்க முடியாத மனநிலையோடு எட்டி நடை போடடேன். பாட்டியின் சாவு - எழவு வாசலைக்கூட எட்டிப் பார்க்க முடியாமல் கௌம்பி வந்துவிட்ட நெருக்கடியான சூழல் குற்ற உணர்வால் புழுங்கிக் கொண்டே 'சண்முக'த்த எப்படியும் புடிச்சிடணும். நடை ஓட்டமாகிக் கொண்டிருந்தது.

நான் சாலையைப் பார்ப்பதற்கும் 'சண்முகம்' பறப்பதற்கும் சரியாய் இருந்தது. எப்படியோ அரநாழிக்கு அப்புறமா ஒரு அரசுப் பேருந்து..., பதினெட்டாம் நூற்றாண்டுத் தகரவண்டியில் பயணித்து, காத்தாலேயே கோபத்தை மூக்கின் நுனியில் ஒட்ட வைத்துள்ள நடத்துநரிடம் சில்லரை இல்லாததிற்காக வசவை வாங்கிக் கட்டிக் கொண்டு, திருச்சி போய்ச் சேர்வதிற்குள் போதும் போது மென்றாகிவிட்டது.

தன் கூரிய நகத்தால் சீண்டிக் கொண்டேயிருந்தது பசி. ஒரே ஒரு கோப்பை தேநீரோடு அலுவலகத்தினுள் நுழைந்தேன். இது என்ன 'ரேஷன்'வரிசையா? இல்லை சினிமாக் கூட்டமா? இல்ல இல்ல எம்ளாய்மெண்டே தான். ஒவ்வொருத்தரிடமும் சான்றிதழும் கோப்புகளும். மீன் மார்க்கட்டிலிருந்து சிதறித் தெறிக்கும் எரைச்சலுக்கும், இங்கு எழும் கூச்சலுக்கும் வேறுபாடு எதுவும் தெரியவில்லை, கவிச்சியைத் தவிர.

சிடுசிடு அலுவலரிடம் கை நீட்டலுக்கெல்லாம் ஓடி, எழுதி நிமிடங்கள் கொதற மணிக் கணக்காய் காத்திருந்து... சே! இது ஒரு பொழப்பா. எங்காச்சும் ஓடிடலாமா? இல்ல அலுவலரின் முகத்தில் ஓங்கி ஒரு குத்துவிடலாமா? என்று தோன்றும். வேலை இல்லாதவர்கள் என்றால் அத்தனை இளக்காரம் அவர்கட்கு.

சந்தேகம் கேட்ட ஒருவரைப் பிடிபிடியென்று பிடித்துவிட்டார் அலுவலர். "மூஞ்சயும் மொவரக் கட்டையும் பாரு. காலையிலேயே ஏன் யென் உயிர எடுக்குற? போ போ போயி உக்காரு கூப்புடும் போது வா"

சுழன்று சுழன்று வீசப்படும் வசவுச் சாட்டை வலியையும் பொறுத்துக்கொண்டு தானிருந்தார்கள் என்னைப் போன்ற இளைய தலைமுறையினர்.

எல்லாம் முடிந்து வெளியே வரும்போது மணி இரண்டைத் தொட்டிருந்தது.

உள்ளே கிடந்து புழுங்கி மரத்துப் போய் உணர்ச்சிகள் எல்லாம் வெளியுலகம் வந்தவுடன்தான் நாமும் மனிதர்கள் என்ற உணர்வு வந்தது.

அநியாய விலைக்கு, அம்மா போனவார சந்தையில் ஆடு வித்துக் கொடுத்த பணத்தில், விடாமல் கொடலைக் கொறித்துக் கொண்டிருந்த பசிக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொஞ்சம் பருக்கைகளை உள்ளே தள்ளினேன். பனிரெண்டு ருபாய்க்கான பருக்கைகளை முழுங்கியும் தண்ணியில் மூனில் ரெண்டு பங்கை உறிஞ்சியும் கொடலைக் கொறித்தும் சீண்டியும் சோர்வலைகள் அதிர பிராண்டி பிராண்டி உசுருபோக இரைப் பையை மென்று கொண்டிருந்தது பசி.

பேருந்து ஏறியவுடன் பாட்டியின் நினைவுதான் அலை அலையாய் வந்தது. உயிரோடு இருக்கும்போது உதாசீனப்படுத்திய மகள்கள் 'கெழவி இன்னும் போய்த் தொலையலையே' அந்த 'நல்ல' நாளுக்காகக் காத்திருந்த மகன்கள் எல்லோரும் இப்பொழுது ஊருக்காக, உறவுக்காக, சடங்குக்காக அழுவார்கள். கதறித் துடிப்பார்கள். அழுகை. சிரிப்பைப் போல் இயற்கையாய் குமிழ்விட்டு வெளிவரும் மனித உணர்ச்சி அழுகை. அது இப்பொழுது சடங்காக சம்பிரதாயமாகவே மாறிவிட்டது.

"உக்கோட்டையா, நாலு மவனப் பெத்தா நடு முக்கத்துல சோறு, ஒரு மவனப் பெத்தா உரியில சோறுன்னு சொல்லு வாங்களே. பெத்த வவுறு பத்தி எரிய எரிய போடீ போயி எங் காச்சும் பிச்ச எடுத்துத் தின்ன டீன்னு எம்மவன் தொரத்திட் டாண்டீ..."

அம்மாவிடம் ஒரு முறை சொல்லிவிட்டு ஒப்பாரி வைச்ச பாட்டியின் முகம்...

பாட்டியின் மவன் பரட்டையன் அப்படி ஒண்ணும் கஞ்சிக்கு வக்கில்லாதவனில்ல. வெட்டி வேல, பண்ண வேல. ஒரு ஏக்கரா பிஞ்சையில் இருந்து ஏதோ கொஞ்சம் தானியம் கிடைக்குது. பகுதி நேர வேலையா செருப்ப வேற தச்சிக் கொடுக்கிறான். இதுவும் போதாதுண்ணு வாராவாரம் மீன் சுருட்டி சந்தையிலோ இல்ல கிராமங்களிலியோ போயி தள்ளு வெலைக்கு அடிமாடு ஓட்டி வந்து கறிபோடுறான். கறியாவும் தோலாவும் கணிசமான ருவா லாவம் கிடைக்குது. இப்புடி சம்பாதிச்சி ரெண்டு புள்ளவோள படிக்கவைக்க முடியுது. வட்டிக்குப் பணம் கொடுக்க முடியுது. பெத்த ஆத்தாளுக்கு வயிறு குளிரச் சோறு போட வக்கில்ல. ஊரே ஏசுது. அப்பயும் பரட்டையனுக்கு சொரண இல்ல. கெளவி ஆண்டமாருங்க ஊடுவள்லயும் சேரியிலயும்தான் சோறு வாங்கி வயித்தக் கழுவுது.

பாட்டி அதிகமா ஊட்டுப் பக்கம் வராது. எப்பவாச்சும் வரும்.

"உக்கோட்டப்புள்ள கடிச்சிக்கக் கொடு"

"பொயிலக்கட்டக் கொடு"

"நீராகாரம் கொடு"

இப்புடி எதுக்காவது வரும். அம்மாவும் தயங்காம முகம் சுளிக்காம கொடுக்கும்.

"ஏன் ஆயா அத்திப் பூவாட்டம்ல தல காட்டுரண்ணு" அம்மா கேட்டா, "இருக்கட்டும் புள்ள ஊரே தாங்குது ஒவ்வூடே கதின்னு கெடக்க முடியுமா? இந்த மூதிக் குத்தான் நல்ல எயித்து நடுவால கெடக்க கோண எயித்த குறுக்கால எயிதிவுட்டான். ஏல்லாம் அந்த ஓரகார கடவுளுகிட்ட சொல்லனும். மவராசி ஒம்மனசு அத்தனையும் பொடம் போட்ட பொன்னாச்சே. ம் நா வரம்புள்ள" பெருமூச்சோடு புலம்பிக்கொண்டே தலை ஆட ஆட போகும்.

நல்லா நெனவிருக்கு. நான் சின்னவனா இருக்கயில சிலேட்டுக்குச்சி இல்லேன்னுட்டு அழுதுகிட்டே பள்ளியோடம் போவம்போது ரெண்டொரு மொற முந்தானைய அவுத்து காலனா எட்டணா கொடுத்திருக்கு, வாழ்ந்து கெட்ட மனுசி.

பெரீய்ய கருப்புத் துப்பட்டிய போத்திக்கிட்டு எங்கோ ஒரு நட்சத்திர பல்ல காட்டி பய முறுத்திக் கொண்டிருந்தது இரவு. அமாவாச வேற. ஒத்தையடிப் பாதையில நடக்கும்போதே தேவையில்லாமல் கொடிக்கும் குச்சிக்கும் பாம போன்னு பயந்து தொலைச்சது மனசு.

துணைக்கு மனசுக்குள் அசைபோட்டு துணிச்சலை அழைச்சிக்கொண்டே ஊடு போய்ச்சேர்ந்தேன்.

"இருட்டிப்போனப்புறம் ஏம்பா வந்தே. என்னாச்சோ ஏதாச் சோன்ன தவிச்சிக் கிட்டுல்ல கெடந்தேன். வா வா வந்து களப் பாரு"

"அந்தப் பாட்டிய சுடுவாட்டுக்கு கொண்டு போயிட்டாங்களாம்மா"

"மொதல்ல குளிச்சிட்டு சாப்புடுப்பா"

"இருக்கட்டும்மா சொல்லு"

"மொதல்ல களப்பாரு கண்ணு. பெறவு சவுகாசமா பேசிக்கலாம்"

வாசப்படியில் அரவம் கேக்க. "யாரது?" பெலமாய் அம்மா குரல் கொடுத்தது.

"நான் தாம்மா" விஜயன் குரல் கொடுத்துக் கொண்டே வந்தான்.

"என்னெண்ணே எம்பளாய் மெண்ட் பொயிட்டு வந்துட்டீங்களா?"

"ம். ம். அது கெடக்கட்டும் நம்ம பாட்டிய அதான் வடக்கித் தெரு பரட்டையன் ஆயாவ எடுத்திட்டாங்களா?"

"இல்லண்ணே அது வந்து..."

"விசயா, புள்ளகளையா வந்திருக்கு. அப்புறம் பேசிக்கலாம்"

"நீ கொஞ்சம் பேசாம இரும்மா. நீ சொல்லு தம்பி"

"அது வந்துண்ணே, வழக்கமா வடக்காலத்தெரு ஆளுங்க வூடுவுள்ள சாவு விழுந்தாலே அப்படியே மேற் கோமா ஒளிகடை வழியா சுத்திக்கிட்டுத்தான் சுடுவாட்டுக்குப் போவாங்க இந்த மொற பெசல் காத்து மழையால ரோடு அரிச்சிப் பள்ளமாக் கெடக்குண்ணு 'பாடைய' தூக்கிகிட்டு அந்தவழியா போவமுடியா துண்ணுட்டு சொல்லிக்காம கொள்ளிக்காம நம்ப தெரு வழியே தூக்கிகிட்டு வந்திருக்காங்க. அதாம் நம்ப வெள்ளையன், செல்லையன், முறுவன் எல்லோருமா சேந்து தடுத்திட்டாங்க..."

"ஏன்? ஏண்டா தடுத்தானுவ? இவனுவ ஊட்டு மேலாயா தூக்கிகிட்டு போனானுவ. அவனுவ மட்டும் மனுச ஜென்மமில்ல. என்னடா காட்டுமிராண்டித் தனமாஇருக்கு?"

"அண்ணே! அண்ணே! மெதுவா மெதுவா பேசுண்ணே. ஊரே ரெண்டுபட்டுக் கெடக்கு நீ வேர.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழக்கமா நம்ப தாத்தா தல மொறையில இருந்து வடக் காலத் தெரு ஆளுவ எல்லாம் ஒளிக டைய சுத்திகிட்டு போயிதா ண்ணே பழக்கம். அதான் முறை யும்கூட... இப்ப பாடைய தூக்கி கிட்டு நம்ப தெருவால வர்றது என்ன நாயம். நீயே சொல்லு. அதான் நம்ப மூக்கண்ணன் பாத் தாரு. 'சக்கிலிப் பயலுவ பாடை யைத் தூக்கிகிட்டு ஒரு அடி எடு த்து வச்சீங்க போவ, எவனுக்கும் காலிருக்காது. கொடல உருவிபுடு வேன் உருவி'. அருவாவும் சுளுக் கியுமா நம்பாளுங்க எல்லாம் கூடிட்டாங்க. அவனுங்களும் ஒண் ணுல்ல ரெண்டு பார்ப்போம்ணுட்டு பாடைய பொணத்தோட அங் கேயே போட்டுட்டு உடையார் ப்ாளையம் டேசனுக்கு போயிருக் காணுவ, கேசு கொடுக்க"

"எலேய்! இது என்னடா கொடு மையா இருக்கு. நாம என்ன ஜமீன் காலத்துலயா வாழுறோம். அவங் களும் தாழ்த்தப்பட்டவங்க, நாமும் தாழ்த்தப் பட்டவங்க. இதுல என்னடா நீ ஒசத்தி நா ஒசத்தி. பறையன் என்ன, பள்ளன் என்ன, சக்கிலி என்ன. எவனா இருந்தா என்னடா, நாம எல்லாம் ஏழைங்கதாண்டா. இதுல மேல என்ன, கீழ என்ன. எல்லாம் ஒரே சாதி தாண்டா. உழைச்சி வாழுற கூலிங்க தாண்டா."

"இருங்கண்ணே நீங்க சொல் றது சரிதான். நீங்க சொல் லுறபடி நாம எல்லாம் ஒண்ணுதான். இப்ப நம்ப தெருவுலேயே எழவு விழு துண்ணு வச்சிப்போம். நாம படை யாச்சுவ தெருவழியா தூக்கிகிட்டு போவ முடியுமாண்ணே? நீயே சொல்லு. அப்புடி நம்பளால தூக் கிகிட்டு போவ முடிஞ்சி, அவுனு வளும் உட்டாணுவன்னா சரி, அப்ப நாமும் இவனுவள உடு வோம்."

"எலேய் சரிடா. நம்பளாலயும் முடியும். எப்ப? நாம எல்லாம் ஒத் துமையா இருந்தா. இப்ப நீயே தான் சொல்லுறியே, அவங்க கீழ் சாதிக்காரங்கண்ணு. படாச்சுவ, இன்னும் ரெட்டியோ நாயுடுவோ சொல்லுறதுக்கு யாரடா கேக்க ணும். நாம எல்லாம் ரத்தமும் சதையுமுள்ள மனுசங்க. அத நெனங்க. எழுதப் படிக்கத் தெரி ஞ்ச நீயே இப்புடி பேசுரண்ணா, மத்தவன் ஏண்டா பேசமாட்டான். மனுசத்தன்மையே இல்லாம மிரு கங்களாட்டம் ஏண்டா இப்புடி சாதி வெறி புடுச்சி அலையுறீங்க. இல் லாட்டி தாயு புள்ளையா பழகுன ஒரு நல்ல மனுசிய இப்புடியா தெரு வுல போட்டு நாற அடிப்பீங்க. சரி சரி இப்ப ஆளுங்களு எல்லாம் எங்க?"

"ஆளுங்கள சேர்க்க தெரு வுக்கு போயிருக்காங்கண்ணே"

"எதுக்கு எந்த ஆளுங்கள பாக்க?"

"வடக்கித் தெரு ஆளுகள ஏண்டா உட்டீங்க. அப்பவே எவனையாவது ஒருத்தன வெட்டி புட்டு வரவேண்டியதுதாண்டான்னு நம்ப கோவிந்தசாமி நாயுடுவும் ஒங்க தாத்தா காலத்து ஆண்ட முனுசாமி படையாச்சியும் தான் சொன்னாங்க. ஏதாச்சும் பெரச்ச னண்ணா சொல்லி அனுப்புங்கடா ஆளுவுள அனுப்புறேன்ன சொல்லி விட்டுப் போனாங்க. அதாண்ணே போயிருக்கானுவ"

"குடி கெட்டுச்சுடா விஷக்கா ரப் பயலுவ. எவனும் எவனோடும் சேர்ந்திருக்க புடிக்காத பய லுவோ. இப்ப நீ ஒண்ணு செய். ஒடனே போய் நம்ப நாகராசு மாமாவ கூட்டிகிட்டுவா. அவருக் குதான் போலீசு, ஊரு ஆண் டைவோ கிட்ட பழக்கமிருக்கு, பேசி சமாதானமா செஞ்சி வெப பாரு. இங்கே குத்துக்கொல உழு ரதுக்குள்ள தடுத்து நிறுத்தி யாகணும். ஓடு!ஓடு! யென் சைக்கில எடுத்துகிட்டு போ. இங்க நாம் பாத்துக்கிறேன்."

மனசு படபடக்க, வேதனை யோடு பயமும் கலந்து, மூளை வலியெடுக்க ஆரம்பித்தது. மார டித்துக்கொண்டே அழும் அம் மாவைப் பார்க்கும்போது பாவமாய் இருந்தாலும் வெள்ளம் வந்து எல் லோரையும் அடிச்சிகிட்டுப் போற துக்குள்ள தடுக்கணும் அண போடணும். சட்டையப் போட்டுக் கொண்டு கெளம்பிய என்னை அழுகையோடு அம்மா தடுக்க "வெளிய பொயிட்டு ஒடனே வந் துடுறேம்மா" பட வாசலைத் திறந்து வீதி வந்தேன்.

இது எவன் வெச்ச தீக்குச்சி. ஊரே பத்திக்கும் போலிருக்கே. தெரு முக்கிலிருந்த போலீசு ஜீப் பின் உறுமலையும் மீறி விஜயனின் குரல் பலமாய்க் கேட்டது.

வேகமாய் ஓடி முக்கம் திரும் பினேன். வெளிச்சத்தை உமிழ்ந்து கொண்டு உறுமிக் கொண்டே நின் றது போலீஸ் ஜீப். வெளிச்சத்தில் அனாதையா கிடக்கும் பாட்டியின் கட்டப்பட்ட முகமும் பாடையும் தெளிவாய்த் தெரிந்தது.

ஜீப்பிலிருந்து சப்-இன்ஸ் பெக் டர் போலீசுக்காரர்கள் சகிதமாய், நாயுடுவும் படையாச்சியும் கம்பீ ரத்தோடு இறங்கினார்கள். பெரிய உறுமலோடு பேசிக் கொண்டி ருந்தார் தலைமைத் தொப்பிக்கா ரர். அப்பொழுது தான் நெற்றியில் அடிபட்டு ரத்தம் வழிய ஓடி வந் தான் விஜயன்.

நிலமை மோசமாகிக் கொண் டிருந்தது. விஜயனை அழைத்து ரத்தத்தைத் துடைச்சிவிட்டு, பட படக்கும் நெஞ்சோடு அவனைக் கொஞ்சம் அமைதியாய் இருக்கும் படி கேட்டுக்கொண்டும் எழும் கோபத்தை அடக்கிக் கொண்டே நிலமையை விளக்கிச் சொல்ல நான் ஆயத்தமாவதற்கும், நாயுடு கை நீட்டும் ஆட்களுக்கு லத்தி சுழன்று சுழன்று பதம் பார்க்கவும், எல்லோரும் சிதறி ஓடவும் சரியாய் இருந்தது.

கூச்சலிலும் களேபரத்திலும் என் குரல் அமிழ்ந்து போக நாயுடு வின் விரல் என்னை நோக்கிச் சுட்டிக்காட்ட - மின்னல் வேகத் தில் என் தலையில் இடி இறங்க கண்ணில் மின்னட்டாம் பூச்சிகள் பறக்க என் தலையிலிருந்து ரத் தம் சொட்டும்போதுதான் நான் உணர்ந்தேன். வலியுணர்வ தற் குள் பின் மண்டையில் மற்றொரு இடி. "அண்ணா உன்னைப் போயி பாவிவ அடிக்குறா னுவளே" விஜய னின் அலறலும் பாடையும் பாட்டி யின் முகமும் மட்டுமே கடைசி யாய் மூளையில் பதிந்தது. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புகலிட வாசகர்களுக்கு ஜெயந்தீஸன் நன்கு பரிச்சயமானவர். இவரது குட்டிக் கதைகள் அங்கதச் சுவையோடு சமூகங்களின் வாழ்வை நாடிபிடித்துப் பார்ப்பன. கனடா 'தாயகம்' பத்திரிகையில் தொடர்ச்சியாகக் குட்டிக்கதைகளை எழுதிய ஜெயந்தீஸன் 'எக்ஸில்' இதழில் தொடர்ச்சியாகச் சில பக்கங்களில் எழுதுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# ஜெயந்தீஸனின்... இடம்



மேரியை நோக்கி நான் மிகவும் விரைவாக நடந்துகொண்டிருந்தேன். இதற்கு அர்த்தம் மேரி என்னும் பெண்ணை நான் இப்போது சுழட்டிக் கொண்டிருக்கின்றேன் என்று எந்த அர்த்தமுமே இல்லை. ஆனால் உண்மையிலேயே மேரியின்மீது எனக்கு தீராக் காதல். மேரி என்னை றியெக்ற் பண்ணினாலும் நான் ரை பண்ணிக் கொண்டே இருப்பேன். மேரி என்னை அக்செப்ற் பண்ணாது விட்டால் எனது வாழ்வு மாயமாகிவிடும். மேரி என்னை அக்செப்ற் பண்ணினாலும் றியெக்ற் பண்ணினாலும் நான் அவளைச் சுழட்டிக் கொண்டேயிருப்பேன். மேரிக்கு நான் கடிதம் போடுவேன். பதில் வராது விட்டால்கூட நான் அவளுக்கு எழுதிக் கொண்டேயிருப்பேன். அவளைச் சுழட்டிக் கொண்டேயிருப்பேன். எனது வாசகர்களே! நாம் வாழ்வது சுழலும் உலகில் அல்லவா? ஆம், இது சுழலும் உலகம். சுழட்டும் உலககம்.

அட இவனும் ஒரு மனிதனா? கலியாணம் கட்டி ஒரு வரிசம் கூட ஆகவில்லை. அதற்குள் மேரியைச் சுழட்டுகின்றேன் என்று பச்சையாக எழுதுகின்றானே. யார் கோபித்தாலும், இவைகளைக் கவனத்தில் எடுக்காமல் நான் மேரியைக் கட்டாயம் சுழட்டிக் கொண்டேயிருப்பேன்.

நான் மேரியை நோக்கி மிகவும் விரைவாக நடந்து கொண்டிருந்தபோது, தமிழ்ப்பண்டிதர் போல தோற்றம் கொண்ட ஒருவரைக் கண்டு நான் நைஸாக நழுவ... அவர் என்னைப் பிடித்தே விட்டார்.

"தம்பி, நான் மேரியிட்டைப் போறன். இடம் தேடக் கஸ்டமாக் கிடக்கு ஒருக்காக் காட்டிவிடுவீரோ?" என்று கேட்டார்.

"பண்டிதர், நானும் மேரியிட்டைத்தான் போறன். வாங்கோ ஒண்டாப் போவம்" என்றபோதுதான் அவர் சிங்கம் போல கர்ச்சித்தார். நான் நடுங்கி விட்டேன்.

"டேய், உனக்கு அவளைத் தெரியுமோ?"

"ஓம் பண்டிதர். நான் மேரியைச் சுழட்டுறன்"

எனது பதிலைக் கேட்ட பண்டிதர் சண்டியரானார்.

"டேய். அவள் என்ரை பேத்தி. அவளின்ரை கலியாணம் பார்க்க நான் ரெண்டு லட்சம் கட்டி விசா எடுத்து இஞ்சை வந்தனான். கலியாணம் முடிச்சு பத்து நாள் கூட ஆகேல்லை. நீ அவளைச் சுழட்டுறியோ? அவளைச் சுழட்ட உன்னிட்டை நாஷனலிற்றி இருக்கோ? இருந்தாலும் உன்னாலை அவளைச் சுழட்ட முடியுமோ?

பண்டிதரதும் எனதும் திக்கு ஒன்றல்ல என்று பரிபூரணமாக விளங்கியதால் ஓர் விளக்கத்தை உடனடியாகவே அவர் முன் இப்படி வைத்தேன்.

"பண்டிதர், உங்கடை மேரியும், நான் சுழட்டும் மேரியும் ஒண்டில்லை. உங்கடை தலையிலை அடிச்சுச் சத்தியம் செய்யிறன், எனக்கு உங்கடை பேத்தியைத் தெரியாது. தெரியாத ஒண்டை எப்படிச் சுழட்டிறது...? மேரி உங்கடை பேத்தி என்கிறது உண்மை தான். ஆனா, பிரான்சிலை நகரசபைகளுக்குப் (முனிசிப்பல் ) பேர் மேரி. எனக்கு உப்ப வேலை இல்லை. என்ரை மனிசிக்கும் வேலை இல்லை. மேரியிட்டை அதாவது நகரசபையிட்டை போய் எங்கடை நளினங்களை புறுவ்வோடும் இல்லாட்டி சில நடிப்புகளோடையும் காட்டினா லைட் பில் காசை மேரி கட்டும், இடைக்கிடை கொஞ்சம் காசு தரும்... சிலோன் மேரியளை பிரெஞ்சு மேரியளோடை ஒப்பிட முடியாது" என்று சொன்னவுடன், பண்டிதர் உடனடியாகவே "நானும் உன்னோடை மேரிட்டை வாறன்" என்றார்.

"பண்டிதர், உங்கடை விசா என்ன?"

"நான் தம்பி பேத்தியின்ரை கலியாணத்திற்கு வந்தனான். ருறிஸ்ட் விசா..."

"பண்டிதர் உங்கடை விசாவோடை போனா மேரி உங்களுக்குக் கதவைத் திறக்க மாட்டாள். நீங்கள் இங்கை அசைலம் கேட்டியள் எண்டா மேரி ஈஸியாக் கதவைத் திறப்பாள்."

"தம்பி, உம்மைப் பார்த்தா அறிவாளி போலப் படுகுது. அசைலம் கேட்காம மேரியிட்டைப் போக ஏதும் வழியள் இருக்கோ?"

"பண்டிதர், அசைலம் கேட்கிறதிலை உங்களுக்கு என்ன பிரச்சனை?"

"தம்பி, எனக்குப் பிறந்தது எல்லாம் பெடியள் தான். எல்லோரும் அப்றோட்டிலை. நான் இங்கை அசைலம் கேட்டா, அங்கையுள்ள மூண்டு கடையையும், காணி வளவுகளையும் பாக்கிறது ஆர்? யூறோப்புக்கு இது தான் முதலாவது விஜயம். நீர் மேரி குடுக்குது எண்டிறீர். ஏன் அது குடுக்கிறதை விட்டிட்டுப் போறது என்று தான் உம்மிட்டை ஐடியாக் கேட்டனான். எதுக்கும் மேரியின்ரை (பேத்தி) புருஷனுக்கு நாஷனலிற்றி இருக்கு. அவனிட் டையும் ஒருக்கா ஐடியாக் கேட்டுப் பார்க்கிறன்..." என்று விட்டு "தம்பி, நீர் ஊரிலை எவடம்?" எனப் பண்டிதர் துவங்கினார்.

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்றபடி நான் ஓடித் தப்பினேன். ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# The Exile

மொழிபெயர்ப்பு:
சேனன்

16 தை 1928. விடிய விடிய பயணத்திற்குத் தயாரானோம். எனக்கு உடல் கொதித்துக் கொண்டிருந்தது. கிரெம்ளினில் இருந்து சற்றுமுன் கொண்டுவரப்பட்ட பொருட்களின் மத்தியிலும், நாங்கள் எடுத்துச் செல்வதற்காகக் கட்டிவைக்கப்பட்டிருந்த பொருட்களின் மத்தியிலும் காய்ச்சலாலும் களைப்பாலும் கனத்த தலையுடன் சுத்திக்கொண்டிருந்தேன். தாறுமாறாய்க்கிடந்த தளபாடங்கள், பெட்டிகள், துணிகள், புத்தகங்கள் மத்தியில் கணக்கற்ற விருந்தினர்கள் - நண்பர்கள் எம்மை வழிஅனுப்ப மொய்த்திருந்தனர். எனது உடல் நலமின்மையால் நாங்கள் வெளிக்கிடுவதைத் தள்ளிப் போடும்படி எமது டாக்டரும் நண்பருமான F.A. காட்டியர் (GUETIER)[1] அறிவுறுத்திக் கொண்டிருந்தார். எமது பிரயாணம் எப்படிப்பட்டது? இதைத் தள்ளிப் போடுவதன் சாத்தியங்கள் எப்படிப்பட்டது? என்பதைப்பற்றியெல்லாம் அவருக்குத் தெரிந்திருக்கவில்லை. எனது உடல் நலம் ரெயில் பிரயாணத்தின் போது ஓரளவு முன்னேறும் என நாம் நம்பினோம். ஏனெனில் வீட்டில் நாம் வெளிக்கிடுவதற்குமுன் 'இறுதி நாட்களில்' என் உடல்நலம் விரைவில் முன்னேறுவதற்கான சாத்தியங்கள் இருக்கவில்லை. புதுப்புது மனிதர்கள் எல்லாம் வந்தார்கள். நிறையப்பேரை அன்றுதான் முதன் முதலாகச் சந்தித்தேன். கைகளைக் குலுக்கிக் கொண்டும் அநுதாபம் தெரிவித்துக் கொண்டும் வாழ்த்துகள் தெரிவித்துக்கொண்டும் இருந்தார்கள்.

பூக்கள், புத்தகங்கள், இனிப்புகள், உடுப்புகள் முதலானவற்றைக் கொண்டுவந்து கொண்டிருந்தவர்களால் மேலும் குழப்பம் கூடிக்கொண்டிருந்தது. இறுதிநாளின் அழுத்தங்களும் கிளர்வும் குழப்பங்களும் இறுதியை நெருங்கிக் கொண்டிருந்தது. பொருட்கள் ரெயில் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. எமது நண்பர்களும் அங்கு சென்றிருந்தார்கள். எமது குடும்பத்தில் அனைவரும் GPU ஏஜென்டுகளுக்காக சாப்பாட்டறையில் தயாராக காத்துக்கொண்டிருந்தோம். நேரத்தைப் பார்த்தபடி இருந்தோம். ஒன்பது மணி ஒன்பதரை... யாரும் வரவில்லை. பத்து மணியாகிவிட்டது. பத்துமணிக்குத்தான் ரயில் புறப்படுவதாக இருந்தது. என்ன நடந்தது? ரத்துச் செய்யப்பட்டதா? டெலிபோன் மணி அடித்தது. வெளிவிடமுடியாத காரணத்தால் எமது பிரயாணம் ரத்துச்செய்யப்பட்டதாக GPU அதிகாரிகள் தெரிவித்தனர். எவ்வளவு காலத்துக்கு? LD[2] கேட்டார். இரண்டு நாட்களுக்கு-நாளை மறுநாளைக்குக் கிளம்பவேண்டியிருக்கும் என்று விடை வந்தது.

அரைமணித்தியாலத்தின் பின்பு ஸ்டேசனில் இருந்து நண்பர்கள் வந்து சேர்ந்தனர். பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று ஸ்ரேசனில் நடந்தது தெரியவந்தது. "வாழ்க ரொட்ஸ்கி" என்று உரத்துக் கோசமிட்டுக் கொண்டு காத்திருந்த மக்கள் கண்ணில் ரொட்ஸ்கி எங்குமே படவில்லை. எங்கே அவர்? எமக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரெயில் பெட்டியைச்சுற்றி ஏராளமானசனம் நெருக்கியடித்தது. இளம் நண்பர்கள் LDயின் பெரிய கட்அவுட் ஒன்றை அப்பெட்டிமேல் நிறுத்தினர். பெருத்த ஆரவாரத்துடன் இச்செய்கை ஏற்கப்பட்டது. ரெயில் புறப்பட்டது. சற்று மெதுவாக முன்னேறி பின் திடீரென நின்றது. ஆரவாரித்தவர்கள் எல்லாம் என்ஜினுக்கு முன் குழுமிநின்றார்கள். ரெயிலை நிறுத்தியபடி பெட்டியில் பெரிதாக அடித்து எங்கே ரொட்ஸ்கி என்றவர்கள் ஆரவாரித்தனர். GPU ஏஜென்டுகள் LD தங்களைச் சந்திக்கவிடாமல் இரகசியமாகப் பெட்டிக்குள் கொண்டுசென்றுவிட்டார்கள் என்ற வதந்தி அவர்களுக்குள் பரவியது. ஸ்ரேசனில் ஏற்பட்டிருந்த கிளர்ச்சி விபரிக்க முடியாதது. பொலிசுடனும் GPU ஏஜென்டுகளுடனும் ஏற்பட்ட கைகலப்பில் இருதரப்பினருக்கும் காயங்கள் ஏற்பட்டது. பலர் கைது செய்யப்பட்டனர். ஏறத்தாழ ஒன்றரை மணிநேரம் ரயில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதற்குப்பின் சிறிது நேரத்தில் எமது பொருட்கள் ஸ்ரேசனில் இருந்து திரும்பி வந்தது. அதன் பிறகும் நீண்டநேரத்திற்கு நாங்கள் இருக்கின்றோமா என்பதைத் தெரிந்துகொள்வதற்காகவும் ஸ்ரேசனில் நடந்ததை விமர்சிப்பதற்காகவும் நண்பர்களின் டெலிபோன்கள் வந்துகொண்டேயிருந்தது. நாங்கள் நித்தி


மெக்ஸிகோவில்
2வது மனைவியுடன்(1938)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரைக்குச் செல்லும் பொழுது அரை ஜாமம் கழித்து நீண்ட நேரமாகிவிட்டிருந்தது.

கடந்த சில நாட்களாக தொடர்ந்த சஞ்சலத்திற்குப்பின் நாங்கள் அடுத்தநாள் 11மணி வரையும் நித்திரை கொண்டோம். ஒரு டெலிபோனும் வரவில்லை. எங்கும் அமைதியாகவிருந்தது. எமது மூத்த மகனின் மனைவி வேலைக்குச் சென்றாள். இன்னும் இரண்டு நாள் எங்களிற்கு முன்னால் இருந்தது. நாம் காலை உணவை உண்டுகொண்டிருந்த தருணத்தில் பெல் அடித்தது. அது பையெலோ பொரொடோவின் (BYELOBORODOV) மனைவி. தொடர்ந்து யேவ் (JAFF)ஈன் மனைவி வந்தார். மீண்டும் பெல் அடித்தது. நாம் இருந்த கட்டிடம் முழுவதும் சாதாரண உடையிலும் சீருடையிலும் இருந்த GPU ஏஜென்டுகளால் திடீரென நிரம்பி வழிந்தது. உடனடியாகக் கைது செய்து அல்மா-அடா (ALMA-ATA)வுக்கு எம்மை அனுப்பிவைப்பதற்கான ஆணை ஒன்றை அவர்கள் LDயிடம் கையளித்தார்கள். அவர்கள் வாக்களித்திருந்த இரண்டு நாட்களுக்கும் நடந்தது என்ன? மீண்டும் ஏமாற்றப்பட்டோம். எம்மை வழியனுப்புவதன் போது ஏற்படக்கூடிய ஆர்ப்பாட்டங்களை தவிர்ப்பதற்கான அவசரம் தெரிந்தது. டெலிபோன் தொடர்ந்து அடித்தபடி இருந்தது. எம்மை டெலிபோன் எடுக்கவிடாமல் நாகரீகமாகச் சிரித்து மறுத்தபடி அதன் அருகிலேயே ஒரு ஏஜென்டு நின்றிருந்தான். எம் வீடு ஆக்கிரமிக்கப்படுவதையும் நாங்கள் பலவந்தமாக வெளியேற்றப்படுவதையும் தற்செயலாகத்தான் பைலோபோரோடாவிற்கு அறிவிக்க முடிந்தது. இந்த வழியனுப்புதலின் பின்னிருந்த அரசியல் ஆலோசகர் 'புக்காரின்' என்பதை நாம் பின்னால் தெரிந்து கொண்டோம்.

எல்லா ஏஜென்டுகளும் உணர்ச்சிவசப்பட்டுக் கொண்டிருந்தார்கள். LD தன் சம்மதத்துடன் வெளியேற மறுத்துவிட்டார். நிலவரத்தைத் தெளிவாக்கிக்கொள்ள அவர் இச் சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் பாவித்துக்கொண்டார். அவரையும் மற்றும் பல முக்கிய இடது எதிர் பணியினரையும் தாமாகவே புலம்பெயர்ந்ததாகக் காட்ட அரசியற் பிரிவு திட்டமிட்டிருந்தது. இதன் அடிப்படையிலேயே தொழிலாளர்களுக்கு இந்த புலப்பெயர்வு விளங்கப்படுத்தப்பட்டிருந்தது. தொழிலாளர்களிடம் இருந்து உண்மை மறைத்து ஒழிக்கப்படாமல் காக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. அதனால் எதிராளிகளைத் தமது வன்முறையை-பலவந்தத்தை பாவிக்கவிட LD எடுத்த முடிவின் பின் நாம் எமது விருந்தாளிகளுடன் எம்மை ஒரு அறைக்குள் பூட்டிக்கொண்டோம். கதவுபூட்டப்பட்ட நிலையிலேயே நாம் அதன் பின்னாலிருந்த ஏஜென்டுகளுடன் கதைத்துக்கொண்டோம். அவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மேலதிகாரியுடன் தொடர்பு கொண்டார்கள். அதன்பின் தாங்கள் ஆணையை நிறைவேற்ற வேண்டியிருப்பதனால் கதவை உடைக்கப் போவதாக அறிவித்தார்கள். இதற்கிடையில் அரசியல் இடது எதிர்பணிக்கான எதிர்கால செயற்பாடுகள் பற்றிய முக்கிய செய்திகளை உரியவர்களுக்கு LD வழங்கிக்கொண்டிருந்தார். பலத்த அடியுடன் கண்ணாடிகள் சிதறின. சீருடை அணிந்த கையொன்று உள்ளே நுழைந்தது. 'என்னைச் சுடுங்கள். தோழர் ரொட்ஸ்கி என்னைச் சுடுங்கள்.'- கிஸ்கின் (KISHKIN)-LDயுடன் பல தடவைகள் எல்லைகளுக்குப் பயணித்த பழைய அதிகாரி-கிளர்வுடன் மீண்டும் மீண்டும் கத்திக் கொண்டிருந்தார். "உணர்ச்சிவசப்பட்டுப் பேச வேண்டாம். உன்னை யாரும் சுடப்போவதில்லை. நீ உன் கடமையைச் செய்" LD அமைதிப்படுத்தினார். கதவைத் திறந்துவிட்ட ஏஜென்டுகள் குழப்பத்துடன் உள்ளே நுழைந்தார்கள். LDயின் சப்பாத்துக்களையும் அவரின் fur கோட்டையும் கண்டுபிடித்து சிலிப்பர்களுடன் இருந்த LDக்கு அணிவித்தார்கள். LD மீண்டும் தன்னிச்சையாக வெளியேற மறுத்தார். அவரை அவர்கள் தோளில் தூக்கிக்கொண்டு சென்றனர். நாங்கள் பின்னால் ஓடினோம். நான் என் பனிச்சப்பாத்துக்களையும் fur கோட்டையும் அவசரமாக அணிந்து கொண்டேன். எனக்குப் பின்னால் கதவு அடித்துச் சாத்தப்பட்டது. கதவின் மறுபக்கத்தில் ஒரே குழப்பமாக இருந்தது. எனது மகன்களை வெளியே விடும்படி LDஐத் தூக்கிக்கொண்டு படிகளில் பாய்ந்து இறங்கிக் கொண்டிருந்த ஏஜென்டுகளைப் பார்த்துக் கத்தினேன். மூத்த மகன் எம்முடன் புலம்பெயர்வதாக ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது. கதவு சடாரெனத் திறக்கப்பட்டது. எனது மகன்கள் பாய்ந்து வெளியே வந்தனர். பின்னால் எமது இரு விருந்தினர்களும் வந்தனர். செர்யோசாவின் (SERY-OZHA) விளையாட்டு உடற்பயிற்சியால் உறுதியான தேகத்தின் உதவியால் அவர்கள் இந்த நெருக்கடிக்குள் கீழே இறங்கி வந்து சேர்ந்தார்கள். இறங்கும்பொழுது லியோவா (LYOVA) எல்லாக் கதவு அழைப்பு மணிகளையும் அடித்து "அவர்கள் ரொட்ஸ்கியை தூக்கிச் செல்கிறார்கள்" என்று கத்திக்கொண்டே வந்தான். கதவடிகளிலும் படிகளிலும் பயந்து நின்றிருந்த முகங்களைக் கடந்து நாம் இறங்கினோம். இந்த வீடுகளில் முக்கியமான சோவியத் தொழிலாளர்கள் மட்டுமே தங்கியிருந்தனர். காருக்குள் நாம் வலுக்கட்டாயமாக ஏற்றப்பட்டோம். செர்யோசா தன் காலை உள்ளே எடுப்பதே கடினமாக இருந்தது. பைலோயோடாராயும் எங்களுடன் இருந்தார்.

உறையும் பனியில் மொஸ்கோத் தெருக்களைக் கடந்து சென்றுகொண்டிருந்தோம். செர் யோசாவிடம் தொப்பி இருக்கவில்லை. அதை எடுக்கவே அவனுக்கு நேரம் இருக்கவில்லை. சப்பாத்துகளுக்கு மேலணியும் றப்பர் காலணிகளோ, கையுறைகளோ யாரிடமும் இருக்கவில்லை. ஒரு சிறு பயணப் பையோ, கைப்பையோ எதுவுமே எம்மிடம் இருக்கவில்லை. எல்லோரும் வெறுங்கையுடன் பயணித்தோம். நாம் காசான் (KAZAN) ஸ்ரேசனுக்கு எடுத்துச் செல்லப்படாமல் வேறொரு திசையில் யார்சோலாவ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(YARSOLAV) ஸ்ரேசனுக்குச் செல்லும் வழியில் எடுத்துச் செல்லப்பட்டோம். தனது சகோதரனின் மனைவி வேலை செய்யும் இடத்திற்கே சென்று நாங்கள் வெளியேற்றப்படுவதை சொல்லி வர செர்யோசா காரைவிட்டு வெளியே பாய முயன்றான். ஏஜென்டுகள் அவனது கைகளை இறுக்கிப் பிடித்துக் கொண்டு அவனை வெளியே பாயாமல் இருக்க பணிக்கும்படி LDஐக் கேட்டுக்கொண்டார்கள். வெறிச்சோடிக் கிடந்த ஸ்டேசனுக்கு வந்து சேர்ந்தோம். வீட்டில் இருந்து இறக்கியது போலவே ஏஜென்டுகள் ரொட்ஸ்கியைத் தூக்கிச் சென்றார்கள். "தோழர்களே பாருங்கள். எப்படி அவர்கள் தோழர் ரொட்ஸ்கியைத் தூக்கிச் செல்கிறார்கள்" என்று லியோவா ரயில் நிலையத் தொழிலாளர்களைப் பார்த்துக் கத்தினான். ஒரு நேரம் ரொட்ஸ்கியுடன் வேட்டைக்குச் சென்ற பழைய நண்பர் - ஒரு GPU ஏஜென்ட் 'அற்பப் புழுவே!' என்று துடுக்கு ன் அவனைக் காலரில் பிடித்தான். செர்யோசா தனது வலுவான உடலின் உதவியின் மூலமாக ஒரு குத்தில் அவனுக்கு மறுமொழி சொன்னான். நாங்கள் உள்ளே ஏற்றப்பட்டோம். எமது ரயிற் பெட்டியின் யன்னல்களிலும் கதவுகளிலும் எம்மைக் கொண்டு வந்த ஏஜென்டுகள் நிரம்பியிருந்தார்கள். நாங்கள் எங்கே போகிறோம்? எமக்குத் தெரிந்திருக்கவில்லை. ரெயில் புறப்படத் தொடங்கிய பிறகும் எமது பிரயாணப் பொருட்கள் எதுவும் வந்து சேர்ந்திருக்கவில்லை. நேரம் பின்னேரம் 2 மணியிருக்கும். ஒரு சுற்றுவழியில் ஒரு சிறு ஸ்ரேசனுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு மெயில் வண்டியுடன் எமது பெட்டி இணைக்கப்பட்டு, பின் மொஸ்கோ(Kazan) ஸ்ரேசனில் இருந்து தாஷ்கன்ட்க்கு(Tash Kant) கூட்டிச் செல்லப்பட இருப்பதை பின்பு நாம் தெரிந்து கொண்டோம். மொஸ்கோவிற்கு மீண்டும் திரும்பிச் செல்ல வேண்டியிருந்த செர்யோசாவும் பைலோபோரோடாவும் 5மணியளவில் விடை பெற்றுக் கொண்டார்கள்.

நாம் பயணத்தைத் தொடர்ந்தோம். எனக்குச் சரியான காய்ச்சல் காயத் துவங்கியிருந்தது. LD உற்சாகமாகவும் சந்தோசமாகவும் இருந்தார். நிலைமைகள் ஒரு ஒழுங்குக்கு வந்திருந்தன. குழப்பநிலைகள் தெளிந்தன எமக்கு. பெரிய தொல்லைகள் இல்லாமல் சட்டப்படி காவலளிக்கப்பட்டு இருந்தது. எமது பொருட்கள் அதே ரெயிலில் வருவதாக எமக்குச் சொல்லப்பட்டது. 9வது நாள் பிரன்சில் (Franze) எமது வண்டியை சாமான்கள் வரும் வண்டி முந்திச் செல்லும் என்று தெரிவிக்கப்பட்டது. எம்மிடம் மாற்றுத் துணிகளோ புத்தகங்களோ இருக்கவில்லை. வழியில் படிக்கவும் கொண்டு செல்லவும் என்று முக்கிய புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து கவனமாக சைர்முக்சும் (Syermuks) போஸ்னான்ஸ்கியும் (Poznanskey) கட்டி வைத்திருந்தார்கள். LDயின் பழக்கமும் விருப்பங்களும் நன்றாகத் தெரிந்திருந்தது. புரட்சியின்போது காரியதரிசியாகவும் உதவியாளனாகவும் LDயுடன் நிறையப் பயணங்கள் மேற்கொண்ட சைர்முக்சுக்கு LDயின் குணாதிசயங்கள் திட்டவட்டமாகத் தெரிந்திருந்தது. தொலைபேசிகளும் விருந்தினர்களும் இடையூறுகள் இல்லாது நீண்ட நேரமளிக்கும் பிரயாணங்களின்போது மிகுந்த சக்தியுடன் அதை உபயோகமாகச் செலவழிப்பவர் LD. அந்த வேலையின் முழுச்சுமையும் முதல் கிளாஸ்மனி லும் (Glazman) பின்பு சைர்முக்சின் தலையிலும் விழுந்தது. இப்பொழுது நாம் ஒரு நீண்ட பயணத்தை ஒரு சிறு புத்தகம் பென்சில் அல்லது ஒரு பேப்பர்த்துண்டு எதுவுமே இன்றிச் செய்ய வேண்டியிருந்தது. நாங்கள் மொஸ்கோவை விட்டு வெளிக்கிடும்பொழுது துக்கிஸ்தான் (Turkestan) பற்றிய Seyonov-Tyanshansky புத்தகம் ஒன்றை மூத்தமகன் கொண்டு வந்து தந்திருந்தான். எமது எதிர்கால தங்கும் இடத்தைப்பற்றித் தெரிந்து கொண்டு பிரயாணத்தின்போது அதற்குப் பழகிக்கொள்ள - தயார்செய்து கொள்ள எண்ணியிருந்தோம். ஆனால் Seyonov-Tyanshansky எல்லா பாக்குகளுடனும் மொஸ்கோவில் தூங்கிக் கொண்டிருந்தது. நாம் நகரின் ஒரு பக்கத்தில் இருந்து மறு பக்கத்திற்கு வெறுங்கையுடன் நகர்ந்து கொண்டிருந்தோம். பின்னேரப்பொழுது தாண்ட முழங்கையைத் தலைக்குக் கொடுத்து அங்கிருந்த வாங்கிலில் கால் நீட்டிப் படுத்துக் கொண்டோம். அரைவாசி திறந்திருந்த எமது பெட்டியின் கதவடியில் ஒரு சென்றி எப்போதும் இருந்தது.

எமது பிரயாணம் எப்படி இருக்கப் போகின்றது? எங்களுக்காக என்ன வைத்திருக்கின்றார்கள்? எமது தங்குமிடம் எப்படியிருக்கும்? அங்குள்ள நிலைமைகள் எப்படியிருக்கும்? தொடக்கமே நம்பிக்கை தருவதாக இல்லை. இருப்பினும் நாம் அமைதியாகவே இருந்தோம். ரயில் பெஞ்சில் குலுங்காமல் சென்றது. நாங்கள் வாங்கிலில் கால் நீட்டிக் கிடந்தோம். அரைவாசி திறந்த கதவு எம்மைக் கைதிகள் என்று நினைவுபடுத்திக் கொண்டிருந்தது. கடந்த சில நாட்களாக ஆச்சரியங்களாலும் ரென்சனாலும் நிரந்தரமற்ற தன்மைகளாலும் களைத்துப் போயிருந்த நாம் சற்று இளைப்பாறினோம். எல்லாம் அமைதியாக இருந்தது. காவலுக்கிருந்தவனும் அமைதியாக இருந்தான். நான் ஓரளவு ஓய்ந்து போயிருந்தேன். எனக்கு நிலைமையை இலகுவாக்க தன்னால் முடிந்ததனைத்தையும் செய்ய LD முயன்றார். ஆனால் தன்னுடைய உற்சாகமான - அன்பான மனோநிலையை எனக்குத் தருவதைத் தவிர அவரிடம் எதுவும் இருக்கவில்லை. நாம் எமது சுற்றாடலை மறந்து தொடர்ந்து சந்தோசமாக இருக்க முயன்றோம். லியோவா பக்கத்துப் பெட்டியில் இருந்தான். மொஸ்கோவில் அவன் இடது எதிர்ப்பணியின் வேலைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தியிருந்தான். இப்பொழுது எங்களுடன் புலம் பெயர்ந்து கொண்டிருந்தான். தன் மனைவியிடம் விடைபெற்றுக் கொள்ளக்கூட அவனுக்கு நேரமிருக்கவில்லை. இத்தருணத்தில் இருந்து எமது வெளி உலகத்துடனான ஒரே தொடர்பாக அவன் இருந்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தான். எமது பெட்டிக்குள் ஒரே இருட்டாக இருந்தது. கதவுகளுக்குள்ளால் மெழுகுதிரியின் மங்கிய சிறு வெளிச்சம் வந்துகொண்டிருந்தது. நாங்கள் மேலும் கிழக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருந்தோம்.

நாம் மொஸ்கோவை விட்டு விலகிச் செல்லச் செல்ல எமக்கான காவல் செயற்பாடுகள் கூடிக் கொண்டே வந்தது. சாமாரா(Samara)வில் எமக்கு மாற்றுவதற்கு உள்ளாடைகள், சோப்புகள், பற்பொடி, பிரஸ்கள் என்பன வழங்கப்பட்டன. ரயில் நிலைய உணவுவிடுதியில் இருந்து எமக்கான உணவு தருவிக்கப்பட்டது. வழமையாகத் தனது உணவைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் LD எவ்வித கட்டுப்பாடுமின்றி வழங்கப்பட்ட அனைத்தையுமே உண்டபடி என்னையும் லியோவாவையும் உற்சாகம் ஊட்டியபடி இருந்தார். நான் அவரை வியப்புடனும் கவலையுடனும் பார்த்துக் கொண்டிருந்தேன். சாமாராவில் எமக்கு வழங்கப்பட்ட பொருட்களுக்கு தனிப்பட்ட பிரத்தியேகப் பெயர்கள் வழங்கப்பட்டன. எமக்கு வழங்கப்பட்ட துவாய் மென்சிவிஸ்கி[4] என்றும் காலுறைகள் யோயோடா (Yoyoda - மென்சிவிஸ்கியின் உதவியாளன்) என்றும் பல பெயர்களில் வழங்கப்பட்டன. அப்பெயர்களுக்கும் வழங்கப்பட்ட பொருள்களுக்கும் இருந்த தொடர்பு கேலிக்குரியதாக இருந்தது. ரெயிலின் ஓட்டம் பனி கொட்டுவதால் மிகவும் பாதிக்கப்பட்டது. இருப்பினும் ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் ஆழமாக ஆசியாவுக்குள் நாம் நுழைந்து கொண்டிருந்தோம்.

மொஸ்கோவை விட்டு வெளிக்கிடும் முன் LD, தனது பழைய இரண்டு உதவியாளர்களையும் உடன் வர LD அனுமதி கோரியிருந்தது நிராகரிக்கப்பட்டிருந்தது. ஆகவே சைர்முக்சும் போஸ்னான்ஸ்கியும் தாங்கள் தன்னிச்சையாக எமது ரெயிலில் வர முடிவெடுத்திருந்தனர். முதல்முறை நாமில்லாது வெளிக்கிட்ட ரெயிலில் நாமும் இருப்பதாக நம்பிக் கொண்டு அவர்கள் ரெயிலை விட்டு இறங்காதிருந்து விட்டார்கள். சிறிது நேரத்தின் பின்புதான் நாம் வண்டியில் இல்லை என்பதைத் தெரிந்துகொண்ட அவர்கள் அரிய்ஸ் (Arys)ல் இறங்கி நாம் வரும் அடுத்த வண்டிக்காக காத்திருந்திருக்கிறார்கள். அங்குதான் நாம் அவர்களைச் சந்தித்தோம். லியோவாவுக்கு ஓரளவு சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தமையால் அவன் மட்டுமே அவர்களைக் கண்டுகொண்டான். அது எம்மை மிகுந்த மகிழ்ச்சிக் குள்ளாக்கியது.

அரிய்ஸ்ல் எமது மகன் அவர்களைக் கண்டு கொண்டதன் பின் எமது நம்பிக்கைக்குரிய நண்பர் ஒருவர் வண்டியில் இருக்கிறார் என்ற தைரியத்தில் நாம் பயணத்தைத் தொடர்ந்தோம். அது எமக்கு மிகவும் மகிழ்ச்சியூட்டியது. 10வது நாள் எமது பொருட்கள் வந்து சேர்ந்தன: Semyonov-Tyanhansky பெற்றுக்கொள்ள நாம் விரைந்தோம். பின்பு இயற்கை, சனத்தொகை, அப்பிள் தோட்டம் என்பது பற்றியெல்லாம் கூட வாசித்தோம். சைர்முக்ஸ் தனக்காகக் கட்டி வைத்திருந்த எழுதும் பொருட்களை மிக்க ஆர்வத்துடன் LD திறந்தார். ஒரு காலைவேளையில் நாம் பிரன்ஸ்(பிஸ்பேக்) Frunze (Pishpek) வந்தடைந்தோம். அதுதான் கடைசி ரயில் நிலையம். அங்கு ஒரே காடாயிருந்தது. உறைபனியில் தெறித்து வந்த சூரிய ஒளிக்கதிர்கள் கண்களைக் கூசச் செய்தது. எங்களுக்குக் காலணி உறைகளும் ஆட்டுத் தோலாடையும் வழங்கப்பட்டது. மூச்சு விட முடியாத அளவுக்கு என் உடுப்புகள் கனத்த பொழுதும் தெருவில் குளிர்ந்தது. உடைந்து சிதறும் பனிக்கட்டிகளின் மேலாக எம் வாகனம் மெதுவாக நகர்ந்தது. பனிக்காற்று முகத்திலறைந்தது. ஏறத்தாழ முப்பது கிலோ மீட்டர் வந்தபின் நின்றோம். சரியான இருட்டு. பனிகளால் மூடப்பட்ட பாலைவனத்தில் நிற்பது போன்ற பிரமை ஏற்பட்டது. இரண்டு காவலாளி மார்கள் வந்து (அவர்கள் 12இலிருந்து 15பேர் வரை இருந்தனர்) நாங்கள் தூங்க இருக்கும் குவாட்டர்ஸ் அவ்வளவு சரியாக இல்லை என்று சற்றுத் தயக்கத்துடன் கூறினர். சிரமத்துடன் பஸ்சை விட்டிறங்கி மெயில் ஸ்ரேசனின் கட்டிடத்தின் கதவடியில் குழுமி உள்ளே நுழைந்து மிக்க ஆறுதலுடன் எமது ஆட்டுத்தோல் கோட்டை கழற்றினோம். ஆனால் கணப்படுப்பு மிகவும் பழையதாகவும் சூடாக்கப்படாததாகவும் இருந்தது. அறையின் சிறு ஜன்னல்கள் பனிக்குள் உறைந்திருந்தது. ஒரு மூலையில் கிடந்த ருஸ்ய ஸ்டவ் பனியைவிட மோசமாகக் குளிர்ந்தபடி இருந்தது. அதன் உரிமையாளர் ஒரு கசாக் பென் நாம் அவருடன் உரையாடினோம். LD அவரது வாழ்க்கை பற்றியும் வேட்டையாடுதல் பற்றியும் நிறையக் கேட்டார். எல்லாம் எம் ஆர்வத்தைத் தூண்டுவதாகவே இருந்தன. எம் பயணம் எங்கு போய் முடியப்போகிறது என்று எமக்குத் தெரிந்திருக்கவில்லை. காவலாளிகள் பக்கத்து வீட்டில் தங்கிக் கொண்டனர். லியோவா அங்கிருந்த வாங்கு ஒன்றில் படுத்துக் கொண்டான். LDயும் நானும் ஆட்டுத்தோல் துணிகளின்மேல் மேசையில் படுத்துக் கொண்டோம். இறுதியாகப் பதிந்த கூரையும், குளிரும் கொண்ட அவ்வறையில் நிசப்தம் விழுந்தபோது நான் பெரிதாகச் சிரித்துக் கொண்டேன். "என்ன இருந்தாலும் கிரெம்ளின் வீட்டைப் போல் இல்லை" என்று சிரித்தேன். LDயும் லியோவாவும் சேர்ந்து சிரித்தார்கள்.

அடுத்த நாள் மீண்டும் நாம் பயணித்தோம். இனிமேற்தான் கொடிய பயணம் எங்களுக்கு முன்னால் கிடந்தது. நாம் கேற்டே (Kaday) மலைகளைத் தாண்டிச் சென்றோம். கொடுங்குளிர். ஆடைகளின் கனம் தாங்கமுடியாததாக இருந்தது. ஒருவன் மேல் பெருத்த மதிற்சுவர்கள் விழுந்து மூடியமாதிரி அவை கனத்தன. தேநீருக்கான அடுத்த நிறுத்தத்தில் இருந்து நாம் ஓட்டுநருடனும் (chauffeur) புதிய GPU ஏஜென்டுகளுடனும் (Alma-Ataவில் இருந்து எம்மைச் சந்திக்க வந்திருந்தனர்) பயணத்தைத் தொடர்ந்தோம். இதுவரை காலமும் தெரியாதிருந்த எம் பய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ணவிபரங்கள் கொஞ்சம் கொஞ்சமாக எமக்குச் சொல்லப்பட்டது. தெரு வாகனப் போக்கு வரத்துக்கு ஏற்றதாக இருக்கவில்லை. பனி கண்ணாடியில் படிந்துகொண்டே இருந்தது. ஓட்டுநர் மிகத் திறமை யாக வாகனத்தை ஓட்டினான். அவனுக்கு இத்தெரு வைப்பற்றி நன்றாகத் தெரிந்திருந்தது. அத்துடன் வோட்காவின் உதவியுடன் அவன் தன்னைச் சூடாக வைத்துக் கொண்டான். இருட்ட இருட்ட காட்டில் பய ணம் மேலும் சிரமமாகிக்கொண்டிருந்தது. எல்லாம் தன்கையிலேயே இருக்கிறது என்பதை நன்றாகத் தெரிந்துகொண்ட சாரதி அதிகாரிகளையும் அவர் களின் பணிகளைப் பற்றியும் மோசமாக விமர்சித் தான். சுகமாக வீடு போய்ச் சேரவேண்டிய விருப் பத்தால் அல்மா-அட்ராவில் இருந்து வந்திருந்த அதிகாரிகள் அவனுக்கு ஈடுகொடுத்துப் பேசினர். ஏறத்தாழ மூன்று மணித்தியாலம் கழிந்தபின் முழு இருட்டுக்குள் கார் நின்றது. நாங்கள் வந்து சேர்ந்து விட்டோம் ஆனால் எங்கே? கோகல் (Gogal) தெருவில் ட்செர் யசா. ஹோட்டலுக்கு (Hotel Dzhetysa - அது கோகல் காலத்து ஹோட்டல்களைப் போன்று மோச மாகக் காட்சியளித்தது) முன்னால் நாம் நின்றிருந் தது தெரியவந்தது. எங்களுக்கு இரண்டு சிறிய அறைகள் தரப்பட்டன. பக்கத்து அறையில் ஏஜென் டுகளும் உள்ளூர் GPU ஏஜென்டுகளும் தங்கினர். லியோவா எமது பொருட்களைப் பரிசோதித்தான். இரண்டு பெட்டி நிறைய உள்ளாடைகள், புத்தகங் கள், LDயின் வரைபடங்கள், அவரின் சைனா இந் தியா சம்பந்தப்பட்ட புத்தகங்கள், எழுதும் ஆவணங் கள் முதலான பல காணாமற் போயிருந்தன. Semyonov-Tyanshansky உட்பட பல புத்தகங்கள் எங்கோ பனியிற் காணாமற் போயிருந்தன. 15 ஜோடி கண்கள் - ஒழுங் காக பொருட்களைக் கவனித்துக் கொள்ள முடிய வில்லை.

காலையில் லியோவா வெளியே சென்றான். அவன் நகரைப் பழக்கப்படுத்திக் கொண்டான். முத லில் தபால் நிலையமும் டெலிகிராப் நிலையமும் இருக்கும் இடங்களைத் தெரிந்துகொண்டான். அவை எமது வாழ்வின் முக்கிய பாகமாக இருந்தது. இரசாயனக் கடை ஒன்றையும் அவன் கண்டுபிடித்தி ருந்தான். பேனை, பென்சில், பாண், பட்டர், மெழுகு திரிகள் என்று எமக்குத் தேவையான கணக்கற்ற பொருட்களை அவன் தேடினான். முதல் சில நாட் கள் LDயும் நானும் அறையை விட்டு வெளியேற வில்லை. பின்பு பின்னேரங்களில் வெளியே சென்று சிறிது காலாற நடக்கலானோம். வெளி உலகத் துடனான எமது தொடர்பு எமது மகனுடனேயே நிகழ்ந்தது. பக்கத்தில் இருந்த உண்ணும் இடத்தில் இருந்து எமக்கு உணவு கொண்டுவரப்பட்டது. நாள் முழுக்க லியோவா அலுவல்களுடன் இருந்தான். நாம் பொறுமையுடன் அவனுக்காகக் காத்திருந் தோம். பேப்பர், அந்நகரத்து மக்கள் பற்றிய தகவல் கள் மேலும் பல செய்திகளை அவன் எங்களுக்குக் கொண்டுவந்தான். சைர்முக்ஸ் அல்மா-அட்டா வுக்கு வந்து சேர்ந்தாரா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள நாம் மிக்க ஆர்வமாக இருந் தோம். திடீரென நாலாம் நாட் காலை எமக்குப் பழக் கமான குரலை நாம் காரிடோரில் கேட்டோம். எமக்கு எவ்வளவு சந்தோசமாக இருந்தது என்பதை விபரிக்க முடியாது. கதவின் பின்னால் இருந்து சைர் முக்சின் காலடியோசையையும் குரலையும் மிக்க ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டிருந்தோம். எமது அறைக்கு முன்அறை அவருக்கு வழங்கப்பட்டது. நான் கொரிடோருக்குள் மிக்க ஆர்வத்துடன் நுழைந்தேன். அவர் தூரத்தில் இருந்தபடியே எனக் குத் தலையசைத்து வணக்கம் தெரிவித்தார். அவரு டன் கதைத்து சூழ்நிலையை மிகவும் சிக்கலாக்கிக் கொள்ள விரும்பாவிட்டாலும், அவர் எமக்கு அரு கிலிருப்பதை எண்ணி மிகவும் சந்தோசித்துக் கொண்டோம். அடுத்தநாள் அவர் எம் அறைக்கு வந் தார். எமக்கு என்ன நடந்தது என்பது பற்றியும் நாம் சேர்ந்து எதிர்காலத்தில் செய்யவேண்டியது பற்றிய திட்டங்கள் பற்றியும் பேசிக்கொண்டோம். ஆனால் அந்த எதிர்காலம் மிகக் குறுகியதாக இருந்தது. அந்தநாள் இரவு பத்துமணிக்கே அது முடிந்து போனது. ஹோட்டல் மிக அமைதியாக இருந்தது. இரும்பு ஸ்டவ் அறையை மிகுந்த வெப்பத்துக்கு உள்ளாக்கி விட்டதால் அறைக் கதவைப் பாதி திறந்துவிட்டபடி அறைக்குள் நானும் LDயும் அமை தியாக அமர்ந்திருந்தோம். நாங்கள் மெதுவான காலடிச் சத்தத்தைக் கேட்டோம் (லியோவாவும் இதைக் கவனித்ததையும் என்ன நடக்கப் போகிறது என்று அவன் முன்பே ஊகித்திருந்ததையும் நாம் பின்பு தெரிந்து கொண்டோம்) அவர்கள் திடீரெனத் தோன்றினார்கள். கதவைத் தட்டாமலேயே சைர் முக்ஸ் அறைக்குள் அவர்கள் நுழைந்து உடனடி யாக வெளிக்கிடும்படி கேட்டதும் சிலிப்பர்களுடன் இருந்த சைர்முக்ஸ் "நான் எனது சப்பாத்துக்களைப் போட்டுக் கொள்ளலாமா?" என்று கேட்டதும் எமக் குக் கேட்டது. மீண்டும் அதே மெதுவான இரைச்ச லற்ற காலடிச் சத்தம் கேட்டது. பின்பு ஆழமான அமைதி. பின்பு காவலாளி வந்து சைர்முக்ஸ் அறைக் கதவைச் சாத்திவிட்டுச் சென்றான். அதன் பிறகு அவரை நாம் சந்திக்கவேயில்லை. அல்மா-அடாவில் இருந்த GPU கட்டிட அடித்தளத்தில் குற் றவாளிகளுடன் தங்கவைக்கப்பட்டு பல கிழமைகள் பட்டினி போடப்பட்டார். அதன் பிறகு ஒரு நாளைக்கு 25 கோபெக்குகள் கொடுத்து மொஸ்கோவுக்கு அனுப்பப்பட்டார். ஒரு பாண் வாங்கக் கூட அக்காசு போதுமானதில்லை. பின்னால் நாம் தெரிந்துகொண் டதன்படி ஏறத்தாழ இதேநேரம் போஸ்றான்ஸ்கியும் டாஸ்கன்டில் வைத்துக் கைது செய்யப்பட்டார். ஏறத்தாழ 3 மாதங்களின் பின் அவர்கள் புலம்பெ யர்ந்திருந்த இடத்தில் இருந்து தொடர்பு கொண் டார்கள். அதிர்ஷ்டவசமாக அவர்கள் இருவரும் கிழக்கே ஒன்றாகவே எடுத்துச் செல்லப்பட்டார்கள். இருப்பினும் பின்பு வெவ்வேறு இடத்துக்குக் கடத்தப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டார்கள்.

ஆக LDக்கு உதவியாளர்கள் யாரும் கிடைக் கவில்லை. புரட்சிக்கும் LDக்கும் அவர்கள் மிகவும் விசுவாசமாக இருந்தமைக்காக அவர்கள் எல்லோ ரும் மோசமாக எதிரிகளால் பழிவாங்கப்பட்டார்கள். மிகவும் இனிமையான அமைதியான கிளாஸ்மன் (Glazman) 1924இலேயே தற்கொலை செய்துகொள்ள நேர்ந்தது. சைர் முக்சும் போஸ்நான்ஸ்கியும் தூரகி ழக்குக்கு கடத்தப்பட்டார்கள். பூட்டோவ்(Butov) பொய்ச் சாட்சிகள் அடிப்படையில் கைதுசெய்யப் பட்டார். அதற்கு எதிராக அவர் உண்ணாவிரதப் போராட்டம் செய்து சிறை ஆஸ்பத்திரியில் அவரது இறப்புக்கு இட்டுச் சென்றது. ஆக LDயின் உதவி யாளர்கள் மிக்க வெறுப்புடன் கொடிய எதிரிகளாக கணிக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்டார்கள். தற்போது LD தூரத்து அல்மா-அடாவில் பலமின்றி முடங்கிப்போ னதாக எதிரிகள் நினைத்துக் கொண்டார்கள். ●

1. Alma-Ata: Tyan-Shan களுக்குப் பின்னால் சீன எல்லையில் இருக்கும் நிலநடுக்கங்களும் கொடுங் குளிரும் வெள்ளப்பெருக்கும் நிறைந்த நகரம். ரெயில் நிலையம் 250km தூரத்திலும் மொஸ்கோ 4000km தூரத்திலுமிருந்த கிராமத்தில் இவர்கள் தங்கவேண்டியேற்பட்டது.

2. லேவ் டாவிடோவிச் ப்ரோன்ஸ்ரைன் (Lev Davidovich Bronstein) என்பது ரொட்ஸ்கியின் முழுப் பெயர். தந் தையின் பெயர் டாவிட் லியோன்டியேவிச் ப்ரோன் ஸ்ரைன் (Davyd Leontiyevitch Bronstein). Lyova (இவரது சிறுவயது செல்லப் பெயர்) என்பதன் சுருங்கிய வடி வம் Lev. ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் Lev என்ப தன் அர்த்தம் Lion (சிங்கம்). டொச்சில் Leo. இவரது மனைவியார் தொடர்ந்து இவரை LD என்றே குறிப் பிடுகின்றார். இவர் தனது முதலாவது புலப்பெ யர்வை Trotsky என்று பெயரிட்ட பொய்க் கடவுப் பத் திரத்துடன் செய்தார். பின்பு தொடர்ந்து Leon Trotsky அப்பெயரையே பாவித்துக் கொண்டார் ட்ரொட்ஸ்கி.

3. GPU which is the abbreviation of (Gosudarstvennoye Politicheskoye Upravleniye) ie State Political Board is the soviet organization of second police.

The Exile by N.I. SEDOVA - TROTSKAYA (My Life - An attempt to an autobiography -
Penguin Books - LEON TROTSKY)
தங்களது exile வாழ்க்கையைப்பற்றி லியோன் ட்ரொட்ஸ்கியின் இரண்டாவது வாழ்க்கைத் துணைவி எழுதிய இப்பகுதி ட்ரொட்ஸ்கியால் அவரது 'எனது வாழ்க்கை' புத்தகத்தில் The Exile என்ற பிரிவின் கீழ் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

## மொழிபெயர்ப்பாளர் குறிப்பு:

புலம்பெயர்வாழ்வு பற்றிய உலகளாவிய பார்வை கள் அனைத்தையும் உள்வாங்கக்கூடிய - புரிந்து கொள்ளக்கூடிய புலம்பெயர்வாழ்வு நாம் வாழ்ந்து கொண்டிருப்பதால் இக்கட்டுரையின் இன்றைய தேவை அவ்வளவு பிரச்சனைக்குரியதல்ல.
ஒரு ஆதிக்க அதிகார வடிவம் தங்களில் எவ்வளவு செல்வாக்குச் செலுத்தும் என்று தெரியாது தங் களை ஒரு பொருளாதார அகதிகளாக மட்டும் எண்ணி சங்கோஜப்பட்டுக் கொள்பவர்களுக்கு ஒரு ஆதிக்க அரசவடிவம் ஒரு முக்கிய தலைவரையே எப்படி வலுக்கட்டாயமாக புலம்பெயர் வாழ்வுக்குள் தள்ளியது என்பது உதவியாயிருக்கும்!
ட்ரொட்ஸ்கிஸ்டுகள் இன்றைக்கும் வர்க்க விடுத லைக்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள் என் றால் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு நடந்த இதைப்பற்றி இன்றும் கதைப்பதில் ஒரு புதினமும் இல்லை.
வரலாற்றுக் குறிப்புகளாயினும் அல்லது வரலாற் றின் எந்த ஒரு அங்கமாயினும் எழுந்தமானமாக அல்லது தேவையானபடி - தங்களின் வரலாற்றுத் தேவையை இழந்துவிடுகிறதா?
இக்காலகட்டங்களில் இதை நினைவு கூருவோம் அல்லது ஒன்றை நினைவுகூரும்போது அதன் அடிப் படைத் தேவையை நினைவுகூர வேண்டும் என்ற கட்டாயத்துக்குப் பின்னால் இருக்கும் அதிகார வடிவம் ?= ?

# கொந்துதல்

பளபளக்கும் கட்டிடக்கண்ணாடி
வழிப்பவனின் முகமோ
இன்றுவரை
தூசுகள் படிந்தபடி

காகங்கள்தான் கொந்துகின்றதே

கற்களிடையே வளர்ந்த
மரத்தின் கனிகளை
இந்தப் பனிக்குள்.

**மணிவண்ணன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மத்ரீதின் ரெடீரோ பூங்காவில் பெருச்சாளி உயரமுள்ள அணில்கள் ஓடின. சாம்பல் நிறத்தில், ராமர் தொட்டுத் தடவியதால் மூன்று கோடுகளை முதுகில் பூசிக்கொண்டுள்ளது என்று கருதப்படும் சிறு சுண்டெலி அணில்கள் இல்லை. கடும் பழுப்பு நிறத்தில் முதுகில் கோடில்லா, தடித்த புசுபுசுவென்ற வாலுள்ள அணில்கள். சிறிதும் பயப்படாமல், எதிரே வால் தூக்கி நின்று வெறிக்கும் அணில்கள். அணில்கள் வழி விட்டபின் சற்றுத் தூரம் நடந்து போனால் மூலையில் ரோஜாத் தோட்டம் என்று வழிகாட்டினார்கள்.

அது ரோஜாப் பூக்கும் காலம் இல்லை. அதற்கு இன்னும் ஒரு மாதம் இருந்தது. ரோஜாவுக்காகக் காத்திருந்த தோட்டத்தின் பக்கம் நடக்க முற்பட்டபோது ஒரு சொட்டு மழைநீர் கன்னத்தில் பட்டுத் தெறித்தது. உடம்பு சிலிர்த்தது. எதிரே ஒரு கொட்டையை ஆராய்ந்தவாறிருந்த அணிலும் திடுக்கிட்டுத் துள்ளியது. அணிலைப் பார்த்துச் சிரித்தபோது சிறு சிறு ஊசிகளாய் மழை இறங்கியது. வருடும் மழை. ஒவ்வொரு அடிக்கும் ஒரு மழைச்சரம் தலையிலும், காதிலும், கண்ணிலும், கையிலும் தொட்டுப் போயிற்று. கீழே கிடந்த கொட்டைகளை நோட்டமிட்டுத் துள்ளியபடி அணிலும் இவள் வழியில்.

எந்த இடத்துக்குப் போனாலும் அந்த இடத்துக்கு உகந்த காலம் என்று நினைக்கப்படும் காலத்திற்கு முன்பு போய்விடுகிறாள். அல்லது காலம் கடந்து. சில சமயம், பூக்க நினைக்கும் மரம், செடிகளையும், சிலசமயம், பூத்து ஓய்ந்தவற்றையும், சில சமயம், பேய் மழை அல்லது காற்றில் வீழ்ந்தவற்றையும் காண நேரிடுகிறது. "சரியான காலத்தில் வந்திருந்தால் பனியில் விளையாடி இருக்கலாம். பனி பொம்மை செய்திருக்கலாம்." என்றோ, "இந்தப் பூவைப் பார்த்திருக்கலாம்; இந்த மரத்தின் இலைகள் வண்ணம் தோய்ந்து இருப்பதைப் பார்க்கலாம்." என்றோ அபிப்பிராயங்கள் வந்த வண்ணம் இருக்கும். இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே சிலசமயம் தூறல் போட ஆரம்பிக்கும். "அட, இது என்ன அகால மழை!" என்று வியந்து போவார்கள். அகால மழை இவளுக்குப் புதிதல்ல. தான் சேன் தீபக் ராகம் பாடியதும் நெருப்பு உண்டான கதை, தக்ஷிதர் 'வர்ஷய' என்றதும் மழை கொட்டிய கதை, ரிஷ்ய சிருங்கர் கதை, குறள் பெண் பெய் என்றதும் பெய்யும் மழைக் கதை இவற்றைக் கேட்டவாறு வளர்ந்தவள். ஒரு பெண்ணின் வாழ்வில் திருப்பம் ஏற்படும்போது இயற்கைக்கு வெறிபிடித்து மழை கொட்டும் சினிமா பிம்பங்களின் சுமை வேறு. வெள்ளப் பெருக்கும் பஞ்சமும் தொடர்ந்து இருக்கும் நாட்டுக்காரியான அவளுக்கு அகாலமான, அசாதாரணமான எதையும் ஏற்றுக்கொள்ள முடிந்தது. அவளுக்குத் தேவைப்பட்டதெல்லாம் சிறு அற்புதங்களே. குழாயைத் திறந்தவுடன் தண்ணீர் கொட்டும் அற்புதம். மின்சாரப் பித்தானைத் தட்டியதும் விளக்கு எரியும் அற்புதம். பேருந்து நிலையத்திற்குச் சென்றதும் பேருந்து வரும் அற்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதம். மின்சாரவண்டி நேரத்தில் வரும் அற்புதம். உட்கார இடம் கிடைக்கும் அற்புதம். ஒரு ரூபாய் நாணயத்தைப் போட்டதும் தொலைபேசி இயங்கும் அற்புதம். அரிசியில் கல் இல்லா அற்புதம். பாலில் தண்ணீர் கலக்காத அற்புதம்.

இன்னும் பூக்காத ரோஜாத் தோட்டமும்; எதிர்பாராத மழையும் அவள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவேபட்டது. தொடர்ந்து மழைச் சரங்கள். பக்கத்தில் அணில் துள்ளல். துள்ளித் துள்ளி எட்டப் போய் நின்று கொண்டு, இவளுக்கு வழி காட்டுவதற்குக் காத்திருப்பதுபோல் நிற்கும். இடையில் அவசரகதியில் மரம் ஏறல், இறங்கல். இவள் அருகில் போனதும் வாலை உயர்த்தி ஒரு துள்ளல்.

விசாலமான பூங்கா. குழந்தைகளுடன் பெற்றோர்; சைக்கிள் ஓட்டியபடி விரையும் சிறுமி, சிறுவர்கள்; ஞாயிற்றுக்கிழமைக்கான சிறு விளையாட்டுகளிலும், நாடகங்களிலும் பங்கேற்பவரின் ஆரவாரங்கள்; எதிர்பாரா மழையை ஏற்கும் கூச்சல்கள், இவை தூரத்தே கேட்டன. ஏற்ற இறக்கங்களுடன். ரோஜாத் தோட்டத்திற்குச் செல்லும் பாதையில் இவள் மற்றும் ஒரு உற்சாகவெறி கூடிய பெருத்த அணில். சற்றுத் தூரத்தே, ரோஜாத் தோட்டத்துக்கான, கொடிகள் படர்ந்த நுழைவு வளைவு.

மழைச் சரங்களை ஏற்றபடி வளைவின் அருகே வந்து பின்பு வளைவின் கீழ்நின்றபடி தோட்டத்தை நோட்டமிட்டாள். நெடுந் தூரம்வரை இன்னும் பூக்காத ரோஜாச் செடிகள், புதர்கள். ஒரு புறம் பதியன்கள். வளைவுகளின் மேல் ஏற்றப்பட்ட கொடிகள். ரோஜா வாசனையை எதிர்பார்த்து அலையும் மாருதம் பட்டதும் உஸ்ஸென்ற சிறு ஒலியுடன் அசையும் இலைகள்.

வளைவின் ஒதுக்கத்திலிருந்து விலகி உள்ளே நடக்க ஆரம்பித்ததும் மீண்டும் மழையின் தொடல். அணில் துள்ளிப் போய் விட்டது எங்கோ. ரோஜா இலைகளைத் தொட்டபடி நடையைத் தொடர்ந்தாள். ரோஜாத் தோட்டத்தின் சிறுபாதைகளில் நுழைந்து போனதும் அமர்வதற்கான சிமெண்டு பெஞ்சு கண்ணில் பட்டது. அந்தப் பெஞ்சில் அமர்ந்தாள். சுற்றிலும் சுவர் போல உயர்ந்தெழும்பிய ரோஜாப் புதர்கள். மழை கொட்டியபடி. முகமெல்லாம் துடைக்காத மழைநீர். தண்ணென்ற ஈரம் உடம்பில்.

வாலை உயர்த்தித் துள்ளியபடி திடீரென்று அணில் வந்தது. ஒரு துள்ளுத் துள்ளி பெஞ்சின் முனையில் அமர்ந்தது. அதே அணிலா வேறு ஒன்றா? அதே நிறம். தடித்த வால். இவளிடம் ஏன் வந்தது? தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் என்ன? பருத்த வாலைத் தூக்கியபடி ஒரு அணில் அவள் அருகில். அவ்வளவுதான். அதற்கு மேல் எந்த ஆழத்துக்கும் போகவேண்டாம். வேரைக்கிளப்ப வேண்டாம். எல்லாம் கண்ணெதிரே நிதர்சனம். பீன்ஸ் கொடியைப்பற்றிக் கொண்டு ஏறிப் போன ஜாக் மாதிரி எல்லாவற்றையும் கொடியாக்கி ஏறினால் முடிவில் ஒரு அரக்கன் இருக்கலாம். இது. இப்போது. இந்த அணில். இவள் - இவ்வளவுதான் நிஜம். மழை நிஜம். தண்மை நிஜம்.

தற்செயலாகப் பார்வை சற்றுத் தூரத்தே இன்னொரு பெஞ்சில் அமர்ந்திருந்த இருவர் மேல் பட்டது. பக்கவாட்டில் அமர்ந்து ஒருவரை ஒருவர் பார்த்தபடி இருந்த ஒரு இளம் பெண்ணும், ஆணும். இருவர் கைகளும் இணைந்திருந்தன. அமர்ந்திருந்தார்கள் அசையாமல். பார்வைகளைப் பிணைத்தபடி. மழை அவர்களை நனைத்தது. தலைகளில் பட்டு முகங்களில் வழிந்தது. இருவரின் கூந்தலும் மழையில் நனைந்து முகங்களில் ஒட்டிக் கொண்டிருந்தது. அவளுடையது கருத்த, கனத்த கூந்தல். அதன்மேல் மழைத் துளி முத்துக்கள். அவனுடையது தேன்நிற, பிடரி தொட்ட, இறகு போல் மென்கூந்தல். சிறு பூக்கள் போட்ட மெல்லிய உடை ஈரமாகிப் போய் அவள் தேகத்தில். முரட்டுத்துணியில் கால் சராயும், பளீரிடும் மஞ்சள் பூக்கள் பெய்த சட்டையும் ஈர இறுக்கமாய் அவன் உடலில். அவர்கள் ரோஜாத் தோட்டத்தில் இருந்தனர். இருக்கவில்லை.

மெல்ல, மிக மெல்ல, அவள் கை உயர்ந்து அவன் கன்னத்தைத் தொட்ட கூந்தலை ஒதுக்கியது ஒருபுறம். அவள் கை பட்டதும் அவன் ஒரு கணம் மலைத்துத் துவண்டு பின் தன் முகத்தால் அவள் கையைத் தன் கழுத்தில் அழுத்தினான். தலையைச் சாய்த்தபடி அவளை நோக்கினான். அவள் புன்னகைத்தாள். பின் இன்னொரு கையை அவன் தோளில் வைத்தாள். அவசரமின்றி, பதட்டமின்றி, ஆத்திரமின்றி அவர்கள் செயல்பட்டனர். வெகுகாலம் இதற்காகக் காத்திருந்தது போலவும், இன்னும் வெகுகாலம் அவர்கள் முன் இருப்பது போலவும் பொறுமை. மழையும், ரோஜாச் செடிகளின் இலைகளைத் தொட்ட காற்றும் அவர்களை இயக்கியதுபோல் மழைக்கும், காற்றுக்கும் ஈடு கொடுத்தபடி அசைந்தார்கள், ரோஜாப் புதர்கள் புடைசூழ.

அவர்களை நோக்கக்கூடிய தூரத்தில் எதிரே அவளும், வியப்பில் விரிவதுபோல் பெரிய கண்களுடன் அணிலும்.

திக்குகள் எட்டும் சிதறி தக்கத் தீம்தரிகிட, தீம்தரிகிட, தீம் தரிகிட என்றொரு லயகதி மனதில் ஓடியது. ஒரு வேக மின்னலாய்.

மழை வலுக்கத் தொடங்கியது. அவள் எழுந்தாள். அணில் தரையில் விரைவாகத் துள்ளி ஓடி ஒரு மரத்தில் ஏறிக் கொண்டது. மழையைத் தன்னுடலில் ஏற்றுக் கொண்டபடி நடந்து போய் ரோஜாப்புதர்களின் முடிவில் நின்று அவள் திரும்பிப் பார்த்தபோது அவளும் அவனும் இறுகப் பிணைந்திருந்தனர். மழையைப் பொருட்படுத்தாமல் வந்த சூரிய ஒளிக் கதிர் ஒன்று அவர்கள்மேல்பட, அவர்கள் மேனிமேல் இருந்த மழைத் துளிகள் திடீரென்று ஒளிர்ந்தன. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடவுள் வியாபாரம்

## ராஜி சுதர்சன்

ஏதோவொரு மேலான அல்லது வேறுபடுகின்ற சக்தியை பெயர் கொண்டு அழைக்கிறோம். இல்லாவிட்டால் பெயரைக் கொடுத்து விட்டு பின்னர் அதைத் தேடுகிறோம் என்றும் சொல்லலாம். அதனை உங்களுக்கு சாதமாகப் பயன்படுத்தி நிலையான இன்பத்தைப் பெற விளைகிறீர்கள். எல்லாம் உங்களுக்காகவே படைக்கப் பட்டது என்னும் உங்கள் கண்ணோட்டம்தான் நீங்கள் காணாத ஒன்றையும் உங்கள் பக்கம் திருப்ப நினைக்கிறது. கடவுள் வழிபாடு ஆரம்பமாகிறது. நீங்கள் அறியாத ஒன்றுக்கு கட்டுப்படுகிறீர்கள். இல்லாவிட்டால் பயப்படுகிறீர்கள். இது உங்கள் மனத்தின் அடிப்படை இயல்பு. தீவிரமான கற்பனைத்திறன்தான் இப்பயத்தையும் அதன்வழியே கட்டுப்படுதலையும் நிகழ்த்துகிறது. உங்களுக்குத் தெரியாத ஒன்று எப்படி இருக்குமோ என்ற கேள்விக்கு உங்கள் மனம் தன் கற்பனையான உருவங்களையும் வலுவையும் பதிலாக அளிக்கிறது. அசாதாரண ஒன்றுபோல் தோன்றுவதால் அதன் மீது பக்தி ஏற்படுகிறது. எல்லாவற்றிலும் நிலைத்த தன்மையைப்பெற விரும்பும் உங்கள் மனமானது வேறு வழியில்லாமல் தானே ஏற்படுத்திக் கொண்ட கற்பனைத் தோற்றத்தை துணையாகக் கொண்டு அதைப் பெறலாம் என்று நினைக்கிறது. எண்ணங்கள் அதன்படியே செயற்பட உங்களைத் தூண்டுகிறது. வழிபாடு தொடர்கிறது.

தொடர்ந்து உங்கள் எல்லாச் செயற்பாடுகளோடும் அதைத் தொடர்புபடுத்துகிறீர்கள். விளைவுகளுக்கெல்லாம் அதுதான் காரணம் என்று நினைக்கிறீர்கள். அவை மகிழ்ச்சிகரமாகத் தோன்றும்போது இன்னும் அண்மிக்க விரும்புகிறீர்கள். துன்பமாக உணரப்படும்போது என்றாவது கிடைக்கும் என்று நம்பி இன்பத்தை எதிர்பார்த்து காத்திருக்கிறீர்கள். ஆம், தொடர்ச்சியாக காத்திருக்கிறீர்கள். உங்கள் மனமே ஒன்றை இறுகப் பற்றிப்பிடித்துக் கொண்டு அதற்கு சாதகமாக எல்லாவற்றையும் நம்ப வைக்கிறது. மனத்தின் செயற்பாடு என்ன என்பதை அறிந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அதற்காக என்ன வெல்லாமோ செய்கிறீர்கள். உடலை வருத்தத் துணிகிறீர்கள். சடங்குகள் என்று நீங்கள் அழைக்கும் உங்கள் பழைய ஏற்பாடுகளை மிகையாக நடைமுறைப் படுத்துகிறீர்கள். ஒரே சொல்லால் வழிபாடு என்றழைக்கப்படுகிறது.

செயற்பாடு எவ்வளவு அறிவுபூர்வமானது என்று சிந்திப்பதில்லை. செயற்பாட்டை காத்தல்தான் அறிவுபூர்வமானது என்று எண்ணுகிறீர்கள். எல்லாமே மாறிக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கணமும் மாற்றம் நிகழ்ந்துகொண்டுதான் இருக்கிறது. ஆனால் உங்களைப் பொறுத்தவரையில் இச்சொல் கசப்பாயிருக்கிறது. ஏனென்றால் பழக்கப்பட்ட ஒன்றை விட்டுவிட நீங்கள் தயாராயில்லை. அது எவ்வளவு முட்டாள்தனமானது என்றாலும் கூட. அதனோடு இவ்வளவு காலமும் பின்னிப் பிணைந்து இருந்து விட்டீர்கள். வேறுபடுத்திப் பார்க்கின்ற தன்மையையே இழந்து விட்டீர்கள். உங்களிடமிருந்து அதைப்பிரிப்பது உயிரைப் பறிப்பதற்குச் சமனாகும் என்று உணருகிறீர்கள். வெளியே எட்டிப் பார்க்கவே தயங்குகிறீர்கள். அதனால் எதற்கும் நீங்கள் தயாராக இல்லை.

'கடவுள் வியாபாரம்', இங்குதான் வியாபாரம் ஆரம்பமாகிறது. உங்கள் பலவீனம் வெகு அழகாக மற்றவரால் பயன்படுத்தப்படுகிறது. உங்களை அவர் கையில் கொடுத்துவிட்டீர்கள். இப்போது உங்களை இயக்குபவர் அவர்தான். இயக்கியவரும் அவர்தான். இனிமேல் இயக்கப்போறவரும் அவர்தான்.

நீங்கள் மாறாத வரையில், உண்மையில் நீங்கள் சம்பாதித்துக் கொடுக்கும் கருவிகள். பூசாரிதான் முதலாளி. பெற்ற இலாபத்தில் நீங்கள் தேடும் கடவுளுக்கு என்ன பங்கு என்று தெரியவில்லை. இல்லாவிட்டால் இவ் வியாபாரத்தில் கடவுள் இறந்துவிட்ட பங்குதாரர்போல் தோன்றுகிறது.

அவர் உங்களை அழைத்துச் செல்கிறார் என்று நம்பி உங்களை இயக்கும் அதிகாரத்தை கொடுத்து விட்டீர்கள். குறைந்த விலையில் நிறைந்த இன்பம் பெறவிரும்பும் உங்கள் மனத்தை அறிந்த வியாபாரி, உண்மையில் உங்களை முற்று முழுதாக உங்களை விட அறிந்த வியாபாரி நிச்சயமாக பூசாரிதான். இன்னுமொன்றும் நிகழவும் சாத்தியமிருக்கிறது. இங்கு வியாபாரம் என்பது நிகழாமல் வெறுமனே வழங்கப் படுதல் எனும் செய்கையாகும். நீங்களோ பெற்றுக் கொள்பவர். வழங்கப்பட்டதற்கும் முட்டாள்தனத்திற்கும் உள்ள சம்பந்தம் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. ஆராயப்படுவதில்லை. வழங்கியவர் பற்றிய நம் கற்பனைத் தோற்றம்தான் முன்னணியில் நிற்கிறது. இதனாலும் உங்களை வேறொருவரிடம் ஒப்படைக்கிறீர்கள். உங்கள் தானே இயங்கும் சக்தியை இழந்து விடுகிறீர்கள். யாரையோ பின்பற்ற எப்போது நீங்கள் முனைகிறீர்களோ அப்போதே நீங்கள் இறந்துவிடுகிறீர்கள்.

இருக்கிறதா? அல்லது இல்லையா? என்று நிச்சயமாகத் தெரியாத ஒன்றுக்கு காலமெல்லாம் காத்திருப்பதைவிட இருக்கும் ஒன்றை அக்கணமே பற்றிக் கொள்ளல் புத்திசாலித்தனமானது.

ஒவ்வொரு கணத்தையும் மகிழ்ச்சியாகக் கொள்ளுங்கள். நீங்கள் தேடும் தெய்வத் தன்மையைக் கண்டுகொள்வீர்கள். ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கணிதம் ஒன்று காதல் இரண்டு

அர்விந் அப்பாதுரை



செவ்வாய்க் கிரகத்திலிருந்து அன்றுதான் பூமிக்கு வந்திறங்கியது அந்தத் தமிழ்க் குடும்பம். கடலோரத்தில் கட்டப்பட்டிருந்த அந்த மாளிகையின் நான்காவது மாடியில் ஒரு பெரிய வீட்டைக் கீதாவும் ராகவனும் வாடகைக்கு எடுத்திருந்தார்கள். அவர்களுடைய பிள்ளைகள் லகரியும் ரசூலும் இம்முறை அவர்களுடன் பூமிக்கு வந்திருந்தது உறவினர்கள் மத்தியில் ரொம்பவும் விசேஷமாகப் பேசப்பட்டது.

அவர்கள் வந்திறங்கிய அன்று இரவே, அவர்களைப் பார்க்க, முப்பது இட்லியையும் வெண்டைக்காய் சாம்பாரையும் தயார் செய்து எடுத்துக்கொண்டு அம்புலிமாமா வந்துவிட்டார். பால்கனியில் அமர்ந்து நிலா வெளிச்சத்தில் மாமன், மச்சான், பெரியம்மா, சின்னம்மா, ஒன்று விட்ட சகோதர சகோதரிகள். இவர்களைப்பற்றிப் பேசிக்கொண்டே பூப்போன்ற இட்லி யையும் பஞ்சாமிர்தம்போன்ற சாம்பாரையும் தின்று தீர்த்தார்கள் அனைவரும்.

"என்னடா ரசூல் கல்யாணம் கில்யாணம் பண்ணிக்கிறா மாதிரி உத்தேசமில்லையா?" மாமா கேட்டார்.

"லகரி பண்ணிக்கப் போறாளாம்"

அம்புலிமாமா வியப்படைந்தார்.

"இப்போ தானேம்மா உனக்குக் கல்யாணம் நடந்தது? அதுக்குள்ள என்ன இன்னொரு கல்யாணம்?" கேட்டார் மாமா.

அம்புலிமாமா சொன்னது போல் லகரிக்கு சென்ற வருடம் தான் கல்யாணம் நடந்தது. பையன் புதனில் வசிப்பவன், புத்திசாலி. செவ்வாய்க்கு ஒரு கருத்தரங்கிற்கு வந்திருந்த போது லகரியுடன் ஒரு காதல் கதையில் ஈடுபட்டு இருவரும் திருமணம் செய்து கொண்டனர். கல்யாணம் நடந்த மூன்றாவது மாதம், திரும்ப அவன் புதனை நோக்கிப் பயணம் செய்ய நேரிட்டது. லகரியை அவனுடன் வரச் சொன்னான். அவள் மறுத்தாள். விவாகரத்தும் நடந்துவிட்டது.

*வெகுவிரைவில் விஸ்தரிக்கும் பிரபஞ்சம். அவரவர் விருப்பப்படி வாழ அனுமதிக்கும் அருமையான கலாச்சாரம். சாந்தம்.*

சாப்பிட்டு முடிய லகரியும் ரசூலும் எழுந்தார்கள். கீதா, ராகவன், அம்புலிமாமா மூவரும் பேசிக்கொண்டிருந்தார்கள். லகரி கணக்குப் பைத்தியம் என்றால் மிகையாகாது. ரசூல் கவிதைப் பைத்தியம். இருவரும் கர்நாடக இசைப்பிரியர்கள்.

அன்றிரவு நகரத்தின் மையத்தில் கருங்கல்லில் செதுக்கப்பட்டு பல நூற்றாண்டுகளாகப் பழுதடையாமல் கம்பீரமாக நின்று கொண்டிருந்த சிவபெருமான் கோயிலில் கச்சேரி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பூமிக்கு வந்து இறங்குவதற்கு முன்பே IP-MAIL (INTER PLANET MAIL) மூலமாக இரண்டு டிக்கட் ரிசர்வ் செய்திருந்தார்கள், லகரியும் ரசூலும்.

கச்சேரி துவங்குவதற்கு முன் எல்லோருக்கும் கள் வழங்கப்பட்டது. அருந்தியபின் அவரவர் இருக்கையில் அமர, வீணை அரங்கத்தை ஆழமான ஆன்மீக சூழ்நிலையில் மூழ்க வைத்தது. சுவரங்களில் இருந்து கசிந்தது தேனா பாலா என்பது தான் கேள்வி. எல்லா ரசிகர்களும் திருப்தி அடைந்தார்கள். கச்சேரிக்குப் பின்னும் கள் வழங்கப்பட்டது. பயணத்தால் களைத்திருந்த ரசூல்,

"நான் போகிறேன் நீ வேண்டுமானால் இருந்து கள் பருகிவிட்டு வா" என்று லகரியிடம் கூறிவிட்டு டாக்சி ஒன்றைக் கூப்பிட்டு அதில் ஏறிச் சென்று விட்டான்.

லகரி கொஞ்சம் போதையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*மீண்டும் எனக்குள்ளிருந்து*
*பாய்கிறது.*

*கட்டுக்கடங்காத பாய்ச்சல்.*

*கண்ணில் பட்டதெல்லாவற்றையும்*
*அள்ளி,*
*ஒரு மூலையில் ஒதுக்கிவிட்டு*
*தனியே போகிறது.*

*மிகப்பெரிய சிரிப்பொலி.*

*எதனூடோ உரசி*
*இன்னொரு மூலையில் அடிபட*
*எழுகிறது நொந்து.*

*வால் மட்டும்*
*ஒழிந்திருந்து சிரிக்கிறது*
*தலையணைக்கு அடியில்.*

*காலையில் அடைப்புக்குறியிட்டும்*
*பிடிபடாத கரு.*

*எல்லாக் குறிகளையும்*
*தகர்த்து,*
*சீரழியச் சீரழிய நகர்கிறது*
*பாய்ச்சல்.*

தேவஅபிரா
22.04.1998

இருந்தாள். குடம் ஒன்றில் கள் வைக்கப்பட்டிருந்த மேசையை அருகி, தன் கையில் இருந்த சிவப்புநிற கண்ணாடி டம்ளரை நீட்ட, அங்கிருந்த பந்தத்தின் ஒளியில் கணித மேதை சந்திரனின் முகம் தென்பட்டது.

"என்ன சந்திரன் எப்படி இருக்கீங்க?"

"ஓ! லகரி! நீங்க செவ்வாய்க் கிரகத்துல இருக்கிறதாயில்ல நான் நினைச்சுக்கிட்டிருக்கேன்."

"இன்னைக்குத்தான் பூமிக்கு வந்து சேர்ந்தோம்"

பிறகு கணிதத்தைப்பற்றிப் பேசினார்கள்.

சந்திரன் காரில் வந்திருந்தான்.

"வாங்க என் வீட்டுக்குப் போய்த் தூங்குவோம்" என்றான்.

இருவரும் அவன் வீட்டுக்குப் போனார்கள். அவன் வீடு என்று அழைப்பது தான் தங்கியிருந்த அறையைத்தான்.

அதில் ஒரு கட்டில், ஒரு மேஜை, இரண்டு நாற்காலிகள், கணக்குப்போட ஒரு கரும் பலகை, பால், பீர் போன்ற வற்றை வைக்க ஒரு பிரிட்ஜ் ஆகியவை இருந்தன.

வந்து சேர்ந்தவுடன், சாக் பீஸ் ஒன்றை எடுத்துக்கொண்டு கணக்குப்போட ஆரம்பித்து விட்டார்கள்.

லகரி கணிதத்துறை போய்க் கொண்டிருக்கும் திசையைப் பற்றிப் பேசினாள். இவர்கள் கரும் பலகையில் போட்ட கணக்குகளும் கர்நாடக இசையைப் போலத் தான் இருந்தது. எழுதப்பட்ட சூத்திரங்களில் கலைப் பொருட்களில் தென்படுவதைப் போல ஆசாபாசங்களும், மகிழ்ச்சியும், துயரங்களும் தென்பட்டன. மனிதகுலத்தை எதிர்காலத்தில் வழிநடத்த உதவப்போகும் ஓரிரு சூத்திரங்கள் எழுதப்பட்டன. பின் அவைகளை விரிவடையச்செய்தும், சுருக்கியும் வேறு சூத்திரங்கள் இயற்றப்பட்டன. இந்தக் கச்சேரியின் அசைவுகளில் வெளிப்பட்ட அழகில் இருவரின் கண்களிலும் நீர் ததும்பியது.

"எவ்வளவு அழகான சூத்திரங்கள்" என்று உணர்ச்சி வசப்பட்டு ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைத்தனர்.

பிறகு நிலாவின் வெளிச் சத்தில் மல்லிகை, ரோஜா, கற்பூரம், பட்டை, லவங்கம் போன்ற பொருட்களின் நறுமணங்களைப்பற்றிப் பேசிக் கொண்டே உடலுறவு கொண்டனர்.

ரசூல் வீடு திரும்பியபோது, தாய் கீதாவும் அம்புலிமாமாவும் பேசிக்கொண்டிருந்தார்கள். ராகவன் கடலோரத்தில் அமர்ந்து அவனது ஆபிரிக்க நண்பர் (அவருக்கும் ராகவனைப்போல் செடி கொடிகள்மீது அதிக ஆர்வம்) புல்காவிடம் சிரித்துப் பேசிக்கொண்டிருந் தான்.

"என்னடா, எப்படி இருந்தது கச்சேரி?" என்று கேட்டார் மாமா.

"தெய்வீகம்" என்றான் ரசூல்.

மறுநாள் காலை, தோசை ஒன்றைக் கிழித்து தேங்காய் சட்னியில் நனைத்துச் சாப்பிட்டுக் கொண்டே,

"நாளைக்கு எனக்குக் கல்யாணம் எல்லாரும் வந்திடுங்க" என்றாள் லகரி.

"எத்தனை மணிக்கு வீடு திரும்பினே" கேட்டாள் தாய் கீதா.

"காலை நாலரை இருக்கும்"

"எங்க கல்யாணம்?" என்று கேட்டார் அம்புலிமாமா.

"மகாபலிபுரத்தில. எல்லாரும் போறதுக்கு விமானம் ஏற்பாடு செய்திருக்கேன்" சொன்னது லகரி, கொச்சைத் தமிழில்.

"நல்ல சமாச்சாரம்" என்றார் அம்புலிமாமா.

கல்யாணத்துக்கு ஒரு ஐம்பது பேர் வந்திருப்பார்கள். தாலி கட்டப்படவில்லை. ரோஜாப்பூ மாலையை மட்டும் மணமக்கள் மாற்றிக்கொண்டார்கள். மாலை மாற்றும் சடங்கு நடை பெறும் போது கீதா தாய் என்ற முறையில் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டாள்.

"ஒவ்வொருமுறையும் லகரிக்கு கல்யாணம் நடக்கும் போது இப்படி உணர்ச்சி வசப்பட்டு டென்சன் கிரியேட் பண்ணினா என்ன அர்த்தம்" என்று கடிந்து கொண்டார், கீதாவின் அக்கா உமாதேவி.

பிறகு கல்யாணத்தில் பங்கேற்க வந்தவர்கள் அனைவருக்கும் ஒரு பஞ்சு மிட்டாயும் நன்னாரி சர்பத்தும் வழங்கப்பட்டது. பின் கணனியின் ஊடாக, கல்யாணப் பதிவுச் செயலகம் தொடர்பு கொள்ளப்பட்டது. இருவரும் கையெழுத்திட்டவுடன் கணனி கெட்டி மேளம் கொட்டியது.

பஞ்சுமிட்டாயைத் தின்று கொண்டே, வந்திருந்தவர்கள் அனைவரும் வீடு திரும்பியபின், லகரியும் சந்திரனும் அந்தமான் தீவுக்கு கணித-தேன்-நிலவுக்குப் போய்விட்டார்கள். அன்று இரவும் எப்போதும்போல் வானத்தில் நட்சத்திரங்கள் தவழ்ந்து கொண்டு தானிருந்தன. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுகனிடமிருந்து...

> தன்னைச் சாதிவெறியன் இல்லை என்று தொடர்ந்து நிரூபிக்காதவரை ஒவ்வொரு வெள்ளாடனும் சாதி வெறியனேதான் என்று தலித் கருதுவதில் தவறில்லை.
>
> - சுகன்

"அதிகார மையங்கள், நிறுவனங்கள், அமைப்புகளுக்கெதிரான தலைகீழ்ப் பக்கம் வேறை வேலையின்றி எழுதுவது."

கலகக்குரல் ❜ கட்டவிழ்ப்பு ❜ விளிம்பு •

---

பலமா? யாருக்கு?

"செற்றியிருந்து ஜொனிவோக்கர் அடித்தபடி சோவியத் யூனியனின் சரிவை ஆராய்ந்தார்கள்"

*- பார்த்திபன் (சிறுகதை)*

1. சோவியத்யூனியனின் சரிவை ஆராயக் கூடாதென்கிறானா?
2. ஜோனிவோக்கர் அடிக்கக் கூடாதென்கிறானா?
3. ஜோனிவோக்கர் அடித்தபடி சோவியத் யூனியன் சரிவை ஆராயக்கூடாதென்கிறானா?
4. செற்றியில் இருக்கக் கூடாதென்கிறானா?

எனக்கு உறுத்துகிறது, நான் சாராயம் காய்ச்சி விற்கின்ற விளிம்பு மனிதன்.

---

சரிநிகர்-146 (மே 14 - மே 27) ஈழமோகத்தின் கவிதை தொடர்பாக புகலிட தலித்தின் எதிர்ப்பு இப்படித் தொடர்கிறது.

சரிநிகர் ஆசிரியர் குழுவிற்கும் MIRJE அமைப்பிற்கும்:

"பட்டாலறிந்திடுவன் சண்டாளன் பைங்குழந்தை
சுட்டாலறிந்துவிடும் சுடு நெருப்பை!
- முட்டாள் தான்
செத்திடினும் ஒப்பான்! செய்வதெல்லாம்
சரியென் பான்
ரத்துவத்தை அந்த ரகம்!"

என்ற ஈழமோகத்தின் கவிதையில் அப்பட்டமான பச்சையான சாதிவெறி விஷம் கக்கப்பட்டுள்ளது. வெள்ளாள-பார்ப்பனியத் திமிர்த்தனத்தின் கொடூரமுகம் இதிற் தெரிகிறது. சண்டாளன் என்ற வார்த்தை இதுகாறும் தலித்துகளை இழிந்த பிறப்பாக, மோசமானவர்களாக, பயங்கரமானவர்களாக சாதிவெறியர்களால் பாவிக்கப்பட்டு வருகிறது. இக்கவிதையிலும் அப்படியே தலித்துகள் எதையும் அறிந்து கொள்ளும் அறிவு இல்லாதவர்கள், புத்தியில்லாதவர்கள், முட்டாள்கள் என்று எங்களை இழிவுபடுத்துவதாக நாங்கள் கருதுகின்றோம். உங்களைப்போல எல்லாவற்றையும் அரசியற் கண்ணோட்டத்துடன் அறிவு பூர்வமாக ஆய்வு ரீதியில் அணுகுவதற்கு எமக்கு அறிவில்லாமல் இருக்கலாம். ஆனால் இக்கவிதை எம்மை இழிவுபடுத்துகிறது என்று வாசித்துக் கொதிக்கின்ற அளவிற்கு உங்கள் தமிழ் மொழியில் எமக்கு எழுதப் படிக்க அறிவுள்ளது என்பதை அறியத்தருகிறோம். மகாபாரத காலத்தில் அரக்கு மாளிகையில் எரியூட்டப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை சண்டாளர்களுக்கு அகராதி அர்த்தம் நாங்கள் எரிக்கப்பட வேண்டியவர்கள். தமிழ் நாசிகளின் கவிதை தொடர்பாக பல்வேறு வகையில் எமது எதிர்ப்புத் தொடரும். இதற்கான முழுப்பொறுப்பையும் சரிநிகர் ஆசிரியர்குழு, MIRJE இரண்டும் எடுக்கட்டும். யார் கேட்டார் உம்மிடம் நியாயத்தை!

---

"நாமும் பேசுவோமே தலித்தியம்" என பார்வை பார்த்துச் சிறப்பிதழ் கண்டு நூல் அறிமுகம் செய்து விவாதித்து முடித்தாயிற்று. நூலின் தலைப்புக் குறித்து யாருக்கும் எந்தச் சந்தேகமும் வந்ததாகக் காணோம் - அடநாய்களா!

---

## பாதுகாப்பு

**முல்லைதரன் (இலங்கை)**

**துப்பாக்கிச் சன்னங்கள்**
**துளைத்து,**
**அந்தரத்தில் தொங்கிய**
**"கொடி"யை அவிழ்த்துப் பார்த்தால்**
**இப்படி இருந்தது.**
**"இது பாதுகாப்பான இடம்"**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கியச்சந்திப்பு





இலக்கியச்சந்திப்புத் தொடரின் 25வது அமர்வு ஜேர்மனியின் பிராங்பேர்ட் (FRANKFURT) நகரத்தில் நடைபெற்றது. 98, மே 30-31 ஆகிய இரு தினங்கள் நடைபெற்ற இச்சந்திப்பில், வழமைபோலவே பல்வேறு நாடுகளிலிருந்தும் நூறுபேர் வரையில் வந்து கலந்து கொண்டனர். மேலும் இலங்கையில் இருந்து 'சரிநிகர்' பத்திரிகையின் ஆசிரியர்களுள் ஒருவரான சிவகுமார், மற்றும் கவிஞர் இளைய அப்துல்லாஹ் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொள்வதற்காகவே வருகை தந்து பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கலந்து கொண்டோரின் சுய அறிமுகங்களுடன் சந்திப்பு ஆரம்பமாகியது. எனினும், இடையில் நா. கண்ணனின் எழுத்துக்கள் மீதான விமர்சனமாக விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரம் பலத்த சர்ச்சைக்குள்ளாகி, அது தொடர்பான ஆழ்ந்த விவாதம் நிகழ்த்தப்பட்டது. இவ் விவாதத்தைத் தொடர்ந்து, ஒழுங்குபடுத்தப்பட்ட நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

முதல் நாள் நிகழ்ச்சியாக,

★ பிரேமிள் அவர்களை நினைவு கூருமுகமாக, அவரின் எழுத்










தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







துக்கள், இலக்கிய வாழ்வுபற்றி கவிஞர் இரா. ரஜீன்குமார் எடுத்துரைத்தார்.

★ TWAN (லண்டன்) இனால் வெளியிடப்பட்ட 'இன்னுமொரு காலடி' அறிமுக விமர்சன உரையை சி. புஸ்பராஜா நிகழ்த்தினார்.

★ கவிஞர் சுகன், தவிர்த்துத் தொகுத்த 'இருள் வெளி'யை ஓவியர் கிருஷ்ணராஜா வெளியிட்டு வைத்தார்.

★ பிரான்ஸில் இருந்து அண்மையில் புதிதாக வெளிவந்த 'புன்னகை', 'எக்ஸில்' ஆகிய இரு சஞ்சிகைகளையும் அறிமுகம் செய்து வைத்து பரராஜசிங்கம் பேசினார்.

★ 'புகலிட இலக்கியம் புலம்பல் இலக்கியமா?' என்பது பற்றி கலைச்செல்வன் உரையாற்றினார்.

★ புகலிடத்தில் தன்னார்வக் குழுக்களின் செயற்பாடு குறித்து அசோக் உரையாற்றினார்.

★ சிவகுமார் வெகுஜன தொடர் புசாதனம்பற்றி உரையாற்றினார்.

★ இறுதி நிகழ்ச்சியாக தீர்க்க வாசகனின் 'ஒத்திகை' என்னும் நாடகம் எக்ஸில் நண்பர்களினால் மேடையேற்றப்பட்டது.

மே 31ம் திகதி இரண்டாவது நாள் நிகழ்ச்சியாக,

★ மணி சுப்ராயனுடன் ரினோவும் தர்ஷனாவும் காலம் என்பது பற்றி diapoக்களுடன் விளக்கமளித்தார்கள்.

★ டொமினிக் ஜீவாவின் சிறுகதைகள் என்னும் தலைப்பில் இளைய அப்துல்லாஹ் விமர்சன உரை நிகழ்த்தினார்.

★ நா. கண்ணன் அவர்கள் வாழ்வும் கருத்தும் குறித்து, James Campell பற்றி ஒரு documentary படத்துடன் அவர்குறித்த பன்முகக் குறிப்பு ள் தொடர்பாக உரையாற்றினார்.

வழமைபோலவே, எல்லா உரைகளின்போதும் கலந்து கொண்ட அனைவரும் தமது கருத்துக்களை தெளிவாக்கும் சந்தர்ப்பமாக கலந்துரையாடல்கள் மிக ஆரோக்கிய மாக நடைபெற்றது.

---

அடுத்த இலக்கியச் சந்திப்பு செப்டெம்பர் மாதமளவில் கோ்ணே (HERNE), ஜேர்மனியில் நடைபெறவுள்ளது.

---









தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஓவியம்: Bosch
'பிசாசுகள்', 1487
'நன்றி' The Great Aatists(Vol. 32)

'எக்ஸில்' பிரதிகள் கிடைக்கப்பெற்றோர், கிடைத்ததையிட்டு எமக்கு உறுதி செய்யின், தொடர்ந்து நீங்கள் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு உதவியாக இருக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஓவியம் : கருணா

# கேள்

கேள்:
எப்படிப் புணர்வது என்பதைப்
பாம்புகளிடம். எப்படிப் புலர்வது என்பதைக்
காலையிடம். பொறுமை என்பது என்ன
என்பதை மரங்களிடம். கனவுகளுக்கு
வண்ணங்கள் உண்டா என்பதைத் தூக்கத்தில்
நடப்பவர்களிடம். கண்ணீர்த்துளிகள் சிறைக்கூடங்களாக
மாறியது எப்படி என்பதை
அகதிகளிடம். பயம் என்பது என்ன என்பதை
நடு இரவில் இந்த நகரில் நடக்க நேர்கிற
கறுப்புத் தோல் மனிதர்களிடமும்
பெண்களிடமும். மோகம் முப்பது நாள்கள்தானா
என்பதை மூக்குத்தி அணிந்த காதலர்களிடம்.
முழுநிலவில் பாலத்தின் கீழ் உறைந்த பாற்கடலின்
பாடும் மீன்கள் எங்கே போய் விட்டன
என்பதைக் கார்காலத்திடம். மொழியின்
தனிமையிலிருந்து பிறப்பது என்ன என்பதைத்
திசை தொலையப் புலம் பெயர்ந்தவர்களிடம்.
துயரத்தின் சாறு பிழிந்த தனிமை எப்படியிருக்கும்
என்பதை என் பனிப்பாறையுள் நெருப்பின்
உயிர்ச் சுவட்டை எறிந்தவளிடம். அவளிடம்
இவளிடம். இரவின் கடைசி ரயிலும் போய்விட்ட
பிற்பாடு. தண்டவாளங்களும் குளிரில் துடித்துப்
பிளக்க ஒற்றைச் சிறகுடன் கையில் ஒற்றைப்
பூவுடன் காத்திருப்பது எப்படி என்பதை
என்னிடம்
கேள்.

சேரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


With Compliments From

YALINI CENTER
SHALINI RESTAURANT
YALINI COM CENTER

**Yalini center**
2 Rue Perdonnet
75010 Paris
Tel: 01-42 09 45 65
Mo: La Chapelle
ou
Gare du Nord

**Shalini Restaurant**
23 Rue Cail
75010 Paris
Tel: 01-40 34 20 72
Mo: La Chapelle
ou
Gare du Nord

**Yalini com center**
2 Rue Perdonnet
75010 Paris
Tel: 01-42 09 45 65
Mo: La Chapelle
ou
Gare du Nord


EXIL, chez R. INPAVALLI, 94 Rue de Lachapelle, 75018 PARIS, FRANCE

N° d'enreg. : 13022670

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்